2022 ජූලි 25
2022 யூலை 25
25th July 2022

NAOSL

# 2018 අංක 19 දරණ ජාතික විගණන පනතේ 14 වන වගන්තිය ප්‍රකාරව පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරනු ලබන විගණකාධිපති ත්‍රෛවාර්ෂික වාර්තාව

## 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கை

# Triennial Report of the Auditor General presented in parliament in terms of Section 14 of the National Audit Act, No. 19 of 2018

එකොළොස් වන කාණ්ඩය - 03
பதினோராவது தொகுதி - 03
Eleventh Volume - 03

රාජ්‍ය අරමුදල්
அரசாங்க நிதியங்கள்
Government Funds

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE



**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூவாண்டு அறிக்கை (2018, 2019, 2020)**

---

**நிதியங்கள்**


| தொடர் இல. | நிதியத்தின் பெயர் | பக்க இல. |
|---|---|---|
| | பொழிப்பு | 4-5 |
| 01 | பல்கலைக்கழக சேமலாப நிதியம் | 6-8 |
| 02 | அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியம் | 9-10 |
| 03 | சிறைக்கைதிகள் நலன்புரி நிதியம் | 11-15 |
| 04 | நீதி உட்கட்டமைப்பு பேணுகை நம்பிக்கைப்பொறுப்பு | 16-18 |
| 05 | மிருகக்காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம் | 19-22 |
| 06 | வன விலங்குகள் பாதுகாப்பு நிதியம் | 23-29 |
| 07 | சுற்றுலா அபிவிருத்தி நிதியம் | 30-32 |
| 08 | கரையோர பாதுகாப்பு வெகுமதி நிதியம் | 33-34 |
| 09 | இந்து கலாச்சார நிதியம் | 35-36 |
| 10 | பொலிஸ் வெகுமதி நிதியம் | 37-39 |
| 11 | உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியம் | 40-41 |
| 12 | தேசிய பாதுகாப்பு நிதியம் | 42-44 |
| 13 | அபி வெனுவென் அபி நிதியம் | 45-47 |
| 14 | நிர்மாண உத்தரவாத நிதியம் | 48-52 |
| 15 | தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம் | 53-61 |
| 16 | கம்பனி நிதியம் | 62-66 |
| 17 | புலமைச் சொத்து நிதியம் | 67-70 |
| 18 | தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் | 71-83 |
| 19 | சுங்க மேலதிக நேர வேலை, கப்பல் சரக்குகளை பரீட்சித்தல் கட்டணம் மற்றும் சுங்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியம் | 84-87 |

| | | |
|---|---|---|
| 20 | சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியம் | 88-92 |
| 21 | சமஸ்த லங்கா சாசனாரக்சக நிதியம் | 93-97 |
| 22 | உரித்துக் காப்புறுதி நிதியம் | 98-100 |
| 23 | கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பு | 101-102 |
| 24 | சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியம் | 103-107 |
| 25 | சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியம் | 108-111 |
| 26 | கமநல அபிவிருத்தி நிதியம் | 112-113 |
| 27 | மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 114-120 |
| 28 | திரைப்பட கலைஞர்களுக்கும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு | 121-128 |
| 29 | வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியம் (மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்) | 129-131 |
| 30 | விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 132-144 |
| 31 | கூட்டுறவு மிகை நிதியம் | 145-148 |
| 32 | கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் | 149-153 |
| 33 | சிரம வாசனா நிதியம் | 154-159 |
| 34 | தேசிய விளையாட்டு நிதியம் | 160-166 |
| 35 | மீன்பிடி வெகுமதி நிதியம் | 167-177 |
| 36 | பேலியகொடை மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பு | 178-190 |
| 37 | ஊழியர் சேமலாப நிதியம் | 191-216 |
| 38 | உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியம் | 217-222 |
| 39 | ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம் | 223-227 |
| 40 | அரச சேவைகள் நலன்புரி நிதியம் | 228-231 |
| 41 | இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டம் | 232-233 |
| 42 | கற்புலனற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம் | 234-235 |
| 43 | தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியம் | 236-237 |

| | | |
|---|---|---|
| 44 | துருசவிய நிதியம் | 238-241 |
| 45 | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் புகை பரீட்சித்தல் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | 242-249 |
| 46 | COVID 19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியம் | 250-254 |
| 47 | எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியம் | 255-267 |
| 48 | சனாதிபதி நிதியம் | 268-277 |
| 49 | இலங்கை மின்சார சபையின் நலன்புரி நிதியம் | 278-283 |

## பொழிப்பு

-----------------------------------------------

ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைந்துகொள்ளும் நோக்கில் அறுபத்து இரண்டு நியதிச்சட்ட மற்றும் நியதிச்சட்டமல்லாத நிதியங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன் அந் நிதியங்கள் அனைத்தும் அமைச்சு, திணைக்களம் அல்லது பொதுக் கூட்டுத்தாபனத்தின் அதிகார எல்லையின் கீழ் செயற்படுகின்றன. இந் நிதியங்களில் 55 மாத்திரமே ஒரு சட்டம், அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் கட்டளைச் சட்டங்களின் கீழ் நிறுவப்பட்டுள்ளதுடன் 07 ஏனைய நிதியங்கள் நம்பிக்கைப்பொறுப்பு உரித்துறுதியின் கீழ் நிறுவப்பட்டுள்ளன.

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியின் மூலம் சேர்க்கப்பட்ட நிதிப் பிரமாணம் 876(3) இன் பிரகாரம் நியதிச்சட்டமல்லாத நிதியங்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்து செய்யப்பட வேண்டும் என்றும் அவற்றின் காசு மீதிகள் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதிலும் 2020 ஆம் ஆண்டில் நீதி உட்கட்டமைப்பு பேணுகை நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தை மாத்திரம் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், குறித்த பந்தியின் பிரகாரம் நியதிச்சட்டமல்லாத நிதியத்தை செயற்படுத்துவதற்கு நியாயமான காரணங்கள் இருந்தால் அத்தகைய நிதியங்களை பாராளுமன்ற சட்டத்தின் மூலம் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டின் போது மீதமுள்ள 06 நம்பிக்கைப்பொறுப்புக்கள் தொடர்பாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இந் நிதியங்களில் 08 நிதியங்களின் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்குரிய நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் இந்த 54 சமர்ப்பிக்கப்பட்ட நிதியங்களில் 4 நிதியங்கள் தொடர்பாக போதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 02 ஏனைய நிதியங்கள் 2020 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டிருந்தன. மேலும், அந் நிதியங்களில் ஒன்று இலங்கை மின்சார சபையின் இறுதி நிதிக்கூற்றுக்களுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் செயற்படுத்தப்படுகின்றது. கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்ட நிதியங்களின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் கீழே தொகுக்கப்பட்டுள்ளது.

| | முனைப்பழியற்ற அபிப்பிராயம் (தெளிவான அபிப்பிராயம்) | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | மறுப்பு அபிப்பிராயம் | பாதகமான அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| 2018 | 14 | 31 | 04 | 02 |
| 2019 | 12 | 32 | 04 | 03 |
| 2020 | 13 | 36 | 04 | 00 |

எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியம் மற்றும் கொவிட் - 19 சுகாதார பராமரிப்பு மற்றும் சமூக பாதுகாப்பு நிதியம் ஆகியவை 2020 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன.

2020.12.31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட 54 நிதியங்களில் 52 நிதியங்களிற்குரிய சொத்துகளின் மீதி ரூபா 361,871,668,905 கூட்டுமொத்தமாகும். நீதி உட்கட்டமைப்பு பேணுகை நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தை கலைப்பதற்கும் பொது திறைசேரிக்கு காசு மீதியை தீர்ப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், இலங்கை மின்சார சபையின் ஓய்வூதிய நிதியமானது சபையின் கணக்குகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டது.

நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட 37 நிதியங்களில் காசு மீதிகள் காணப்பட்டதுடன் திறைசேரியில் பேணப்பட்ட பொது வைப்புக் கணக்கொன்றில் 14 நிதியங்களின் மீதிகள் சேகரிக்கப்பட்டிருந்தன. மேலும், ஓய்வூதியத் திணைக்களத்தில் நிறுவப்பட்ட 03 நிதியங்கள் தொடர்பாக சேகரிக்கப்பட்ட பங்களிப்புக்கள் ஓய்வூதியத் திணைக்களத்தில் உள்ள பொது வைப்புக் கணக்கிற்குக் கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பங்களிப்புக்கள் பொதுக் கணக்கின் மூலம் செலுத்தப்படுகின்றன.

## 01. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் - பல்கலைக்கழக சேமலாப நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்
2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்
2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 1982 பெப்ரவரி 02 ஆம் திகதிய 155 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் உயர்கல்வி நிறுவனங்களில் பணிபுரிந்து சேவை முடிவடைந்த ஊழியர்களின் சேமலாப நிதிய மீதியை விடுவிப்பது தொடர்பாக தாமதமான காலப்பகுதிக்கு செலுத்தப்பட்ட வட்டியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் தாமதமான காலப்பகுதிக்கு செலுத்தப்பட்ட மொத்த வட்டி பெறுமதி இனங்காணப்பட முடியாதிருந்தது. | சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரமும் சட்டத்தின் 95 ஆம் பிரிவின் பிரகாரமும் தாமதத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களை கண்டறிந்து, தாமதத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் தாமதத்திற்கான வட்டிக்கான தண்டப்பணத்தை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காலதாமதத்திற்கான காரணம் உத்தியோகத்தர்களின் தவறுகள் என தீர்மானிப்பது சாத்தியமற்றதாக காணப்படுகின்றது. ஆனால் நிர்வாக நடைமுறைக்கு (கடந்த கால தரவு சேகரிப்பு) செலவிடப்பட்ட காலத்தின் காரணமாக இருக்கலாம். அதன் பிரகாரம் இவ்விடயம் தொடர்பில் மேலும் கலந்துரையாடி முறையான தீர்வை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தொடர் காலதாமதங்கள் இதுவரை தவிர்க்கப்பட்டிருக்காததுடன் 2021 திசெம்பர் 29 இல் நடைபெற்ற ஆணைக்குழுவில் 155 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள “பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்” என்ற பிரிவைத் தவிர்த்து புதிய சுற்றறிக்கையை வெளியிடுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | உயர் கல்வி நிறுவனங்களினால் ஆணைக்குழுவின் செயலாளருக்கு | உத்தியோகத்தர்களின் வினைதிறனின்மை காரணமாக | தாமதத்திற்கான காரணம் அதிகாரிகளின் தவறு மாத்திரமன்றி | தொடர் காலதாமதங்கள் இதுவரை தவிர்க்கப்பட்டிருக்காததுடன் 2021 திசெம்பர் 29 இல் நடைபெற்ற |

| | | | | |
|---|---|---|---|---|
| | விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது நிறுவன பகுதியின் தவறொன்று காரணமாக 02 மாதங்களுக்கு மேற்பட்ட தாமதம் காரணமாக பங்களிப்பாளருக்கு வட்டி செலுத்தப்பட வேண்டியிருந்ததால் குறித்த வட்டியானது அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தரிற்கான தண்டப்பணமாக விதிக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தை சமர்ப்பித்தமை மீது பங்களிப்பாளருக்கான கொடுப்பனவு திகதிக்கு ஒரு மாதம் முன்னர் வரை வட்டி கணிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறித்த தாமதங்களிற்கு பொறுப்புவாய்ந்த அதிகாரிகளை இனங்கண்டு தண்டப்பணம் விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்படுகின்ற தாமதங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தகவல்களை வழங்குவதற்கும் சேகரிப்பதற்கும் எடுக்கும் காலப்பகுதியின் மீது தங்கியுள்ளது என்பது பல்கலைக்கழக துணை வேந்தர்களின் அபிப்பிராயமாகும் அதன் பிரகாரம் குறித்த சுற்றறிக்கையில் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | ஆணைக்குழுவில் 155 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ‘‘பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்’’ என்ற பிரிவைத் தவிர்த்து புதிய சுற்றறிக்கையை வெளியிடுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2001 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்ட போதிலும் உரிமை கோரப்படாததன் காரணமாக இரத்துச் செய்யப்பட்ட 473 | உரிமை கோரப்படாத மீதிகள் தொடர்பாக உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தி அவற்றை தீர்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட | செல்லுபடியாகாத காசோலைகளுக்கான காரணம் அங்கத்தவரினால் வங்கிக் கணக்கு விபரங்கள் முறையாக சமர்ப்பிக்கப்படாதமை ஆகும். இது தொடர்பாக | 2022 பெப்ரவரி 01 வரையிலும் இந் நிதிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| காசோலைகளிற்குரிய ரூபா 48,891,896 தொகை 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமை கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும் அத் தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு முகாமைத்துவம் போதுமான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | வேண்டும். | பல்கலைக்கழக சேமலாப நிதிய கண்காணிப்பு குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் உரிய பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது . |

## 02. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் - அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | ----------------- | ------------------ | -------------------- | ---------------------- |
| (அ) | 1995 இன் 35 ஆம் இலக்க அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 20(1)(அ) மற்றும் 37 ஆம் பிரிவுகளின் பிரகாரம் வியபாரத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து அளவீட்டு உபகரணங்களும் வருடாந்தம் சரிபார்க்கப்பட வேண்டிய போதிலும், அந்த அனைத்து உபகரணங்களும் சரிபார்க்கப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்துவதற்கு சரியான பொறிமுறையொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியத்தினுள் சரியான பொறிமுறையொன்று நிறுவப்பட வேண்டும். | வியாபார தரவுத்தளத்தை உருவாக்கும் நோக்கம் 2020 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | ஆரம்ப செயற்திட்டமொன்றாக கேகாலை மாவட்ட அலுவலகத்தில் வியாபார தரவுத்தளம் பேணப்படுகிறது. மாவட்ட அலுவலகங்களின் தகவல் தரவுத்தளத்தை தலைமை அலுவலகத்துடன் கட்டுப்படுத்தும் செயற்திட்டம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து அளவீட்டு கருவிகளும் சரிபார்க்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான பொறிமுறையை நிறுவுதல் தொடங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டிற்கான | கணக்காய்வு மற்றும் | ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு | 2021 ஆம் ஆண்டிலும் ஒரு கணக்காய்வு |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் திட்டமிட்டவாறு நடாத்தப்பட்டிருக்காததால் நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவக் குழு கூட்டங்கள் திட்டமிட்டவாறு நடாத்தப்பட வேண்டும். | செய்யப்பட்ட உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு மீண்டும் சேவை நீட்டிப்பிற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. | மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. |
| (இ) | நிதியத்தின் நடைமுறைக் கணக்கில் மீளாய்வாண்டின் சனவரி தொடக்கம் திசெம்பர் வரை ரூபா 219 மில்லியன் தொடக்கம் ரூபா 426 மில்லியன் வரையான வீச்சில் மீதி பேணப்பட்டிருந்த போதிலும் இம் மீதியானது நிதியத்தின் மாதாந்த தேவைப்பாட்டுடன் ஒப்பிடும் போது 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட மிகையொன்றாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது. இம் மிகையினை மூதலீடு செய்து நிதியத்திற்கு தேவையான வட்டி வருமானத்தினை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்த போதிலும் முகாமைத்துவத்தினால் இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நடைமுறைக் கணக்கின் மேலதிக மீதியினை முதலீடு செய்வதன் மூலம் வட்டி வருமானம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | சாதாரண சேமிப்பு கணக்கிற்கு நிதியத்தின் நடைமுறைக் கணக்கின் காசு மீதியை மாற்றுவதன் மூலம் நிதி முகாமைத்துவம் மேற்கொள்ளப்படுகின்றது. | அதன் பிரகாரம் 2020 யூன் 29 இல் ஆரம்பிக்கப்பட்ட சாதாரண சேமிப்பு கணக்கில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 255 மில்லியன் மீதி தற்போது காணப்படுகின்றதுடன் வட்டியாக ரூபா 7,149,705 தொகை பெறப்பட்டிருந்தது. எனினும் ஏனைய செயற்திறனான முதலீடுகளை மேற்கொள்ளும் பொருட்டு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 03. கணக்காய்வுக்குட்பது நிறுவனத்தின் பெயர் - சிறைக்கைதிகள் நலன்புரி நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | ---------------------- | ----------------- | --------------------- | ----------------------- |
| (அ) | தேசிய அரச பேரவையின் (1979 இன் 54 ஆம் இலக்க) சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்தின் (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 4(அ) பிரிவின் பிரகாரம் பொது வைப்புக் கணக்கு மற்றும் காப்பகங்களில் காணப்பட்ட ஒரு வருடத்திற்கு குறையாத காலத்தினுள் உரித்து கோரப்படாத ரூபா 4,554,557 தொகையான உரித்துக் கோரப்படாத வேதனங்கள் மற்றும் ஆளணியின் பணம் 2020 திசெம்பர் 31 வரையிலும் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தின் பிராகரம் செயற்பட வேண்டும். | பொது வைப்புக் கணக்கில் உள்ள ஆளணியின் பணம் 2021 நவம்பர் 30 இற்கு முன்னர் சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்திற்கு செலவு வைக்கப்படும். | பொது வைப்புக் கணக்கில் தற்போதும் மீதி காணப்படுகின்றது. |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 பந்தியில் | வருமான மூலங்களை அதிகரித்துக்கொள்ளல் அல்லது நிதியதத்தினை | இது தொடர்பாக தொடர்புடைய உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல்கள் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 876 இன் 2(ஆ) பிரிவின் பிரகாரம் நிதியத்தினை தொடர்ந்தும் நடாத்திச் செல்லுதல் அவசியமற்றது அல்லது எதிர்பார்க்கக்கப்பட்ட நோக்கங்கள் அரசாங்க பாதீட்டை பயன்படுத்தி அடைந்துகொள்ளப்பட முடியும் என காணக்கூடிய போது அந்த நிதியத்தின் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந் நிதியத்தின் மீதியானது நலன்புரி நடவடிக்கைகளுக்கு போதுமானதாக இல்லாதிருந்தமையால் திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் நிதி நலன்புரி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதி வரையிலும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்ந்தும் நடாத்திச் செல்லல் தேவையற்றது எனின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். | நடைபெற்றதுடன் நிதியத்தின் நடவடிக்கைகளை இறுதியாக்குவதற்கு அல்லது வருமான மூலங்களை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (இ) | நிதியத்தின் முன்னேற்றத்தினை அளவீடு செய்வதற்காக செயலாற்றல் குறிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்காததுடன் சிறைச்சாலைகளில் | நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக முன்கூட்டிய திட்டமொன்றும் அத் திட்டத்தின் பிரகாரம் செயலாற்றலை | செயலாற்றல் குறிகாட்டிகளை அறிமுகப்படுத்துமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் (புனர்வாழ்வு) இற்கு அறிவுரை | முன்கூட்டிய திட்டமிடல் மற்றும் செயலாற்றல் குறிகாட்டிகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் செயன்முன்னேற்றத்தை அளவிடுதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடாத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களின் தன்மை, பங்குபற்ற வேண்டிய சிறைக்கைதிகள்/ சந்தேகநபர்களின் எண்ணிக்கை, செலவிடப்பட வேண்டிய கிரயம் மற்றும் முன்னைய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அத் திட்டங்களின் பிரகாரம் செயன்முன்னேற்றம் அறிக்கையிடப்படாதமை ஆகிய காரணங்களால் நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பிலான நிதி மற்றும் பௌதீக செயலாற்றலை மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது. | மதிப்பீடு செய்வதற்கான செயலாற்றல் குறிகாட்டிகளும் அறிமுகப்படுத்தப் பட்டு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட் டு செயன்முன்னேற்ற ம் அறிக்கையிடப்பட வேண்டும். | வழங்குவதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது. | என்பன தற்போதும் மேற்கொள்ளப்படவில் லை. |
| (ஈ) | சிறைக்கைதிகளை விடுவித்த பின்னர் புனர்வாழ்வுக்கு உதவுவதற்கு பின்னர் பொறுப்பேற்கும் சேவைகளுக்காக நிதியத்தால் நிதியேற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை ல. | பின்னர் பொறுப்பேற்கும் சேவைகளுக்காக பொருத்தமான வேலைத்திட்டமெ ான்று அமுல்ப்படுத்தப்ப ட வேண்டும். | போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. | குறைபாடுகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. |
| (உ) | சிறைக்கைதிகளுக்கான நலன்புரி நிதியமொன்றினை தாபித்தல், சிறைக்கைதிகளின் பொது நலனுக்காக அதிலிருந்து செலவினம் மேற்கொள்ளல் மற்றும் அதனுடன் தொடர்புடைய | அதிகாரச்சட்டத்தி ன் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ன. | 2021 ஆம் ஆண்டிலும் சிறைக்கைதிகளின் நலன்புரி நிகழச்சித்திட்டங்களிற் காக நிதியத்திலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு தேசிய அரச பேரவையால் 1973 இன் 18 ஆம் இலக்க சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைக்கைதிகளின் நலன்புரி நிதிய அதிகாரச்சட்டம் உருவாக்கப்பட்டிருந்தது. எனினும் 2020 ஆம் ஆண்டின் போது சிறைக்கைதிகளின் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக நிதியத்திலிருந்து எதுவித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஊ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) இன் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து 02 மாதங்களினுள் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளுடன் செயலாற்றல் அறிக்கையொன்று அரச நிதித் திணைக்களத்திற்கான பிரதிகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டுக்குரிய செயலாற்றல் அறிக்கைகள் உரிய முறையில் தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களின் பிரதிகளுடன் சேர்த்து அரச நிதித் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | குறைபாடுகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2020 ஆம் ஆண்டிற்கான நிதியத்தின் நிதிக்கூற்றுகளுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (எ) | 2006 திசெம்பர் 26 ஆம் திகதிய பிஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்கான நிதியத்தின் வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டு உரிய அங்கீகாரங்களுடன் செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகம் மற்றும் அரச நிதிப் பணிப்பாளர் நாயகம் ஆகியோரிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2022 ஆம் ஆண்டிற்காக நிதியத்தில் போதுமான மீதி தற்போது காணப்படுகின்றதுடன் பாதீட்டை தயாரிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | குறைபாடுகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 04. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் - நீதி உட்கட்டமைப்பு பேணுகை நம்பிக்கைப்பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்
2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்
2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பிஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.2(ஆ) பந்தியின் பிரகாரம் தொடர்ந்து பேணுவதற்கு தேவைப்படாத நம்பிக்கைப்பொறுப்பின் மேலதிக நிதிகளை திரட்டு நிதியத்திற்கு உடனடியாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நம்பிக்கைப்பொறுப்பின் வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 3,786,197 மீதியொன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனைத்து பொறுப்புக்களையும் செலுத்திய பின்னர் 2020.12.31 இல் உள்ளவாறு காசுப் புத்தகத்தின் மீதியாக இருந்த ரூபா 3,373,977.53 தொகை 2021 மார்ச் 09 இல் பொது திறைசேரியின் பிரதி செயலாளரின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. | நம்பிக்கைப்பொறுப்பு 2020.12.31 இல் கலைக்கப்பட்டது. |
| (ஆ) | 2018 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் இந் | நிதியத்தைக் கலைத்தல் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன் | நம்பிக்கைப்பொறுப்பு 2020.12.31 இல் கலைக்கப்பட்டது. | நம்பிக்கைப்பொறுப்பு 2020.12.31 இல் கலைக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நம்பிக்கைப் பொறுப்பை கலைப்பதற்காக 2017 ஆகஸ்ட் 09 இல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நம்பிக்கைப்பொறுப்பு உடனடியாக கலைக்கப்பட வேண்டிய போதிலும் நம்பிக்கைப்பொறுப்பை கலைப்பதற்கு 2020 யூன் 23 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | | |
| (இ) | 2007 யூலை 17 ஆம் திகதிய நம்பிக்கைப்பொறுப்பு உரித்துறுதியின் 1(அ) பிரிவின் பிரகாரம் நீதிமன்ற விடுதிகள், பதிவு அறைகள், தயாரிப்பு அறைகள், நீதிபதிகளின் அறைகள், நீதிபதிகளின் பதிவாளர் அலுவலக நூலகங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப வசதிகள் மற்றும் | நம்பிக்கைப்பொறுப்பு உரித்துறுதியின் 1(அ) பிரிவின் பிரகாரம் பிரதான நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீதிமன்ற வலயங்களால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் பிரகாரம் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் வழங்கப்படும். | நம்பிக்கைப்பொறுப்பு 2020.12.31 இல் கலைக்கப்பட்டது. |

தளபாடங்களிற்கான நிதிகளின் ஏற்பாடு ஆகியவற்றை மேம்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இதன் முக்கிய செயற்பாடுகளாகும். எனினும், அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் 2018 ஆம் ஆண்டில் கொழும்பு நீதிமன்ற வலயத்திற்கான அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,582,550 தொகை செலவிடப்பட்டுள்ளது. மேலும், நம்பிக்கைப்பொறுப்பை கலைப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும், 08 நீதிமன்ற வலயங்களுக்கான அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு 2019 ஆம் ஆண்டிலும் ரூபா 5,453,741 தொகை செலவிடப்பட்டுள்ளது.

## 05. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் - மிருகக்காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ரூபா 9,584,223 பெறுமதியான நான்கு (04) மோட்டார் வாகனங்கள் 2014 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன. | வாகனங்களை திருத்தம் செய்வதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | i. இவ் வாகனங்களில் திருத்தம் செய்யக்கூடிய வாகனங்களை திருத்தம் செய்தல்<br>ii. கைதவிர்ப்பு செய்யப்பட வேண்டிய வாகனங்களை வாகன கைதவிர்ப்புக் குழுவின் பரிந்துரைக்காக அனுப்புதல் | 2022 சனவரி வரையிலும் நான்கு மோட்டார் வாகனங்களும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. |
| (ஆ) | ரிதியகம சபரி பூங்காவில் ரூபா 7.2 மில்லியன் கிரயத்திலான 06 கிராமிய விற்பனை நிலையங்களின் நிர்மாணம் 2018 மார்ச் 22 அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 யூன் வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு இவ் விற்பனை நிலையங்களை இவ் விற்பனை நிலையங்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 2022 சனவரி வரையிலும் இக் கட்டிடங்கள் விளைவற்றிருந்தன. |
| (இ) | நிதியத்தின் 2020 ஆம் ஆண்டிற்கான | வேறுபாட்டிற்கான காரணங்கள் | ஒவ்வொரு ஆண்டிலும் ஏற்பட்டுள்ள | திறைசேரி பொது வைப்புக் கணக்கிற்கும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் திறைசேரி குறிப்புக்களின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளை திறைசேரி வைப்புக் கணக்கின் மீதியுடன் ஒப்பீடு செய்யும் போது முறையே ரூபா 33,801,932 மற்றும் ரூபா 33,230,026 தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | இனங்காணப்பட்டு சீர்செய்யப்பட வேண்டும். | வேறுபாடுகள் தொடர்பாக வருடாந்த நிதிக் கூற்றுக்களின் மூலம் இணக்கக் கூற்றொன்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியத்தின் மீதிக்கும் இடையே வேறுபாடொன்று தற்போதும் காணப்படுகின்றது. |
| (ஈ) | உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் காரணமாக மிருகக்காட்சிசாலைகளில் நடாத்திச் செல்லப்படுகின்ற விற்பனை நிலையங்கள் மூடப்பட்டிருந்த போது 2019 ஏப்ரல் முதல் யூன் வரையான காலப்பகுதிகளுக்குரிய கட்டணங்களை அறவீடு செய்வதற்காக தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் என மிருகக்காட்சிசாலை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2019 செப்தெம்பர் 09 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அவ்வாறான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் | அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக மூன்றாவது நினைவூட்டலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் நிலுவைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | விளைவாக ரூபா 4,782,701 தொகையான நிலுவை வாடகை 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | | |
| (உ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.6.1(அ)(ii) வழிகாட்டலின் பிரகாரம் போட்டித்தன்மை மேம்படுத்தப்பட முடியும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் குறிப்புரைகளை மீளாய்வு செய்தல் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பணிப் பொறுப்பாக உள்ள போதிலும் வெளிநாட்டு பறவைகளை கொள்வனவு செய்வதற்கான பெறுகையை திட்டமிடும் போது சகல பறவைகளும் வெளிநாட்டு பறவைகளாக இருந்தமை மற்றும் இலங்கையில் உரிய வழங்கலை பூர்த்தி செய்யக்கூடிய வழங்குனர்களின் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கை போன்ற காரணிகளினால் வரையறுக்கப்பட்ட உள்நாட்டு | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் அம்பாந்தோட்டை சபரி பூங்காவில் இந்தப் பறவைகளை காட்சிப்படுத்துவதற்கு கூண்டுகள் கட்டப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போட்டித்தன்மையின் சாத்தயத்தன்மையை தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு கவனத்தில் கொண்டிருக்கவில்லை. | | | |
| (ஊ) | வெளிநாட்டு பறவைகளை கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகளின் போது “ஒரே வழங்குனரால் 32 வகையான பறவைகளும் வழங்கப்பட வேண்டும்.” என்ற நிபந்தனை விதிக்கப்பட்டு குறிப்புரைகள் குறிப்பிடப்பட்டதன் காரணமாக கேள்வி சமர்ப்பித்த மூன்று வழங்குனர்களில் இரண்டு வழங்குனர்களால் சில பறவைகளுக்காக மாத்திரம் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையினால் அவை நிராகரிக்கப்பட்டிருந்தன. அவ்வாறே நிராகரிக்கப்பட்ட வழங்குனர்களிடம் இருந்து சமர்ப்பிக்கப்பட்ட விலையினை விட அதிக விலையில் தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடம் இருந்து 53 பறவைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 17,860,085 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் அம்பாந்தோட்டை சபரி பூங்காவில் இந்தப் பறவைகளை காட்சிப்படுத்துவதற்கு கூண்டுகள் கட்டப்பட்டிருக்கவில்லை. |

## 06. கணக்காய்வுக்குட்பட்டு நிறுவனத்தின் பெயர் - வன விலங்குகள் பாதுகாப்பு நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | -------------- | ---------------------- | ----------------- | ------------------- |
| (அ) | 1995 இன் 35 ஆம் இலக்க அளவுக்கூறுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் 37 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுத்தல் மற்றும் அளத்தில் உபகரணங்களின் சரியான தன்மையை பன்னிரண்டு மாத காலப்பகுதியினுள் பரிசோதகர் ஒருவரின் மூலம் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் உடவளவ யானைகள் காப்பக மையத்தில் உள்ள பாலம் தராசின் சரியானதன்மை 2019 ஆம் ஆண்டில் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | 1995 இன் 35 ஆம் இலக்க அளவுக்கூறுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2019 ஒக்தோபர் 13 தொடக்கம் 2022 பெப்ரவரி வரை பாலம் தராசு செயற்படாதிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணமங்கள் 137(2),(4),(5) இன் பிரகாரம் வழங்கல்கள் தொடர்பான செலவினங்களை அங்கீகரிக்கும் போது உரிய வழங்கல்கள் பரிந்துரைக்கப்பட்ட | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பாலம் தராசை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | அளவில் உள்ளதென்பதையும் அவை சரியாக பரிசோதனை செய்யப்பட்டு கையேற்கப்படுகின்றதென்பதையும் அங்கீரிக்கும் உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதற்கு முரணாக உடவலவ யானைகள் சரணாலயத்தில் இலைத் தண்டுகளை முறையற்றவாறு கொள்வனவு செய்ததன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட நிறையின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டில் ரூபா 8,896,827 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| (இ) | 2019 யூன் 13 ஆம் திகதிய 01/2018(i) ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் சகல அரசாங்க முகவராண்மைகளாலும் வழங்கப்படுகின்ற பல்வேறு சேவைகளுக்காக தற்போது அறவிடப்படுகின்ற கட்டணம் 15 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட வேண்டிய போதிலும் 2006 பெப்ரவரி 20 ஆம் திகதிய 1433/4 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் தேசிய | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வர்த்தமானி அறிவித்தலை திருத்தம் செய்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | 2022 பெப்ரவரி வரையிலும் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒதுக்கப் பிரதேசம் அல்லது அபயமளிக்கப்பட்ட பூமியில் அமைந்துள்ள நீர்த்தேக்கங்களில் மீன் பிடிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற மீன் பிடி வள்ளங்களுக்காக அறவிடப்படுகின்ற ரூபா 250 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணம் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் திருத்தப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஈ) | 2002 பெப்ரவரி 11 ஆம் திகதிய 16/2002 ஆம் இலக்க திணைக்கள சுற்றறிக்கையின் 1.1 மற்றும் 1.2 ஆம் பந்திகளின் பிரகாரம் தேசிய பூங்காக்களில் உள்நுழைவுச் சீட்டு வருமானங்களிலிருந்து அறவிடப்படுகின்ற சேவைக் கட்டணங்களை பகிர்ந்தளிக்கும் போது 01 முதல் 10 நாட்கள் வரை சம்பளமற்ற விடுமுறை பெற்றவர்களிடமிருந்து 10 சதவீதமும் 11 நாட்களுக்கு மேற்பட்ட சம்பளமற்ற விடுமுறை பெற்றவர்களிடமிருந்து 50 சதவீதமும் வனவிலங்கு பாதுகாப்பு நிதியத்திற்கு மீண்டும் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் உரிய பணங்கள் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதிலும் 2020 ஆம் ஆண்டில் 14 உத்தியோகத்தர்களிடம் இருந்து கழிக்கப்பட்ட ரூபா 1,829,200 தொகை செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (உ) | 2018 ஆம் ஆண்டளவில் அருகிவரும் வனசீவராசிகள் மற்றும் தாவர இனங்களின் சர்வதேச வர்த்தகம் தொடர்பான மாநாட்டின் (CITES) 17 ஆவது கூட்டத்தொடரில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை அடிப்படையாகக்கொண்டு கால்நடைகள் மற்றும் தாவர வியாபாரம் மற்றும் இனவிருத்தி செயற்பாடுகளை முறைமைப்படுத்துவதற்காக இலங்கைக்கு பொருத்தமான புதிய சட்ட முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு வேண்டப்பட்டிருந்த போதிலும் 2019 ஏப்ரல் 30 வரையிலும் சட்ட முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இலங்கைக்கு பொருத்தமான புதிய சட்ட முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். | புதிய சட்ட முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான சட்ட வரைபுகள் தயாரிக்கப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2022 பெப்ரவரி வரையிலும் புதிய சட்ட முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | உடவளவ யானைகள் காப்பகத்தில் நீதிமன்ற உத்தரவின் படி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 13 யானைகளின் தண்ணீர் | செயற்திட்டங்களை திட்டமிடுவதற்கு முன்னர் தேவைப்பாட்டை | தொட்டியிலுள்ள கசிவுகளை திருத்தம் செய்வது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் | 2022 பெப்ரவரி வரையிலும் தொட்டி திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தேவையினை பூர்த்தி செய்வதன் பொருட்டு ரூபா 628,383 கிரயத்தில் 2019 ஆம் ஆண்டில் சிறிய நீர் தொட்டியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அவை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. மிகுதி உணவுகள் தொட்டியினுள் குவிக்கப்பட்டு இருந்தன. | அடிப்படையாகக் கொண்டு முறையான ஆய்வு நடாத்தப்பட வேண்டும். | எடுக்கப்பட்டு வருகின்றன. | |
| (எ) | மூர்க்கத்தனமான யானைகளை கட்டுப்படுத்தி வைப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட ஹொரவப்பொத்தான யானைகள் காப்பக நிலையத்தில் 2015 செப்தெம்பர் 04 தொடக்கம் 2019 யூன் 25 வரை 51 மூர்க்கத்தனமான யானைகள் கட்டுப்படுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 12 யானைகள் பலவித காரணங்களினால் இறந்து போய் இருந்தன. 2019 யூன் மாதம் மேற்கொள்ளப்பட்ட யானைகளுக்கான கணக்கெடுப்பு அறிக்கையின் பிரகாரம் 9 யானைகள் உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தன. 30 யானைகள் தொடர்பாக எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவி | மிருகங்கள் தொடர்பாக ஒழுங்கான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | 30 யானைகள் தொடர்பாக எவ்வித சான்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ல்லை. | | | |
| (ஏ) | 2020 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட 28 பணிகளுக்காக ரூபா 367,357,000 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவை அமுல்ப்படுத்தப்பட்டிருக் கவில்லை. | செயல்நடவடிக் கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட பணிகளை அமுல்ப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில் லை. |
| (ஐ) | 2018 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட மூழ்கிய கப்பல் தொடர்பான உயிரியல்சார்ந்த பன்முக ஆய்வை அமுல்ப்படுத்தி வெளிப்படுத்துதல் செயற்திட்டம் (Implementation of biodiversity survey and declaration of ship wrecks project) – 2019 ரூபா 2,956,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த அதே நேரம் செயற்திட்டத்தில் திட்டமிடப்பட்ட நீச்சல் உபகரணங்கள் அனைத்தும் 2019 மார்ச் 31 அளவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக் கவில்லை. | செயற்திட்டத்தை விரைவாக அமுல்படுத்துவ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் குறித்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஓ) | 2012 ஆம் ஆண்டில் ரூபா 11,730,808 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட வில்பத்து தேசிய பூங்காவில் அமைந்துள்ள கொல்லன்கனட்ட (வீரவில) சுற்றுலா விடுதி நீர் விநியோக சிக்கல்கள் காரணமாக 2012 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தது. | நீர் விநியோக சிக்கல்கள் தீர்க்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளிற்காக திறக்கப்பட வேண்டும். | நீர்க் குழாய்களை அமைப்பதற்காக 2021 ஆம் ஆண்டில் நிதியேற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தது. | 2022 பெப்ரவரி வரையிலும் விளைவற்றிருந்தது. |

## 07. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் - சுற்றுலா அபிவிருத்தி நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02 இற்கு முரணாக காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல்களாக இரண்டு வங்கிக் கணக்குகளிற்கிடையே மாற்றப்பட்ட பணத்தை பிரதிபலிக்கின்றதால் ரூபா 962,402,030 தொகையான சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரி, குடியகல்வு வரி மற்றும் ஏனைய பெறுவனவுகளாக பெறப்பட்ட பணம் ரூபா 1,111,441,038 ஆகவும் ரூபா 6,150,647 தொகையான ஏனைய கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்ட பணம் ரூபா 155,189,670 ஆகவும் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தன. | ஒரே நிதியத்தின் இரண்டு கணக்குகளிற்கு இடையேயான காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படக் கூடாது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2 இன் பிரகாரம் 2021 ஆம் கணக்காண்டுக்குரிய இப் பிழையை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை சீர்செய்திருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் 2022 சனவரி 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததால் காசுப்பாய்ச்சலின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. |
| (ஆ) | நிதியம் மற்றும் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி | சீர்செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சீர்செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை கணக்கிணக்கம் செய்த போது முறையே ரூபா 232,723 மற்றும் ரூபா 699,908 தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | | |
| (இ) | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அதிகாரச்சட்டத்தின் III ஆம் அத்தியாயத்தின் 23(2)(அ) பிரிவின் பிரகாரம் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபையால் சேகரிக்கப்பட்ட குடியகல்வு வரியின் 1/3 தொடர்பாக 2020 ஆம் ஆண்டில் சேவைக் கட்டணங்களாக ரூபா 12,551,372 அல்லது 2.5 சதவீதத்தை கழிப்பது தொடர்பாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 சனவரி 29 ஆம் திகதிய பிஎவ்/ஆர்/4/019 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பொதுத் திறைசேரி அதற்காக இணங்கியிருந்தது. | அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. |
| (ஈ) | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அதிகாரச்சட்டத்தின் 24(3) ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை | அதிகாரச்சட்டத்தின் பிரிவுகள் திருத்தம் செய்யப்பட வேண்டும். | அதிகாரச்சட்டத்திற்கான திருத்தங்களை மேற்கொண்ட பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச்சட்டம் திருத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அபிவிருத்தி வரியின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்திற்கான விதிகள் உருவாக்கப்பட்டிருக்க வில்லை. எனினும் 2020 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் ரூபா 3,315,209 தொகை நிர்வாக செலவினங்களாக செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| (உ) | 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை வங்கிக்கு நேரடியாக அனுப்பப்பட்டிருந்த ரூபா 51,933,332 தொகை சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கு பதிலாக நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் முன்கொண்டுவரப்பட்டிருந்தது. | சரியாக இனங்காணப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரியை ஒன்லைனில் செலுத்தும் போது எஸ்எல்ரீடிஏ இன் பதிவு இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதனால் இப் பிரச்சனை ஏற்பட்டது. | நேரடி பணவனுப்பல்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. |

## 08. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் - கரையோர பாதுகாப்பு வெகுமதி நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | -------------------- | ------------------- | -------------------- | ------------------- |
| (அ) | 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை நீதவான் நீதிமன்றத்தால் அறவிடப்பட்ட போதிலும் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்காத ரூபா 702,500 தண்டப்பணம் 2021 யூலை 05 வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாக உள்ள தண்டப்பணங்களை விரைவாக அறவீடு செய்வதற்கான முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டும். | உரிய தண்டப்பணங்களை அனுப்புமாறு தொடர்புடைய நீதவான் நீதிமன்றங்களிற்கு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | தண்டப்பணங்களை அனுப்புமாறு நீதவான் நீதிமன்றங்களிற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 வரையிலும் அத் தண்டப்பணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2017 மே 09 ஆம் திகதிய 2018/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் கடலோர பாதுகாப்பு வெகுமதி நிதியத்தில் இருந்து வெகுமதிகளை கொடுப்பனவு செய்வதற்கான வழிகாட்டல்கள் மற்றும் அளவுகோல்கள் குறித்துரைக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் | தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்பட்ட மீதி தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பதிவேடுகளை அனுப்புவதில் உள்ள தாமதம் காரணமாக வெகுமதிகள் செலுத்தப்பட முடியாதிருந்தன. | 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 திசெம்பர் 31 வரையான 05 ஆண்டு காலப்பகுதியின் போது ரூபா 4,471,500 கூட்டுமொத்த தொகை வெகுமதிகளாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் வெகுமதிகளை செலுத்துவதற்காக அத் திகதியிலுள்ளவாறு ரூபா 4,726,042 தொகை மீதமாக உள்ளது. |

ஆண்டு முதல் வெகுமதி கொடுப்பனவுகள் தொடங்கப்பட்டிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது செலுத்த வேண்டிய நிதியத்தின் மொத்த பெறுவனவுகள் ரூபா 9,197,542 தொகையாக காணப்பட்டது.

## 09. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் - இந்து கலாச்சார நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்
2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்
2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 1 இன் 79 ஆம் பந்தியின் பிரகாரம், ஆண்டினுள் தீர்வையாகும் என எதிர்பார்த்த போதிலும் சாதாரன செயற்பாட்டு சுழற்சியின் பகுதியொன்றாக தேறிய, நுகரப்பட்ட அல்லது விற்பனை செய்யப்பட்ட சொத்துக்கள் நடைமுறைச் சொத்துக்களாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அச்சிடப்பட்டிருந்த புத்தகங்களில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகுதியாக இருந்த 4678 புத்தகங்களின் ரூபா 3,622,006 பெறுமதி தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் மிகுதியாகவுள்ள இருப்புக்கள் தொடர்பில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் இதனை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு இணங்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 133(ஆ) மற்றும் 2009 யூன் 09 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி என்பவற்றின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வொன்று நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடாத்தப்பட வேண்டிய போதிலும் நிதியம் தொடர்பாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வொன்று நடாத்தப்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வொன்றினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 ஆம் ஆண்டு முதல் உள்ளகக் கணக்காய்வொன்றை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

## 10. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் - பொலிஸ் வெகுமதி நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமைஅதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | ---------------- | --------------- | ----------------- | -------------------------- |
| (அ) | 42 நீதிமன்றங்களால் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்த வருமான உறுதிப்படுத்தல் பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியல் 03 இல் குறிப்பிடப்பட்டிருந்த ஆண்டிறுதியில் உள்ள பெறவேண்டிய நீதிமன்ற தண்டப் பண வருமானத்துடன் கணக்கிணக்கம் செய்த போது 41 நீதிமன்றங்களின் நீதிமன்ற தண்டப்பணங்கள் தொடர்பான கூட்டுமொத்தம் ரூபா 72,933,099 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்த அதே நேரம் 01 நீதிமன்றத்தின் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 5,760,955 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததால் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | இணக்கமின்மைகள் பரீட்சிக்கப்பட்டு அதற்கான காரணங்கள் இனங்காணப்பட வேண்டும். | விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன. தடுப்பதற்கான நடவடிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்றங்களால் சமர்ப்பிக்கப்பட்ட நேரடித் தகவல்களிற்கும் நிதிக்கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்ட பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பண மீதிகளிற்கும் இடையேயான இணக்கமின்மைகள் தொடர்ச்சியாக அறிக்கையிடப்படுகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது பொலிஸ் உத்தியோகத்தர்களின் பாராட்டத்தக்க செயல்கள் தொடர்பாக 50 சதவீத வெகுமதி செலுத்தப்பட்டிருந்த 400 விசேட வெகுமதி கோவைகளுக்கான மிகுதி வெகுமதி தொகைகளை செலுத்துவதற்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்திருக்க வேண்டியதுடன் செலுத்தப்பட வேண்டிய மொத்த விசேட வெகுமதிப் பெறுமதி ரூபா 91,011,211 ஆகும். இந்த செலுத்த வேண்டிய விசேட வெகுமதி தொடர்பில் தகவல்கள் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளதா என்பது தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததால் 2020 ஆம் ஆண்டில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு செலுத்த வேண்டிய விசேட வெகுமதிகளிற்குாிய கோவைகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டதன் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய விசேட வெகுமதிகள் தொடர்பான தகவல்கள் மீண்டும் பரீட்சிக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய விசேட வெகுமதிகள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெறுகின்றதா என்பதற்கான உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2013 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதி தொடர்பாக முறையே ரூபா 433, 386 மில்லியன், 326 மில்லியன், 469 மில்லியன், 820 மில்லியன், 1,015 மில்லியன், 1,275 மில்லியன் மற்றும் 1,198 மில்லியன் ஆக ரூபா 5,922 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானம் நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் ஊடாக உழைக்கப்பட்டிருந்த போதிலும் இவ் வருமானம் நிதியம் நிறுவப்பட்டமைக்கான நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | முதலீட்டுகள் மூலமான வருமானம் நிதியத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும். | விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன. தடுப்பதற்கான நடவடிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 1 பில்லியனுக்கும் மேற்பட்ட வட்டியில் இருந்தான வருடாந்த வருமானம் தற்போது ஈட்டப்படுகிறதுடன் இதில் 100 சதவீதமும் உத்தியோகத்தர்களிற்கு வெகுமதிகள் அல்லது நலன்புரிக்காக அதன் ஒரு பகுதியை கூட செலவிடாமல் தொடர்ந்து மீண்டும் முதலீடு செய்யப்படுகிறது. |

## 11. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் - உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - பாதகமான அபிப்பிராயம்

2019 - பாதகமான அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | ------------------- | ------------- | -------------------- | ---------------------- |
| (அ) | உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியத்திற்கு திறைசேரியினால் வழங்கப்படுகின்ற நிதிகளை வைப்புச் செய்வதன் மூலம் வீடமைப்பு கடன் நிதியமொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீடமைப்புக் கடன் நிதியத்தின் திரண்ட மீதி ரூபா 37,851,984 கூட்டுமொத்தமாகும். எனினும், 2008 நவம்பர் மாதம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்த வீடமைப்பு நிதியத்தில் இருந்து உத்தியோகத்தர்களுக்காக எந்தவொரு கடனும் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் இந்த கடன் நிதியம் ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முறையான ஆய்வு ஒன்றை மேற்கொண்ட பின்னர் வீடமைப்பு கடன் நிதியத்தை தொடர்ந்தும் பேணிச் செல்லுதல் தொடர்பாக கொள்கை ரீதியான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட வேண்டும். | தற்போதுள்ள கடன்கள் முழுமையாக மீளச்செலுத்தப்படும் வரை மேலும் கடன்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய கடன் மீதி 2021 திசெம்பர் 31 வரையிலும் காணப்பட்டதுடன் நிதியத்தை தொடர்ந்தும் பேணிச்செல்வது தொடர்பாக கொள்கை ரீதியான தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 99(4) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நிர்வாகத்திற்கான நடைமுறைகள் நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | சட்டத்தின் பிரகாரம் நாளதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடைமுறைகள் தற்போதும் நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. |

## 12. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் தேசிய பாதுகாப்பு நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | ------------ | --------------- | -------------------- | ------------------- |
| (அ) | 1985 இன் 9 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தின் 09 ஆம் பிரிவின் பிரகாரம் கொல்லப்பட்ட ஆயுதப் படைகள் தமது கடமைகளைச் செய்யும் போது அவர்களின் உறுப்பினர்கள் மற்றும் குடும்பங்களிற்கு நன்மைகளை வழங்குவதற்கு மேலதிகமாக சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசிய பாதுகாப்பை மேம்படுத்தி உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகளுக்கு 2020 ஆம் ஆண்டின் போது நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. | 1985 இன் 9 ஆம் இலக்கத் தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தின் 09 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக ஆளுநர் சபைக்கு உரித்தான செயற்பாடுகள் தொடர்பாக அடுத்த ஆளுநர் சபைக் கூட்டத்தில் ஆளுநர் சபையின் கவனங் கோரப்படும். | ஆளுநர் சபைக்கு சமர்ப்பிப்பதற்காக ஆளுநர் சபை பத்திரமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 1985 இன் 9 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் | 1985 இன் 9 ஆம் இலக்கப் பாதுகாப்பு நிதியச் சட்டத்தின் 13 | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளிற்கான கணக்காய்வு அறிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரகாரம் நிதியத்தின் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள் பராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிப்பதற்கு அமைச்சு தயாரித்து வருகின்றது. | அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக மொழிபெயர்ப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| (இ) | ''விருசிசு பிரதீப புலமைப் பரிசில்'' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முப்படைகள் மற்றும் பொலிசாரின் இறந்த மற்றும் அங்கவீனமுற்ற போர் வீரர்களின் 2019 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 150 பிள்ளைகளுக்கு ஒவ்வொருவரிற்கும் ரூபா 25,000 வீதம் புலமைப்பரிசிலை வழங்குவதை 2020 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிற்குள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் பெறுபேறுகள் 2019 செப்தெம்பரில் | அங்கீகரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நாட்டில் நிலவும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக 2020 ஆம் ஆண்டில் நலன்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. புலமைப்பரிசிலை வழங்குவதற்கு மிக விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2019 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தெரிவு செய்யப்பட்ட 136 பிள்ளைகளுக்காக ஏற்கனவே DFCC வங்கியில் சிறுவர் சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அக் கணக்கு புத்தகங்கள் (pass books) விநியோகிக்கப்பட்டு வருகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வெளியிடப்பட்டிருந்தது டன் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு 1 வருடம் 3 மாதங்களிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் புலமைப்பரிசில் உதவி நலன்களை உரிய நேரத்தில் பயன்படுத்தப்படுவதற்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | | | |
| (ஈ) | 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டம் மற்றும் சனாதிபதி செயலாளரின் 2018 மார்ச் 16 ஆம் திகதிய பிஎஸ்/எஸ்பி/எஸ்பீ/3/201 ஆம் இலக்க சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் நிதியத்திற்குரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அளவிடுவதற்கான சுட்டிகள் என்பன இனங்காணப்படவில்லை. | சட்டம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதியத்தின் நோக்கங்களிற்கிணங்க நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நிலைபேறான அபிவிருத்தியின் கீழ் வறுமை ஒழிப்பு நோக்கத்திற்கு ஏற்ற வகையில் ‘‘மெத் செவன’’ அரைவாசி பூர்த்திசெய்யப்பட்ட வீடுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் போர் வீரர்களின் வாழ்க்கை நிலைமைகள் ஏற்கனவே மேம்படுத்தப்பட்டுள்ளன. |

## 13. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் அபி வெனுவென் அபி நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்
2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்
2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ரணஜயபுர வீடமைப்பு செயற்திட்டத்தின் குடியிருப்பாளர்களிடமிருந்து 2020 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டியிருந்த தவணைப் பண நிலுவை ரூபா 29,070,660 ஆக காணப்பட்டதுடன் அதில் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்படுகின்ற கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 17,326,401 ஆகும். இந்நிலுவைத் தவணைப்பணத்தை அறவிடுதல் மற்றும் அது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் என்பன திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை. | உடன்படிக்கைகளின் பிரகாரம் நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவைத் தவணைப்பணத்தை அறவீடு செய்வதை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ரணஜயபுர இப்பலோகம வீடுகளைப் பெற்றுக் கொண்ட சம்பந்தப்பட்ட குடியிருப்பாளர்கள் ஓராண்டு காலப்பகுதிக்கு மேலாக நிலுவைத் தவணைப்பணத்தை அறவீடு செய்வது தொடர்பில் முப்படையினருக்குத் தெரியப்படுத்துமாறு கடிதங்கள் மூலம் அறிவுறுத்தப்பட்டதுடன், தற்போதும் நிலுவையாக உள்ள வீடுகளை மீளப் பெற்றுக்கொடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2017 இன் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் நிதியத்தினால் | 2017 இன் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் | நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்திற்கிணங்க செயற்திட்டத்தின் எதிர்கால திட்டங்களை தயாரிப்பதற்கு | இலக்குகளை தீர்மானிப்பதோ அல்லது சுட்டிகளை தயாரிப்பதோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ள போதிலும் அந் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு தேவையான இலக்குகள் தீர்மானிக்கப்பட்டிருக்காததுடன் அவ் இலக்குகளை அடைந்து கொள்வதற்கான முன்னேற்றத்தினை அளவிடுவதற்கான சுட்டிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | 2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதியச் சட்டத்தின் 11(6) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை என்பன நிதியம் தொடங்கப்பட்டதிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் 11(6) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலப்பகுதியின் போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. | இதுவரை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதிய சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் ஆயுதப்படை அங்கத்தவர்களால் | சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள | 25,000 இற்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அப்போது வரை அமுல்ப்படுத்தப்பட்டு வந்த வீடமைப்புச் செயற்திட்டங்களுடன் | நிதியத்தின் தற்போதைய நிதி நிலைமை வீழ்ச்சியடைந்துள்ளதுடன் நிதியத்தின் நிதி நிலைமையை மேம்படுத்திய பின்னர், கடன்களை |

| | | | |
|---|---|---|---|
| நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுதல், அக்கடனை தீர்ப்பனவு செய்வதற்கு உதவி அளித்தலின் பொருட்டு ஏற்பாடுகளைச் செய்தல், இராணுவ அங்கத்தவர் ஒருவர் மரணமடையும் போது அல்லது போரின்போது நிரந்தர ஊனமடையும் போது அல்லது காயமடையும் போது கடன்களை தீர்ப்பனவு செய்வதற்காக உறுதிப்படுத்தலை வழங்குவதற்கான திட்டத்தை தயாரித்தல் போன்ற நோக்கங்கள் மீளாய்வாண்டின் போது அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ள அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உருவாகும் நிதி நெருக்கடி காரணமாக இதனை பூர்த்தி செய்ய முடியாதுள்ளது. | செலுத்துவதற்கும் உதவி வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 14. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் நிர்மாண உத்தரவாத நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1 இன் 48 ஆம் பந்திக்கு முரணாக பிணைகள் மற்றும் உத்தரவாதங்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய வருமானத்தின் ரூபா 6,956,286 கூட்டுத்தொகையான செலவு மீதிகள் 51 சந்தர்ப்பங்களில் அந்தக் கணக்கின் வரவு மீதிகளிற்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தன. இதனால் நடைமுறைச் சொத்துக்களும் நடைமுறைப் பொறுப்புக்களும் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அவற்றை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன. | இனங்காணப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 7 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் 65 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏறத்தாழ | முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் பயன்தரு பொருளாதார ஆயுட்காலத்தை | 2022 ஆம் ஆண்டில் அவற்றை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீள்மதிப்பீட்டு செயன்முறை நடைபெற்று வருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 7,088,288 கிரயமான அலுவலக உபகரணங்களும் ஏனையவைகளும், கணனிகள், துணைப்பாகங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் பொருத்துக்கள் போன்ற முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் பயன்தரு பொருளாதார ஆயுட்காலம் மீள்மதிப்பீடு செய்யப்படாமலும் எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 3 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் தவறுகள் இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறை சீர்செய்து நிதிக்கூற்றுக்களில் சரியான முன்கொண்டு செல்லும் தொகையை காண்பிப்பதற்கான ஏற்பாடுகள் இன்றியும் நிதியத்தால் அச்சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. | த மீள்மதிப்பீடு செய்வதற்கும் நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அவற்றை கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | | |
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ள காசுப்பாய்ச்சல் கூற்றில் | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாகத் தயாரிக்கப்பட்டு அனைத்து | இது காசுப்பாய்ச்சலை தயாரிக்கையில் இடம்பெற்ற ஒரு மனிதத் தவறாகும். ஆகையால், எந்தவொரு | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் ஊடாக சீர்செய்யப்பட உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் ரூபா 448,842 தொகை கைதவிர்க்கப்பட வேண்டிய மற்றும் அழிக்கப்பட வேண்டிய விடயமொன்றாக காண்பிக்கப்பட்டுள்ளது. எனினும், இக்கொடுக்கல் வாங்கலின் சரியான தன்மை மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அல்லது மெய்மையாய்வு செய்வதற்காக இந்த விடயத்துடன் தொடர்புடைய ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் கணக்குப் புத்தகங்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்குகளிற்கான குறிப்புக்கள் தொடர்பான விபரங்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதாரப்படுத்தும் ஆவணங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஆதாரப்படுத்தும் ஆவணமும் காணப்படாததுடன் இதனை நாம் எதிர்வரும் நிதிக்கூற்றுக்கள் ஊடாக சீர்செய்வோம். | |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட ஐந்து (05) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் ரூபா 7,790,561 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத செலவு மீதி காட்டப்பட்டுள்ளது. அதில், ரூபா 354,100 தொகை மாத்திரமே | வங்கிக் கூற்றுக்களில் உள்ள இனங்காணப்படாத செலவு மீதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கிணங்க கணக்குப் புத்தகங்களில் | எந்தவொரு ஆதாரப்படுத்தும் ஆவணம் மற்றும் அறிவித்தல் இன்றி ஒப்பந்ததாரர்கள் நிதியத்தின் கணக்குகளிற்கு மேற்கொண்ட நேரடிக் கொடுப்பனவுகளின் காரணமாக ஏற்பட்ட இனங்காணப்படாத செலவு மீதிகளின் கீழ் பாரிய | இனங்காணல் ஏற்கனவே இடம்பெற்று வருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2021 செப்தெம்பர் 30 வரை இனங்காணப்பட்டிருந்ததுடன், 2018 முதல் 2020 வரையான காலப்பகுதிக்குரிய எஞ்சிய ரூபா 7,436,461 மீதியானது 2021 செப்தெம்பர் 30 வரையிலும் இனங்காணப்பட்டு கணக்குப் புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. ஆகையால், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 133,736,801 தொகையான வங்கி மீதியின் சரியான தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | தொகையொன்று காணப்படுகின்றது என்பதை நிதியம் ஏற்றுக்கொள்கின்றது. 2020 மார்ச் ஆரம்பம் முதல் 2021 திசெம்பர் 31 வரையான அதாவது அனைவரும் நேரடியான தொடர்புகள் மற்றும் உரிய தொடர்பாடல்கள் இன்றி இன்னலுற்ற காலப்பகுதியின் போது இந் நிலைமை ஏற்பட்டது. எனினும் எதிர்வரும் காலப்பகுதியின் போது நாம் இதனை கணக்கிணக்கம் செய்வோம். | |
| (உ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிணைகள் மற்றும் உத்தரவாதங்களிலிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 50,182,648 தொகையான வருமானத்தில் ரூபா 4,460,022 மற்றும் ரூபா 833,520 தொகைகள் முறையே 01 ஆண்டு மற்றும் 02 ஆண்டு காலப்பகுதிக்கு மேலாக அறவிடப்படாது கணக்குகளில் காணப்பட்டன. | பிணைகள் மற்றும் உத்தரவாதங்களிலிருந்து பெறவேண்டிய வருமானத்தின் எஞ்சிய மீதியை தாமதம் எதுவுமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 833,520 தொகையில் 58 சதவீதத்திற்கு மேற்பட்ட தொகை சேகரிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய மீதிகள் இனங்காணப்படாத செலவு மீதிகளில் உள்ளடங்கியிருக்கக்கூடும். ரூபா 4,460,022 தொகையில் 54 சதவீதத்திற்கு மேற்பட்ட குறிப்பிடத்தக்க தொகை அறவிடப்பட்டு வருகின்றதுடன் ஏனைய மீதி இனங்காணப்படாத செலவு மீதிகளில் உள்ளடக்கப்படுகின்றது. | சாத்தியமானளவு விரைவாக ரூபா 4,460,022 தொகையை அறவீடு செய்து தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவுள்ள பட்டியல் கழிவு மீதி ரூபா 10,296,098 ஆகும். அதில் ரூபா 9,631,752 அல்லது 93 சதவீதம் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் ஒப்பந்ததாரர் ஒருவரிடமிருந்து ஓராண்டுக்கும் மேலாக அறவிடப்படாதிருந்தது. மேலும், நிதியத்துக்கு ஏற்பட்ட இழப்பை அறவீடு செய்வதற்கு இந்த ஒப்பந்ததாரர் மற்றும் பொறுப்பான தரப்பினருக்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்காததுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிற்கு அறிவித்து இந்த ஒப்பந்ததாரரை கறுப்பு பட்டியலில் சேர்க்கும் நடவடிக்கைகள் நிதியத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்ததாரரிடம் இருந்து நிலுவைத் தொகைகளை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் 2022 ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதன் காரணமாக மீதி அறவிடப்படாதுள்ளது. செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்படாததால் சட்ட நடவடிக்கையை எடுக்க முடியாதுள்ளது. | இது 2022 ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்படும். |

## 15. கணக்காய்வுக்குட்பட்டு நிறுவனத்தின் பெயர் தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

| | | |
|---|---|---|
| 2018 | - | உண்மையானதும் நியாயமானதுமான அபிப்பிராயம் |
| 2019 | - | உண்மையானதும் நியாயமானதுமான அபிப்பிராயம் |
| 2020 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | -------------------- | -------------------- | --------------------- | ------------------------- |
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இல. 2 இற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று உண்மையான காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் உண்மையான காசு வெளிப்பாய்ச்சல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்கான நிதி நிலைமைக் கூற்றுக்களில் உள்ள உருப்படிகளின் பெறுமதிகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளினை அடிப்படையாகக் கொண்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. மேலும் நியமத்தின் 54 மற்றும் 55 ஆம் பந்திகளின் பிரகாரம் ஐயக்கடன் ஏற்பாட்டுப் பெறுமதி செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உருவாக்கமல்லாத செயற்பாடொன்றாக வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இல. 2 இன் 08 மற்றும் 56 ஆம் பந்திகளின் பிரகாரம் திறைசேரி உண்டியல்கள் மற்றும் மீள் விற்பனை உண்டியல்களை கணக்கீடு செய்யும் போது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதிர்வடைவதற்கு 03 மாதங்கள் அல்லது அதனை விட குறைந்த காலப்பகுதியை கொண்டுள்ள முதலீடுகள் நிதி நிலைமைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமமான திரவத்தன்மை மிக்க சொத்துக்களாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 மாத காலத்தினுள் முதிர்வடையவுள்ள 18 திறைசேரி உண்டியல்களின் ரூபா 66,797,498 கூட்டுமொத்த பெறுமதி மற்றும் 02 திறைசேரி மீள் விற்பனை உண்டியல்களின் (Repos) ரூபா 6,013,502 கூட்டுமொத்த பெறுமதி | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | என்பன காசு மற்றும் காசுக்கு சமனான திரவத்தன்மை மிக்க சொத்துக்களின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | | | |
| (இ) | 1996 ஒக்தோபர் 24 ஆந் திகதிய 946/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1994 இன் 01 ஆம் இலக்க திரைப்படக் கூட்டுத்தாபன கட்டளை | | | |
| (i) | 02(4)(I)(உ) பிரிவின் பிரகாரம் திரைப்படங்களின் உயர் தரத்தினை உறுதிப்படுத்துவதற்காக திரைப்படங்களை தயாரித்து காட்சிப்படுத்துவதற்கான உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானி அறிவித்தல் கட்டளைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த கட்டளைகளை 2022 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்த கவனம் செலுத்தப்படும். | தேவையான உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 02(4)(I)(ஊ) பிரிவின் பிரகாரம் திரைப்படத் துறையிலுள்ள கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு அல்லது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங் | வர்த்தமானி அறிவித்தல் கட்டளைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த கட்டளைகளை 2022 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | களை நடாத்துவதற்கு நிதியம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | |
| (iii) | 02(4)(I)(எ) பிரிவின் பிரகாரம் உயர் தரத்திலான கலைநயமிக்க திரைப்படங்களை தயாரிப்பதற்காக திரைக்கதை மதிப்பீட்டு குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட திரைக்கதைகள் அல்லது அவ்வாறான திரைப்படங்களை தயாரிக்கும் பணிக்காக பெற்றுக்கொள்ளக்கூடிய வளமூலமொன்றிலிருந்து விசேட உபகரணங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளும் பொருட்டு பணிப்பாளர்களுக்கு கடன் வழங்குவதன் மூலம் திரைப்படத் தயாரிப்பினை மேம்படுத்துவதற்காக பல வருடங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானி அறிவித்தல் கட்டளைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த கட்டளைகளை 2022 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | 02(4)(I)(ஏ) பிரிவின் பிரகாரம் 05 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட தொடர்ச்சியான ஆண்டு காலமாக உள்நாட்டு திரைப்படத் துறையில் ஈடுபட்டுள்ள மற்றும் ஆகக் குறைந்தது பத்து திரைப்படங்களில் பணிகளை பூர்த்திசெய்துள்ள உயர்தொழில்சார் தொழில்நுட்பவிய லாளர்களுக்கு அவர்களது ஆற்றல்களை அதிகரித்து அபிவிருத்தி செய்வதற்கு கடன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வர்த்தமானி அறிவித்தல் கட்டளைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த கட்டளைகளை 2022 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | சீர்செய்தல்களிற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. |
| (v) | 6(இ) பிரிவின் பிரகாரம் கடன்களின் மீள்கொடுப்பனவு தாமதமாகும் எனின், அதற்காக அறவிடப்பட வேண்டிய மிகைக் கட்டணங்கள் ஆளுகைச் சபையினால் நிர்ணயிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டிய | வர்த்தமானி அறிவித்தல் கட்டளைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த கட்டளைகளை 2022 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதிலும் 2020 ஆம் ஆண்டு வரை திரையரங்குகளின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 73,548,176 கூட்டுமொத்தமான கடன் தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் நிதியத்தின் சொத்துக்களை மெய்மையாய்வு செய்து பொருள் மெய்மையாய்வு சபையின் அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை வருடாந்தம் மதிப்பாய்வு செய்யும் போது நிதியத்தின் சொத்துக்கள் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வொன்றை சபை மேற்கொள்ளும். | சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் மூலம் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 872(2)(ஈ) இன் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. | எதிர்காலத்தில் உரிய திகதியில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 2 மாதங்களினுள் சான்றுபடுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 08 மாத தாமதத்துடன் 2021 நவம்பர் 02 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | | | |
| (ஊ) | 1999 யூன் 17 ஆந் திகதிய நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள தேசிய திரைப்படக் கொள்கை மற்றும் அது தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 6.5 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் முதலீட்டுச் சபையின் பிரமாணங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட திரையரங்கு தொகுதிகளில் காட்டப்படுகின்ற ஒவ்வொரு இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படக் காட்சிகளினதும் ஒவ்வொரு நுழைவுச் சீட்டிலிருந்தும் ரூபா 2.25 தொகை அல்லது மொத்த நுழைவுச் சீட்டு வருமானத்தின் 2.25 சதவீதம் அகிய இரண்டில் கூடிய தொகை தேசிய திரைப்பட அபிவிருத்தி | திரைப்பட கொள்கை மற்றும் அது தொடர்பிலான வழிகாட்டிக் கோவையின் 6.5 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அது தொடர்பான முதலீட்டுச் சபையின் உடன்படிக்கைகள் மற்றும் விநியோகங்கள் தொடர்பான சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் ஆளுகை சபைக்கு அனுப்பப்பட்டு அதன் தீர்மானங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய போதிலும், 2001 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட மருதானை சினி சிட்டி (Cine City) திரையரங்கு தொகுதியிலிருந்து அவ்வாறு அறவிடப்பட வேண்டிய தொகையை கணிப்பீடு செய்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (எ) | திரைப்பட தயாரிப்பு மற்றும் திரையரங்குகளுக்காக வழங்கப்பட்டுள்ள கடன்களில் 05 ஆண்டு முதல் 26 ஆண்டுகள் வரையான காலமாக முன்கொண்டு வரப்படும் அறவிடப்படமுடியாத கடன்களாக நிதியத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 66,958,372 கூட்டுமொத்தமான கடன்கள் உள்ளடங்கியுள்ளது. இது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டுள்ள மொத்த கடன் தொகையின் 91 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. கடன்களை வழங்கும் போதும் அவற்றை அறவிடும் போதும் முறையாக | இக் கடன்களை பல்வேறு நடவடிக்கைகளை பின்பற்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதியத்தால் வழங்கப்பட்ட கடன்கள் கடன் குழுவினால் பரிசீலிக்கப்படுகின்றதால் , குறித்த குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த கடன்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படாததால் குறித்த கடன் மீதிகள் தொடர்ச்சியாக நிலுவை கடன் மீதிகளாக முன்கொண்டு வரப்படுகின்றன. | | | |
| (ஏ) | 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் பில்ம் லங்கா கம்பனிக்கு மருதானை சினி சிட்டி திரையரங்குத் தொகுதியின் நிர்மாணங்களிற்காகவும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காகவும் வழங்கப்பட்டிருந்த ரூபா 8.5 மில்லியன் கடன் தொகை உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட முடியாதிருந்தது. மேலும், 2019 திசெம்பர் 31 அளவில் மேலும் ரூபா 890,665 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. இந்த கடனிற்காக 2006 ஆம் ஆண்டு வரை பெற வேண்டிய வட்டி ரூபா 4,064,958 ஆக கணிப்பிடப்பட்டிருந்ததுடன் தொடர்ந்துவரும் ஆண்டுகளிற்காக பெறவேண்டிய வட்டித் தொகையை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சினி சிட்டி திரையரங்குத் தொகுதியை நிர்மாணிப்பதற்குரிய கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டு வரையான வட்டியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சினி சிட்டி சினிமா தொகுதி அவ்வப்போது கடன் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுகின்றதால் 2019 ஆம் ஆண்டு வரையிலான வட்டியை அறவீடு செய்வது தொடர்பான விடயம் கடன் குழுவுக்கு அனுப்பப்பட்டு, அதன் பரிந்துரைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 16. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் - கம்பனி நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | ------------------ | ------------------- | ----------------- | ------------------- |
| (அ) | 2007 ஆம் ஆண்டில் குறித்த கம்பனியை நிறுவியமை தொடர்பாக 35 சதவீத அரசாங்க பங்களிப்புக்காக ஈ-சேர்விஸஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டின் சாதாரண பங்குகள் மற்றும் முன்னுரிமைப் பங்குகளை கொள்வனவு செய்வதற்காக வர்த்தக, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சின் செயலாளரின் கணக்கிற்கு மாற்றப்பட்ட ரூபா 90,275,000 தொகை முதலீடுகளின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முதலீட்டுத் திகதியிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை எந்த நன்மையும் பெறப்பட்டிருக்கவில்லை. கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 131(1) ஆம் பிரிவிற்கு இணங்க | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட படிவம் 15 இன் பிரகாரம் பங்குரிமையைக் குறிப்பிடத் தவறியதற்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டும். | இக் கம்பனியை மேலும் செயற்படுத்துதல் நீண்டகாலத்திற்கு இலாபத்தன்மையுடையதாக காணப்படாததால் 2013.01.13 இல் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் ஈ-சேர்விஸஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டை கலைப்பதற்கு அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | இப் பங்குகளின் முதலீடு குறித்து விசாரணையொன்றை நடாத்துவதற்கு இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிடம் கோரிக்கையொன்று விடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்ட படிவம் 15 இன் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் செயலாளரின் சார்பில் பங்குரிமை காட்டப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | கம்பனிகளின் பதிவை கணனி மயப்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டு தனியார் கம்பனியொன்றிற்கு ரூபா 88,812,228 மதிப்பீட்டிற்கான ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தொகையில் ரூபா 13,268,450 தொகை இரண்டு சந்தர்ப்பங்களில் 10 சதவீதத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் பகுதிகளாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும், உரிய காலப்பகுதியினுள் குறித்த நோக்கத்தை அடைந்துகொள்ளத் தவறியதன் காரணமாக ஒப்பந்த உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டிருந்தது. குறித்த செயற்திட்டத்தினால் வழங்கப்பட்ட Deliverables தற்போது அமுல்ப்படுத்தப்படும் செயற்திட்டத்திற்கான உள்ளீடாக | குறித்த தொகையை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்ட செலவினத்தை பதிவழிப்பதற்காக நிதி அமைச்சின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்பட்ட தொகையை அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் குறித்த தொகையை அறவீடு செய்வது தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், இச் செலவினம் 2020 திசெம்பர் 31 அளவில் நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | | |
| (இ) | ஆலோசனை நிறுவனத்திடம் விசாரணைகளை மேற்கொண்ட போது இந்த மென்பொருள் திட்டமிடப்பட்டவாறு சரியாக செயற்படுகின்றதை உறுதிப்படுத்துவதற்காக முறைமைக் கணக்காய்வு (System Audit) ஒன்றை மேற்கொள்வதற்கும் ஒவ்வொரு மறுசெய்கைக்குப் பின்னரும் அதன் வெளியீட்டிற்கு முன்னர் ஒரு பின்னடைவுச் சோதனையை (Regression Test) மேற்கொள்வதற்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காதமை வலியுறுத்தப்பட்டது. மேலும் முறைமையின் தரவுகளின் பாதுகாப்பு | உடன்படிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டவாறும் இணங்கப்பட்டவாறும் ஒப்பந்ததாரரின் பதவியணியினர் ஒவ்வொரு அபிவிருத்தி நிலையிலும் இருப்பார்கள் என்பதை உறுதி செய்ய வேண்டும். | CERT நிறுவனத்திற்கு அனுப்பியதன் மூலம் முறைமைக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | முறைமை கணக்காய்வு அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் கடன் அட்டைகளின் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது ஏற்படும் பாதுகாப்பின்மை தொடர்பாக ஆலோசனை நிறுவனம் வெளிப்படுத்தியுள்ளது. | | | |
| (ஈ) | பதிவுசெய்யப்பட்ட கம்பனிகள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 131 (1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் அவற்றின் வருடாந்த அறிக்கைகளை தாக்கல் செய்ய வேண்டும். எனினும் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் வருடாந்த அறிக்கைகளை தாக்கல் செய்ய வேண்டிய கம்பனிகளின் எண்ணிக்கை 111,377 ஆக இருந்ததுடன் அவற்றில் 17,173 கம்பனிகள் மாத்திரமே குறித்த அறிக்கைகளை தாக்கல் செய்திருந்தன. 85 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 94,204 கம்பனிகள் வருடாந்த அறிக்கைகளை தாக்கல் செய்வதை புறக்கணித்துள்ளன. | வருடாந்த அறிக்கைகளை தாக்கல் செய்யாத கம்பனிகள் அதிகரிப்பதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முறைமை மூலம் அதாகவே மூன்று நினைவூட்டல்களை அனுப்புகின்றதுடன் முன்னைய ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகளை தாக்கல் செய்யும் போது உரிய ஆண்டுகளுக்கான கட்டணத்தை அறவீடு செய்வதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வருடாந்த அறிக்கைகளை தாக்கல் செய்தல் அதிகரித்துள்ளது. |
| (உ) | அனைத்து தனியார் அல்லாத கம்பனிகளும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை | நிலுவையாகவுள்ள நிதி அறிக்கைகளை தாக்கல் செய்யுமாறு அறிவித்து முறைமை | நிதி அறிக்கைகளை தாக்கல் செய்தல் அதிகரித்துள்ளது. |

சட்டத்தின் 170 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனிப் பதிவாளரிடம் அவற்றின் நிதிக்கூற்றுக்களை பதிவு செய்ய வேண்டும். அதற்கிணங்க 2020 ஆம் ஆண்டு தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய கம்பனிகளின் எண்ணிக்கை 7,175 ஆக காணப்பட்டது. அவற்றில் 1,001 கம்பனிகள் மாத்திரமே சட்டப் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கையை எடுத்திருந்த போதிலும் 86 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 6,174 கம்பனிகள் குறித்த ஏற்பாடுகளின் பிராகரம் நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை.

ய எடுக்குமாறு கம்பனிகளிற்கு அறிவிப்பதன் மூலம் நிதி அறிக்கைகளை பெற்றுக்கொள் வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மூலம் 3 நினைவூட்டல்களை அனுப்புவதற்கு முறைமை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 17. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் - புலமைச் சொத்து நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | ----------------- | ------------- | ---------------------- | ----------------- |
| (அ) | கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்திற்குரிய காணியில் புலமைச் சொத்து சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிலையம் நிர்மாணிக்கப்பட்டு வந்த போதிலும் அதனுடன் தொடர்புபட்ட காணிகள் சுற்றுலாத்துறை தொடர்பான அபிவிருத்தி செயற்பாடுகளிற்காக கையேற்கப்பட்டதனால் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அதற்காக செலவிடப்பட்ட ரூபா 22,298,751 தொகையை அறவீடு செய்வதற்கான 2015 மார்ச் 13 ஆந் திகதிய அமப/15/0272/625/007 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்திற்காக 2015 ஏப்ரல் 23 இல் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டின் இறுதி | செலவினங்களை மீள்நிரப்புச் செய்தல் அல்லது சட்ட ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | 2018 ஆம் ஆண்டில் சனாதிபதியின் செயலாளரினால் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலுக்கு அமைய இந்த நிர்மாணங்கள் பாதியில் கைவிடப்பட்டுள்ளதுடன், நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடம் அமைந்துள்ள காணியொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | புலமைச் சொத்து விற்பனை ஊக்குவிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 22.29 மில்லியன் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வரையிலும் குறித்த தொகையை அறவீடு செய்ய முடியாதிருந்தது. | | | |
| (ஆ) | கைத்தொழில் திட்டங்களை சர்வதேச ரீதியாக பதிவு செய்வதற்கான வசதிகளை வழங்கும் ஹேக் முறைமையை (Hague System) அணுகுதல் தொடர்பான செயற்திட்ட அறிக்கையொன்றை தயாரிப்பதற்கான திட்டங்கள் வரையப்பட்டிருந்த போதிலும் ஆரம்ப நடவடிக்கைகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன. | திட்டமிடப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஹேக் உடன்படிக்கை மற்றும் சட்ட நிபுணர்கள் மூலம் பயன்பெறும் வகையில் குழுக்களிடம் இருந்து ஆய்வு அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | ஹேக் முறைமையை அணுகுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2020 ஆம் ஆண்டில் வர்த்தக சின்னம் பதிவு செய்யப்பட்ட 5,932 சந்தர்ப்பங்களில், எழுநூற்று அறுபது (760) சந்தர்ப்பங்கள் 2010 இற்கு முன்னர் பெறப்பட்ட விண்ணப்பங்களுடன் தொடர்புடையவையாக காணப்பட்டதுடன் வர்த்தக சின்ன பதிவு செயன்முறையின் தன்மை மற்றும் சிக்கலான தன்மை காரணமாக மேற்படி தாமதம் ஏற்பட்டதாக பணிப்பாளர் நாயகம் கருத்து | புலமைச் சொத்து சட்டத்தின் 118(1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் வர்த்தக சின்னத்தின் செல்லுபடியாகும் காலப்பகுதி பதிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 10 ஆண்டுகள் வரை வரையறுக்கப்பட்டுள்ளதால் பதிவு | நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் ஏற்பட்ட விடயங்கள் காரணமாக தாமதங்களுடன் மேற்கொள்ளப்படும் பதிவுகளை துரிதப்படுத்துவதற்கு வர்த்தக முத்திரைப் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது. | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பதிவுகள் அதிகரித்துள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தெரிவித்திருந்திருந்தார். எனினும், புலமைச் சொத்து சட்டத்தின் 118(1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் வர்த்தக சின்னமொன்றின் செல்லுபடியாகும் காலம் பதிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 10 ஆண்டுகள் வரை வரையறுக்கப்பட்டுள்ளதுடன் பதிவிற்காக விண்ணப்பிக்கும் திகதியிலிருந்து செல்லுபடியாகக்கூடியவாறு பதிவு வழங்கப்பட்டிருந்ததால் அவ் வர்த்தக சின்னங்கள் பதிவுசெய்யும் நேரத்திலும் காலாவதியாகியிருந்தன. | செய்வதற்காக விண்ணப்பித்த திகதியிலிருந்து செல்லுபடியாகக் கூடியவாறு பதிவு வழங்கப்பட்டிருந்ததால் அத்தகைய தாமதங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | | |
| (ஈ) | 2020 ஆம் ஆண்டின் போது வர்த்தக சின்ன பதிவிற்காக பெறப்பட்ட 9,593 விண்ணப்பங்களில் 6,294 விண்ணப்பங்களின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது வர்த்தக சின்னம் பதிவுசெய்யப்படும் நிலையை அடைந்திருக்கவில்லை. | ஆண்டின் போது பெறப்பட்ட விண்ணப்பங்கள் அந்த ஆண்டிலேயே பதிவு செய்யப்படும் நிலை வரை கையாளப்பட வேண்டும். | கோவைகளை டிஜிட்டல் மயமாக்குதல், கோவைகளை பௌதீக ரீதியாக அகற்றுதல், செயற்படாமல் இருந்தவை மற்றும் புதுப்பிக்கப்படாத செயற்பாடுகளுக்கு மூன்று செயற்திட்டங்கள் தனித்தனியாக இனங்காணப்பட்டுள்ளன. | இனங்காணப்பட்ட மூன்று செயற்திட்டங்களும் 2022 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | காப்புரிமத்திற்காக (patent) விண்ணப்பங்களை மேற்கொள்ளும் ஆண்டில் காப்புரிமங்களை வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 273 காப்புரிமங்களில், 258 காப்புரிமங்கள் 2008 முதல் 2018 வரை மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு உரியதாகும். அதற்கிணங்க அதிக தாமதத்திற்குப் பின்னர் காப்புரிமங்கள் வழங்கப்பட்டிருந்தன. | காப்புரிமத்திற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | குழுக்களை நியமிப்பதன் மூலம் சான்றிதழ் வழங்குவதற்காக வாரக்கணக்கில் வைத்திருக்கப்படும் காலதாமதத்தை தவிர்ப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும். | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தற்போது அதிக சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. |

## 18. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் - தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | நிதியத்தின் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய வகையில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் இலங்கை சுகாதார சேவையை மேம்படுத்துவதற்காக நிதியத்தின் பொது நிதிகள் பயன்படுத்தப்பட வேண்டிய முறை தொடர்பாக நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2020 சனவரி 01 இல் உள்ளவாறு பொது நிதியத்தில் காணப்பட்ட செலவு மீதி ரூபா 411,069,837 ஆக காணப்பட்டதுடன் ஆண்டின் போது ரூபா 144,191,754 தொகை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இதனால் பயன்படுத்தப்படக்கூடியதாக இருந்த நிதிகள் ரூபா 555,261,591 ஆக | நிதியத்தின் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்ளக்கூடியவாறு திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். | தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்கு பெறப்பட்ட பணம், அவை பெற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டிலேயே பயன்படுத்தப்படாததுடன் தேசிய பாதீடு மூலம் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாத அவசரத் தேவைகளுக்காக நிதியத்தால் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படுகிறது. | இந் நிலைமை 2022 சனவரி 31 வரையிலும் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணப்பட்ட போதிலும் அவற்றில் ரூபா 49,280,114 தொகை மாத்திரம் 2020 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், நிதியத்திற்கு சொந்தமான பொது நிதிகளின் பயன்பாடு 9 சதவீதமாக மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | | | |
| (ஆ) | சுகாதார அமைச்சினால் நிறைவேற்றப்பட்டிருக்காத மத்திய அரசாங்கத்திற்குரிய வைத்தியசாலைகள் மற்றும் மாகாண மற்றும் மாவட்ட வைத்தியசாலைகளின் மருத்துவ உபகரணத் தேவைப்பாடுகள் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 9,845 மில்லியன் மற்றும் ரூபா 2,131 மில்லியன் தொகைகளாகும். இதற்கு மேலதிகமாக பொது வைத்தியசாலைகள் மற்றும் 11 தள வைத்தியசாலைகளில் 130 அத்தியாவசிய மருத்துவ உபகரணங்களிற்கும் 13 பணிகள் மற்றும் நடவடிக்கைகளிற்கும் தேவைப்பாடு காணப்பட்டது. எனினும், அக் குறைபாடுகள் தொடர்பாக கண்டறிந்து முன்னுரிமை | சுகாதாரத் துறையின் தேவைப்பாடுகளை எதிர்கொள்வதற்கு நிதியத்தில் காணப்படும் பொது நிதிகளை பயன்படுத்துவதற்கான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட வேண்டும். | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அநேகமான மருத்துவ உபகரணங்கள் திறைசேரியிடமிருந்து மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்தி வழங்கப்பட்டுள்ளன. | 2022 சனவரி 31 வரையிலும் இந் நிலைமையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அடிப்படையில் பொது நிதிகளை பயன்படுத்தி ஆகக் குறைந்தது அத் தேவைப்பாடுகளின் பகுதியொன்றை எதிர்கொள்வதற்கு நிதியத்தில் நடைமுறையொன்று காணப்படவில்லை. | | | |
| (இ) | நிதியத்திற்கு 1996 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை 11 குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக கிடைத்திருந்த ரூபா 8.09 மில்லியன் நன்கொடைகள் 3 வருடங்கள் முதல் 17 வருடங்கள் வரையான காலவீச்சில் குறித்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதியத்திற்கு நன்கொடைகளாக கிடைத்திருந்த பணத்தை பயன்படுத்தி குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந் நன்கொடைகளை பயன்படுத்தி குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு உரிய நிறுவனங்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 2022 சனவரி 31 வரையிலும் இந் நிலைமை சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | அரசாங்க வைத்தியசாலைகளிற்கு அத்தியாவசியமான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் அவ் வைத்தியசாலைகளின் திருத்தங்களிற்கும் தேவையான நிதிகளை திரட்டும் நோக்கில் சுகாதார அபிவிருத்தி லொத்தர் 1998 செப்தெம்பர் மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. ஒவ்வொரு சீட்டிழுப்பு நிகழ்விற்கும் முன்னர் ஒவ்வொரு சீட்டிழுப்பிலிருந்தும் நிதியத்திடம் | சுகாதார அபிவிருத்தி லொத்தரின் மூலம் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு குறித்த நிதிகள் பயன்படுத்தப்பட வேண்டும். | எதிர்வரும் வருடங்களில் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | இந் நிலைமை 2022 சனவரி 31 வரையிலும் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அடைந்துகொள்ளப்பட்ட நோக்கம் இனங்காணப்பட்டு வெளிப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும் எனினும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டு முதல் 2020 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியின் போது பெறப்பட்ட ரூபா 399,767,068 தொகையான லொத்தர் வருமானத்தில் வைத்தியசாலைகளுக்கு உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் வைத்தியசாலைகளின் திருத்தங்கள் போன்ற நோக்கங்களிற்கு முறையே ரூபா 20,578,392 மற்றும் ரூபா 86,344,001 தொகைகள் மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் இது மொத்த லொத்தர் வருமானத்தில் 21 சதவீதத்தை மாத்திரமே பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. | | | | |
| (உ) | இலங்கை தேசிய கண் வங்கியை நம்பிக்கைப் பொறுப்பாக நிறுவும் வரை செயற்திட்டம் ஒன்றாக அதன் செயற்பாடுகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக 2007 | 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையி | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை தேசிய கண் வங்கியை ஸ்தாபிப்பதற்கு பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நியதிகள் விதிக்கப்படும் வரை இலங்கை தேசிய கண் | 2022 சனவரி 31 வரையிலும் தேசிய கண் வங்கி நம்பிக்கைப்பொறுப்பு ஒன்றாக நிறுவப்பட்டிருக்கவில்லை. வங்கி செயற்திட்டமொன்றாக கருதப்பட முடியாது | |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்து அவர்களிற்கு சம்பளங்களை செலுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. எனினும் 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 1.1 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கை தேசிய கண் வங்கியை செயற்திட்டம் ஒன்றாக கருத்தில் கொள்வதற்கு தேவையான நிபந்தனைகளை பூர்த்தி செய்திருக்காத காரணத்தினால் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட முடியாதிருந்தது. | ன் பிரகாரம் தேசிய கண் வங்கியை செயற்திட்டம் ஒன்றாக கருத முடியாததுடன் அதன் பிரகாரம் பதவியணியினரை சேரத்துக்கொள்ள முடியாது என்பது தொடர்பாக அமைச்சரவைக்கு தெரியப்படுத்த வேண்டியிருந்தது. மேலும் அது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய மாற்று நடவடிக்கை தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வங்கியின் செயற்பாடுகளை செயற்திட்டமொன்றாக தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. | என்பதால், அதற்கான பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்ய முடியாது என்பது தொடர்பாக அமைச்சரவைக்கு தெரியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | இலங்கை தேசிய கண் வங்கியினை செயற்திட்டமொன்றாக கருதுவதற்கான தேவைப்பாடு பூர்த்தி செய்யப்படாத நிலையில் 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டின் போது கௌரவ படிகள் மற்றும் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக படிகளை கொடுப்பனவு செய்தல் தவிர்க்கப்பட வேண்டும். மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்கு தாபன பணிப்பாளரின் அங்கீகாரத்தை | செயற்திட்ட படிகள் மற்றும் கௌரவ (honour) படிகள் முறையே 2021 சனவரி மற்றும் 2021 ஆகஸ்ட் முதல் நிறுத்தப்பட்டுள்ளன. | மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு அல்லது அறவீடு செய்யப்படுவதற்கு 2022 சனவரி 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயற்திட்ட படிகளாக 29 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3,355,168 தொகையானது செலுத்தப்பட்டிருந்தது. | பெற்றுக்கொள்வதற்கு அல்லது அறவீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | | |
| (எ) | தேசிய கண் வங்கியை அபிவிருத்தி செய்வதற்காகவும் திறமையான கண் பதவியணியினரை உருவாக்குவதற்காகவும் 5 ஆண்டு காலப்பகுதிக்கு ஐக்கிய அமெரிக்க அரசின் Seattle WA இல் அமைந்துள்ள Sight Life (SL) நிறுவனத்துடன் சுகாதாரம் போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சானது உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்தது, எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு தீவின் முக்கிய வைத்தியசாலைகளில் கண் வங்கியின் கிளைகளை ஸ்தாபித்து கருவிழியின் தேவைப்பாட்டை வழங்கும் இலக்கிற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்காதமை மற்றும் போதுமான | தேசிய கண் வங்கியின் அபிவிருத்திக்கான வெளிநாட்டு உதவி வழங்கல் தொடர்பாக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | உடன்படிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கத் தவறியதன் காரணமாக ஐ.அ.டொலர் 14,000 நட்டம் தொடர்பாக 2022 சனவரி 31 வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயலாற்றல் பேணப்படாதமை போன்ற காரணிகள் காரணமாக ஐ.அ.டொலர் 14,000 தொகையினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | | | |
| (ஏ) | நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகளுடன் இணங்க கூடிய வகையில் வெளித்தரப்பினர்களுக்கு நிதிசார் உதவியை வழங்குவதற்கான அடிப்படையொன்றும் குறித்துரைக்கப்பட்ட கொள்கையொன்றும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. 14 எண்ணிக்கையான பல்வேறு சங்கங்களுக்கும் நிறுவனங்களுக்கும் நிதிய சட்டத்தின் 7 ஆம் பிரிவில் நிர்ணயிக்கப்பட்ட தொழிற்பாடுகளின் நோக்கெல்லையில் உள்ளடக்கப்படாத தொழிற்பாடுகளுக்கு 2018 ஆம் ஆண்டின் போது மாத்திரம் ரூபா 21,044,400 நிதி உதவி வழங்கப்பட்டிருந்தது. | நிதிய சட்டத்தின் தொழிற்பாடுகளின் நோக்கெல்லையில் உள்ளடக்கப்பட்டிருக்காத நோக்கங்களுக்காக நிதி உதவி வழங்கப்படக்கூடாது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டில் பல்வேறு சங்கங்களிற்கு நிதி உதவி வழங்கப்பட்டிருந்தது. |
| (ஐ) | தனிப்பட்ட மட்டத்திலுள்ள நோயாளிகளுக்கு உதவி வழங்குவதற்கு நிதிய சட்டத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க | நிதிய சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட தொழிற்பாடுகளின் நோக்கெல்லை | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டிலும் தனிப்பட்ட மட்டத்திலுள்ள நோயாளிகளுக்கு நிதி உதவி வழங்கப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ாத போதிலும் 2018 ஆம் ஆண்டின் போது 12 நோயாளிகளுக்கு ரூபா 11,029,810 நிதி உதவி வழங்கப்பட்டிருந்தது. | யில் உள்ளடக்கப்பட்டிருக்காத நோக்கங்களுக்காக நிதி உதவி வழங்கப்படக்கூடாது. | | |
| (ஒ) | மஹரகம அபேக்சா வைத்தியசாலைக்கு Tomotheraphy linear Accelerator ஐ கொள்வனவு செய்வதற்காக நிதியத்தின் கீழ் அபேக்சா வைத்தியசாலையின் பெயரிலுள்ள வங்கிக் கணக்கிற்கு பொதுமக்கள் நன்கொடைகளை சேகரிக்கும் நோக்கத்துடன் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரும், நிதியத்தின் சார்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமும் Fight Cancer Trust (Guarantee) Ltd. உடன் சேர்ந்து திகதி குறிப்பிடப்படாத கருத்துக் கடிதம் ஒன்றை கையொப்பமிட்டிருந்தனர். எவ்வாறாயினும் Fight Cancer Trust (Guarantee) Ltd. சமூக சேவைகள் மற்றும் பொது வசதிகளை | உடன்படிக்கைகள் மற்றும் விஞ்ஞாபனங்களை கைச்சாத்திடுவதற்கு முன்னர் குறிப்பிட்ட வெளி நிறுவனங்களின் சட்ட நிலைமை பற்றி கவனம் செலுத்தப்பட வேண்டும். இணங்கிய விடயங்களுக்கு அமைவாக புரிந்துணர்வு விஞ்ஞாபனம் ஒன்றினை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நேரடி வைப்புக்களை மேற்கொள்வதற்கு நன்கொடையாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். மேற்குறிப்பிட்டதற்கு முரணாக | பதில் சுகாதார செயலாளர் 2019 ஏப்ரல் 01 இல் கருத்துக் கடிதத்தை கையொப்பமிட்டிருந்தமை, நிதியம் சார்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கையொப்பமிட்டிருந்தமை, பிரதேசத்தில் உள்ள அனைத்து பொதுமக்களும் வங்கிக்கு பணத்தை நேரடியாக வைப்புச்செய்ய முடியாததால் கிந்தோட்ட அபிவிருத்தி மன்றத்தினால் பணம் சேகரிக்கப்பட்டு நேரடியாக அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தமை மற்றும் குறித்த பணம் நேரடியாக வங்கிக்கு வைப்புச் செய்யப்பட்டிருந்தமை என்பனவாகும். | 2022 சனவரி 31 வரையிலும் இந் நிலைமையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

வழங்குவதற்கான புண்ணிய நோக்கங்களுடன் தொடர்புடைய நிறுவனம் ஒன்றாக சமூக சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றாக காணப்படவில்லை. கையொப்பமிடப்பட்ட கருத்துக் கடிதத்தின் திகதி மற்றும் அதன் செல்லுபடியாகும் திகதி சரிபார்க்கப்பட்டிருக்காத துடன் குறித்த கடிதத்தின் முதலாவது விடயத்தின் பிரகாரம் தொடர்புடைய மூன்று தரப்பினரினாலும் 2020 ஆகஸ்ட் 31 வரையிலும் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் ஒன்று கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. அக் கடிதத்தின் மூன்றாவது விடயத்தின் பிரகாரம் வங்கிக் கணக்கில் நன்கொடையாளர் நேரடி வைப்புக்களை மேற்கொள்வதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக Fight Cancer Guarantee Trust இன் வழிகாட்டலின் கீழ் வீட்டுக்கு வீடு சென்று பொதுமக்கள் நன்கொடை சேகரிக்கப்பட்டிருந்ததுட ன் அவ்வாறு சேகரிக்கப்பட்டதென குறிப்பிடப்பட்டிருந்த

மேற்கொள்ளப் படும் விடயங்கள் தொடர்பான பொறுப்புக்கை ள தவிர்ப்பதற்கு அரசாங்க உத்தியோகத்த ர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 255,500 தொகை வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | | | |
| (ஓ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டல்களை பின்பற்றுவதன் மூலம் பெறுகைத் தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக பெறுகை செயன்முறை எதனையும் பின்பற்றாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 9.20 மில்லியன் தொகை செலவிடப்பட்டு தேசிய கண் வங்கிக்காக 480 அலகுகள் Cornea Storage Media Sterile (Vial) ஐ கொள்வனவு செய்வதற்கும் 2019 சனவரி முதல் ஒக்தோபர் வரையான காலப்பகுதியின் போது தனியார் ஆய்வுகூடம் ஒன்றிற்கு ரூபா 2.18 மில்லியன் தொகை செலவிடப்பட்டு பரிசோதிக்கப்பட்ட கண் தானம் செய்வோரின் குருதி மாதிரிகளை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2019 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக ஆய்வுகூட | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கண் வங்கிக்காக Cornea Storage Media Sterile (Vial) ஐ கொள்வனவு செய்வதற்காகவும் குருதி மாதிரிகளை பரிசோதனை செய்வதற்காகவும் வழங்குனர்களை தெரிவு செய்வதற்காக தேசிய கண் வைத்தியசாலையின் பெறுகைக் குழுவினால் 2020 ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாகும். | 2022 சனவரி 31 வரையிலும் இந் நிலைமையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பரிசோதனைகளுக்காக ஆய்வுகூடம் ஒன்றை தெரிவு செய்வதற்காக திறந்த விலைமனுக்கள் கோரப்பட்டிருந்த போதிலும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.8.5(ஆ), 5.3.1, 5.3.11, 5.3.13, 5.3.19, 6.3.3, 6.3.6, 7.9.11 மற்றும் 7.11.1 ஆகிய வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டிருக்காததுடன் அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட ஆய்வுகூடங்களுக்கு குறித்த இரண்டு மாதங்களினுள் ஆய்வுகூட பரிசோதனைகளுக்காக ரூபா 862,750 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| (ஔ) | 2020 ஆம் ஆண்டிலிருந்து 4 முதல் 8 வருடங்கள் வரையான காலப்பகுதியின் போது பெறவேண்டிய ரூபா 1,382,346 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதிகள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நீண்ட காலமாக அறவிடப்பட முடியாதிருந்த குறித்த தொகையை அறவீடு செய்வதற்கு அல்லது அறவிடப்படாதமைக்கு பொறுப்பான தரப்பினர் காணப்பட்டால் அவர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை | செலிங்கோ இன்சுரன்ஸ் பிஎல்சீயால் வழங்கப்பட்ட செயலாற்றல் பிணைமுறிக்குரிய ரூபா 1,372,346 பெறுமதியை அறவீடு செய்வதற்காக உரிய தரப்பினர்களிற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | செயலாற்றல் பிணைமுறியை அறவீடு செய்வதற்கு அல்லது அவை அறவிடப்படாதமைக்கு பொறுப்பாகவுள்ள தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எடுக்கப்பட வேண்டும். | | |
| (க) | 2020 ஆம் ஆண்டிற்கான கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்டப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த 13 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 2.3 மில்லியன் தொகையை நன்கொடையாளர் நிறுவனங்களிற்கு மீளளிப்பதற்கு அல்லது பொது நிதியத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களுக்குரிய புரிந்துணர்வு விஞ்ஞாபனங்களின் பிரகாரம் அல்லது இணக்கியவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இல்லையெனில் எஞ்சிய பணம் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் பொது நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். | செயற்திட்டப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த செயற்திட்டங்களுக்குரிய மிகுதி நன்கொடைகள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பொது நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2022 சனவரி 31 வரையிலும் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (கா) | 10 புதிய ஆயுர்வேத உற்பத்திப்பொருட்களை திறந்த சந்தைக்கு அறிமுகப்படுத்தி பிரபல்யப்படுத்தும் செயற்திட்டத்திற்காக ரூபா 15 மில்லியன் தொகையொன்று ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அந் நோக்கத்திற்காக மாதாந்தம் ஒவ்வொரு உற்பத்தி அலகின் இலாபத்திலும் 10 சதவீதத்தை செலவு வைப்பதற்கு கொள்கையொன்றாக கூட்டுத்தாபனம் | ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நிதியத்திற்கு பெறப்பட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டுக்குரிய பணத்தை செலுத்துமாறு நினைவுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | 2022 சனவரி 31 வரையிலும் எஞ்சியுள்ள பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

இணங்கியிருந்தது. 2015 யூன் மாதம் முதல் 2019 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது கூட்டுத்தாபனத்தினால் நிதியத்திற்கு ரூபா 1,260,427 தொகை மாத்திரம் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிற்கு உரியதாக கூட்டுத்தாபனத்திடமிருந்து எந்தவொரு பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 19. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் - சுங்க மேலதிக நேர வேலை, கப்பல் சரக்குகளை பரீட்சித்தல் கட்டணம் மற்றும் சுங்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | ------------------- | ------------- | -------------------- | --------------------- |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 245 மற்றும் 257 இன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் போது 10 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை பயன்படுத்தி ரூபா 1,644,200 கூட்டுமொத்தமான செலவினங்கள் சான்றுறுதிப்படுத்தப்படாமல் செலுத்தப்பட்டன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நேரடியாக அறவீடு செய்யப்பட்ட வங்கிக் கட்டணங்களிற்குரிய 8 உறுதிச்சீட்டுக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீதமுள்ள இரண்டு உறுதிச்சீட்டுக்களும் சான்றுறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் கொவிட் தொற்றுநோய் காரணமாக கூட்டுத்தாபனம் மூடப்பட்ட காலப்பகுதியின் போது குறிப்பை அங்கீகரித்து உறுதிச்சீட்டில் கையொப்பமிட மறந்துபோய் விடப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இது சரியாக செய்யப்படும். | இது காலக்கிரமத்தில் சீர்செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டங்கள், சேமிப்பு அல்லது சிக்கனச் சங்கங்கள் மற்றும் ஏனைய ஒத்த திட்டங்களை நிறுவுதல் மற்றும் அவர்களுக்கு வீடமைப்பு வசதி அல்லது ஏனைய ஒத்த நலன்களை வழங்குதல் போன்ற நம்பிக்கைப்பொறுப்பின் முக்கிய நோக்கங்களிற்கு நிதியளிப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நம்பிக்கைப் பொறுப்பின் முக்கிய நோக்கங்களுக்கு நிதியளிப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். | நிதிகள் திரட்டப்பட வேண்டியதுடன் அதற்காக நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் கவனம் செலுத்தப்படும். | எதிர்காலத்தில் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் கவனம் செலுத்தப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர் களுக்கான ஓய்வூதியமாக மீளாய்வாண்டில் ரூபா 5,643,000 கூட்டுமொத்த தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 வரையிலும் நம்பிக்கைப் பொறுப்பின் நடவடிக்கைகளிற்காக நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் சேமிப்பு நிதிகள், சிக்கனச் சங்கங்களை நிறுவுதல், கடன்களை வழங்குதல் மற்றும் பயனாளிகள் சார்பாக வீடமைப்பு வசதிகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | சேமிப்பு நிதிகள், சிக்கனச் சங்கங்களை நிறுவுதல், பயனாளிகளுக்கு கடன் மற்றும் வீடமைப்பு வசதிகளை வழங்குதல் போன்றவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | -மேற்படி- | -மேற்படி- |
| (ஏ) | நம்பிக்கைப் பொறுப்பின் 3.3.5 ஆம் இலக்க விதியின் பிரகாரம் ஓய்வூதியர் ஒருவர் வெவ்வேறு முறையில் ஓய்வூதிய நலன், சேமலாப நிதி அல்லது உதவி தொகையொன்றை பெறுகின்ற போது ஓய்வூதிய நலன்களை | நலன்களை பெற்றுக்கொள்வதற்கு தகுதியுடைய பயனாளிகள் இனங்காணப்பட வேண்டும். | புதிய ஓய்வூதியர்களை தெரிவுசெய்யும் போது அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | நம்பிக்கைப் பொறுப்பின் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

பெற்றுக்கொள்வதற்கு அவரிற்கு உரித்தில்லாத போதிலும் நம்பிக்கைப் பொறுப்பினால் ஓய்வூதிய நலன்கள் செலுத்தப்பட்டிருந்த கலைஞர்கள் தொடர்பில் அவ் விதியின் பிரகாரம் தகவலை சேகரிப்பதற்கு அல்லது பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 29. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் - வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியம் (மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்)

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - மறுப்பு அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் ரூபா 38,335,003 கூட்டுமொத்த தொகை திறைசேரியில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் ரூபா 22 மில்லியன் முதல் ரூபா 58 மில்லியன் வரையான வீச்சில் மாதாந்த மிகையொன்று சேமிப்புக் கணக்கில் காணப்பட்ட போதிலும் பொருத்தமான முறையொன்றில் குறித்த மீதியை திரட்டிய நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிகை விடயத்தில் 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பிஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அத்தகைய மிகையை திரட்டிய நிதியத்திற்கு செலவு வைப்பதற்கான சாத்தியத்தன்மை தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2011 இன் 04 ஆம் இலக்க மோட்டார் வாகன போக்குவரத்து பிரமாணங்களின் (வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியம்) (அத்தி. 203) 03(2) ஆம் பிரமாணத்தின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த வருமானத்தில் 05 சதவீதத்திற்கு சமமான மிகைப் பணம் நிதியத்தில் சேமிக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டதைத் தவிர தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒருங்கிணைந்த நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2011 இன் 04 ஆம் இலக்க மோட்டார் வாகன (வெகுமதி மற்றும் ஊக்குவிப்பு நிதியம்) பிரமாணங்களின் 03(1) ஆம் பிரமாணத்தின் பிரகாரம் வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்புக் | நிதியத்தின் பிரதான நோக்கங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளருடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுப்பதற்காக 2021.10.26 இல் மோட்டார் வாகன | குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கொடுப்பனவுகளுக்காக தகைமைபெறும் நான்கு பணிகள் குறிப்பிடப்பட்டிருந்தன. எனினும், நிதியத்தின் ஆரம்பம் முதல் வெகுமதிகளுக்காக அப் பணிகளில் 03 பணிகளுக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் நிதியத்திற்கு கிடைத்த வருமானம் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளாக பதவியணியினருக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அந்த பணிகளுக்காக வெகுமதிகளை வழங்கும் நடைமுறையொன்று அமுல்ப்படுத்தப்பட்டால் தவறுதலாக வாகனங்களை தயாரித்தல் மற்றும் வாகனங்களுக்கு மேற்கொள்ளப்படும் தீந்தை பூசுதல்கள் மற்றும் மாற்றங்கள் ஆகியவற்றை குறைத்துக்கொள்ளும் சாத்தியத்தன்மையொன்று காணப்படுகின்றது. | | போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர் (தொழில்நுட்பம்) மற்றும் சட்ட உத்தியோகத்தர்கள் உள்ளடங்கிய விசேட மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | சட்ட வரைஞர் திணைக்களம் வெகுமதிகள் மற்றும் விசேட மதிப்பீடுகளுக்காக மோட்டார் வாகன (மிகை அறவீடுகள்) பிரமாணத்தை | நிதியத்தின் பிரதான நோக்கங்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்பட | -மேற்படி- | பிரமாணங்களை உருவாக்கி மேலதிக கட்டணங்களை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

வரைந்து 2017 மே 02 வேண்டும்.
இல் அனுப்பியிருந்தது. எனினும், மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அவ்வாறு கட்டளைகளை தயாரித்து மிகை அறவீடுகளை விதித்தல் அந்த சட்டத்தின் சில பிரிவுகளுடன் இணங்காதிருந்தமையால் உரிய பிரமாணங்களை தயாரித்து மிகை அறவீடுகளை விதிக்கும் பணியை அமுல்ப்படுத்த முடியாதிருந்தது.

## 30. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் - விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | -------------------- | -------------------- | ------------------------- | ------------------------ |
| (அ) | நிதியத்தால் நியமிக்கப்பட்ட பொருள் மெய்மையாய்வுச் சபையினால் 2018 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட மெய்மையயாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 7,241,656 தொகையான சேமிப்பு கணக்கு மீதி அறவிடப்பட வேண்டிய மீதியாக மாற்றப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. | இம் மீதியை உறுதிப்படுத்திய பின்னர் கணக்கிற்கு எடுப்பதற்கு அல்லது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சீர்செய்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சேமிப்புக் கணக்கு மீதியொன்றாக மேலும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. |
| (ஆ) | விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஸ்தாபிக்கப்பட்டதன் மூலம் நம்பிக்கைப் பொறுப்பு உரித்துறுதியின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காகவும் சிறிய விவசாயிகளின் விவசாய அபிவிருத்தி மற்றும் நலன்களுக்காகவும் நிதியம் | பணம் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய உரித்துறுதியின் நோக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டிய பணம் 2020 ஆம் ஆண்டிலும் நிலையான வைப்புக்களில் வைப்பிலிடப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடங்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 755,001,919 மற்றும் ரூபா 93,513,941 தொகைகள் 2019 ஆண்டின் போது முறையே நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 131,781,727 தொகை மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அந் நிதிகளை போதுமானளவு பயன்படுத்துவதற்கு பதிலாக அவற்றிலிருந்து வட்டி வருமானமாக உழைக்கப்பட்டிருந்தது. | | | |
| (இ) | பிணையொன்று பெறப்படாமல் Carbonic Red Lady பப்பாசிப் பயிர்செய்கைக்காக மொறகொல்லகமவில் விவசாயி ஒருவருக்கு 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ரூபா 1,000,000 தொகை விடுவிக்கப்பட்டிருந்தது டன் செயற்திட்டத்தில் முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லையென களப்பரீட்சிப்பு அறிக்கையின் போது அறிக்கையிடப்பட்டிருந் | கடன் தவணைப்பணத் தை அறவீடு செய்வதற்கு அல்லது சட்ட நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடன்களை அறவீடு செய்வது தொடர்பாக விவசாய வங்கிக்கு விளக்கமளிக்கப்பட்டுள் ளது. | 2020 ஆம் ஆண்டில் விவசாய வங்கியினால் நிறுத்திவைக்கப்பட்ட ரூபா 150,000 தொகை மாத்திரமே மீளளிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | த போதிலும் 2019 திசெம்பர் வரையிலும் கடன் தவணைப்பணத்தை அறவிடுவதற்கு நிதியம் தவறியிருந்ததுடன் விவசாய வங்கியால் நிறுத்திவைக்கப்பட்ட ரூபா 150,000 வைப்பொன்று மாத்திரம் நிதியத்தால் அறவீடு செய்யப்பட்டிருந்தது. | | | |
| (ஈ) | நுவரெலியா மாவட்டத்திலுள்ள வலப்பனேயில் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை செயற்திட்டத்திற்காக 24 மாதங்களினுள் தீர்ப்பனவு செய்யும் உடன்படிக்கை தொடர்பாக 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,000,000 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 500,000 தொகை அங்கீகரிக்கப்பட்டு உரிய செயற்திட்டத்தின் உரிமையாளருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. குறித்த செயற்திட்டம் வெற்றிகரமாக அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை என கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரின் செயலாற்றல் அறிக்கை வெளிப்படுத்தியிருந்ததுடன் இதனால் மிகுதித் தொகை | கடன் தவணைப்பணத்தை அறவீடு செய்வதற்கு அல்லது அவை தொடர்பாக சட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் மற்றும் தவணைப்பணத்தை அறவீடு செய்வதற்கு 2020 ஆம் ஆண்டு வரை நிதியம் நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் நிதியம் ரூபா 500,000 கடனையும் அதன் மீதான வட்டியையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | |
| (உ) | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1 இன் 150 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் சட்ட ரீதியான தன்மை, நிறுவன செயற்பாடுகள் மற்றும் அதன் பிரதான நடவடிக்கைகளின் தன்மை மற்றும் நிறுவனத்தின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய நம்பிக்கைப் பொறுப்பு உறுதி என்பவற்றின் விபரம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் மூன்று நிலையான வைப்புக்களுக்குரிய 2018 ஆம் ஆண்டிற்கான ரூபா 7,794,456 தொகையான முதலீட்டு வட்டி வருமானம் 2020 ஆம் ஆண்டின் வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய கொடுக்கல் வாங்கல்களை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு வட்டி வருமானம் சரியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | நிதியத்திலிருந்து விவசாயி வங்கிகளை ஆரம்பிப்பதற்காக | நிதியாண்டிற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் | சீர்செய்வதற்கு முகாமைத்துவம் இணங்கியிருந்தது. | சீர்செய்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்டுள்ள கடன் தொகையின் ஆரம்ப மீதி ரூபா 190,313,579 ஆக காணப்பட்ட போதிலும் 2020 ஆம் ஆண்டின் போது வட்டியை கணிப்பீடு செய்த போது அது ரூபா 181,200,000 ஆகக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததால் கடன் வட்டி ரூபா 91,125 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக இனங்காணப்படுதல் வேண்டும். | | |
| (ஏ) | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் கணக்குகளிற்கான குறிப்புக்களின் பிரகாரம் கொவிசெத லொத்தர் வருமானம் ரூபா 4,710,479,333 ஆக காணப்பட்டதுடன் இது திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் ரூபா 4,688,745,587 ஆக காணப்பட்டதால் ரூபா 21,733,746 தொகையான விளக்கமளிக்கப்படாத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | வேறுபாட்டிற்கான காரணங்களை இனங்காண்பதன் மூலம் இது சீர்செய்யப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிலிருந்து திறைசேரி புத்தகங்கள் மற்றும் நிதியத்தின் புத்தகங்களிலுள்ள மீதிகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் ரூபா 7,923,175 மீதி தொடர்பாக | அம் மீதிகளை பரீட்சிப்பதன் மூலம் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வுச் சான்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிலிருந்து ஆவணச்சான்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உறுதிப்படுத்தல் கடிதங்கள் மற்றும் கடன்பட்டோர் வயதுப் பகுப்பாய்வு என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஒ) | பிரதி கமநல சேவைகள் ஆணையாளரிடமிருந்து (ஊவா) அறவிடப்பட வேண்டிய 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 1,467,176 கடன்பட்டோர் மீதி தொடர்பான மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | கணக்காய்வு சான்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |
| (ஓ) | 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்ட ரூபா 697,644 விவசாயிகளின் வைப்புக்கள் தொடர்பாக விபரமான வைப்பு பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |
| (ஔ) | 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 591,965 பங்குக் கணக்கு தொடர்பான பங்குதாரர் பதிவேடு கணக்காய்விற்கு | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (க) | 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கொவிசெத நிதியத்தின் ரூபா 159,399,408 மீதியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணச் சான்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகள் உறுதிப்படுத்தப் பட வேண்டும். | -மேற்படி- | -மேற்படி- |
| (கா) | மாவட்ட அலுவலகங்கள் மற்றும் விவசாயிகள் சங்கங்களிற்கு வழங்கப்பட்டுள்ள குறுங்கால கடன் மீதிகளில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 ஆண்டுகள் தொடக்கம் 20 ஆண்டுகள் வரையான வீச்சிலான காலப்பகுதியொன்றினை கடந்திருந்த ரூபா 27,502,498 தொகையான கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சீர்செய்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. |
| (கி) | 2018/2019 இல் உலகளாளிய சிறந்த விவசாய நடைமுறை GAP இன் பிரகாரம் பொலன்னறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள 3000 ஏக்கர் பரப்பளவிலான | பெண் விவசாயிகளிற்கு GAP சான்றிதழ் வழங்கப்பட வேண்டியதுடன் கடன் தொகையை அறவீடு | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | GAP சான்றிதழ் வழங்கப்பட்டிருக்காதது டன் கடன் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

வயல் காணிகளில் பயிரிடுதல், சர்வதேச நியமப்படுத்தல் நடைமுறைகள் தொடர்பாக விவசாயிகளிற்கு தெளிவூட்டுவதன் மூலம் பொருளாதார நலன்களை அடைந்துகொள்ளுதல் மற்றும் சிறந்த விவசாய நடைமுறையை பின்பற்றுதல் ஆகிய நோக்கங்களுடன் ஸ்தாபிக்கப்பட்ட ரண் கெவிலிய சமூக தொழில் முயற்சிகள் பொதுக் கம்பனிக்கு விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஓராண்டு காலப்பகுதிக்குள் செலுத்தும் அடிப்படையில் ரூபா 5.9 மில்லியன் தொகையான வட்டியற்ற கடனை விடுவித்திருந்தது. செயற்திட்ட காலப்பகுதியின் பிரகாரம் 2019 மார்ச் அளவில் பெண் விவசாயிகள் சார்பில் GAP சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 2020 யூன் வரையிலும் தனியொரு பெண் விவசாயியேனும் எதிர்பார்க்கப்பட்ட அளவை அடைந்து கொண்டிருக்கவில்லை அல்லது அதற்காக

செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்ட கடன் தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கீ) | ‘‘பிரயிம் ஹேப் லங்கா’’ எனும் பெயருடைய தனியார் கம்பனிக்கு 2003 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 3,500,000 தொகையான கடனில் ரூபா 860,000 தொகையானது இன்னும் அறவிடப்பட வேண்டியிருந்தது. இக்கம்பனி வணிக நடவடிக்கைகளை நிறுத்தியுள்ளதாகவும் கடனைப் பெற்றுக்கொண்ட நபர் மரணமடைந்துள்ளார் எனவும் நிதியத்திற்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனவே மேலும் கடனைச் செலுத்தும் இயலுமை தொடர்பாக நியாயமான பரிசீலனையை மேற்கொண்டு அதனை அறவீடு செய்வதற்கு அல்லது சட்ட நடவடிக்கையை எடுப்பதற்கு நிதியத்தால் எதுவித நடவடிக்கைகளும் 2020 திசெம்பர் 31 வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இக் கம்பனியின் வணிக நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டது மற்றும் இந்த கடனைப் பெற்ற நபரின் மரணம் தொடர்பாக நிதியத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அறவீடு செய்தல் அல்லது மேலதிக சட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்தல் தொடர்பாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கு) | 2002 ஆம் ஆண்டின் போது சுழற்சி நிதியத்தினையும் விவசாய நம்பிக்கைப் | கடன்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை | படிகளை செலுத்துவதன் மூலம் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை | சீர்செய்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொறுப்பு நிதியத்தினையும் ஒன்றிணைத்து விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை ஸ்தாபித்த போது குறித்த இரண்டு நிதியங்களில் காணப்பட்ட வரவு மற்றும் செலவு கடன் மீதிகள் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட சுழற்சி நிதியத்தின் ரூபா 44,255,850 தொகையான குறுங்கால கடன் மீதியை அறவீடு செய்வதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,490,000 தொகையான படிகளை செலுத்தி ஓய்வுபெற்ற 10 உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இன்னும் அறவிடப்படாத குறுங்கால கடன்கள் ரூபா 39,967,891 தொகையாகும். | எடுக்கப்பட வேண்டும். | உள்ளடக்கிய குழுவொன்று 2014 ஆம் ஆண்டில் நியமனம் செய்யப்பட்டிருந்தது. | |
| (கூ) | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 03(ஆ) பந்தியின் பிரகாரம் 2020 ஆம் | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக் கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சீர்செய்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கெ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியின் மூலம் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(அ) இன் பிரகாரம் சட்டம் காணப்படாத நியதிச்சட்ட மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களிற்கு சுற்றறிக்கை வழங்கப்பட்டு ஒரு ஆண்டிற்குள் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்ட சட்ட வரைபுக்கு நிதி அமைச்சரின் அபிப்பிராயத்துடன் மீண்டும் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்குமாறு 2016 ஒக்தோபர் 19 ஆம் திகதிய அமப/16/1866/728/041 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இது 2020 திசெம்பர் 31 வரையிலும் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வரைவு தொடர்பாக நிதி அமைச்சரின் அபிப்பிராயத்துடன் அமைச்சரவைக்கு மீள சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இது மீண்டும் அமைச்சரவை கருத்தில் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சரவையின் கலந்துரையாடலிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | விடயங்களை கருத்தில் கொள்வதற்காக அமைச்சரவைக்கு மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கே) | 2020 ஆம் ஆண்டிற்கான கண்காட்சிகள், விதை உற்பத்திகள், தேனீ பெட்டிகளின் தயாரிப்பு ஆகிய 44 மூலதனச் செயற்திட்டங்களுக்காக ரூபா 916,322,319 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 14 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான திட்டங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட முடியாதிருந்தது. |
| (கை) | 2008 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை நிதியத்திற்கு கொவிசெத லொத்தர் வருமானம் கிடைத்திருக்காததனால் நிதியத்தை தோற்றுவித்தமைக்கான பிரதான குறிக்கோள்களை அமுல்படுத்தும் எதிர்பார்ப்பினை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | கொவிசெத லொத்தர் வருமானம் நிதியத்தின் குறிக்கோளிற்காக பயன்படுத்தப்பட வேண்டும். | திறைசேரியானது 2020 ஆம் ஆண்டில் லொத்தர் வருமானத்தை கோரியுள்ளது. | 2021 ஆம் ஆண்டில் லொத்தர் வருமானத்திலிருந்து ரூபா 10,000,000 தொகை பெறப்பட்டிருந்தது. |
| (கொ) | விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தோற்றுவிக்கப்பட்ட 1994 மார்ச் 09 ஆந் திகதிய நம்பிக்கைப் பொறுப்பு | நிதி மற்றும் நிருவாக நடவடிக்கைகள் முறையாக முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்யத் தவறியமை காரணமாக கடன்கள் மற்றும் பல்வேறு செயற்திட்டங்களின் முகாமைத்துவம் |

உரித்துறுதியின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக பதவியணியினர்களை சேர்த்துக் கொள்ளக்கூடியதாக இருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததால் கடன்களை அறவீடு செய்யும் செயன் முன்னேற்றமானது குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை, தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணங்கள் காணப்பட்டமை, அறவிடப்படாத கடன்களை பதிவழிக்க நேரிட்டமை, நிதியத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களின் மேற்பார்வை மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை போன்ற பலவீனங்களின் காரணமாக 2020 ஆம் ஆண்டின் போது நிதியத்தின் நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளின் முகாமைத்துவமானது திருப்தியற்ற மட்டத்தில் காணப்பட்டது.

பலவீனமான நிலையில் உள்ளது.

## 31. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் - கூட்டுறவு மிகை நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - மறுப்பு அபிப்பிராயம்
2019 - மறுப்பு அபிப்பிராயம்
2020 - மறுப்பு அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | வரையறுக்கப்பட்ட இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்திற்கு 1992 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை ரூபா 143,919,037 தொகை கடன்களாக வழங்கப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 வரையில் ரூபா 24,891,113 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. மேலும் ரூபா 119,027,924 தொகை அறவிடப்பட வேண்டியதாக காணப்படுகின்றதுடன் இப் பழைய மீதியானது 05 தொடக்கம் 27 ஆண்டுகள் வரையான காலவீச்சில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | கடன்களை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன. | கடன் இதுவரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 21 ஆண்டு காலப்பகுதியொன்றில் முன்கொண்டுவரப்பட்ட தொங்கல் கணக்கில் | தொங்கல் கணக்கின் மீதியை இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்கு | விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. | இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ள ரூபா 9,475,735 தொகையான மீதியை இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | | |
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 583,184,797 தொகையான கூட்டுறவு சங்க கடன்கள், கூட்டுறவு நிதியத்திலிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 5,029,486 தொகை, பெறவேண்டிய ரூபா 81,871,370 தொகையான திறைசேரி கடன்கள், செலுத்த வேண்டிய ரூபா 150,000 தொகையான திறைசேரி நிதி மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 3,871,256 தொகையான தேசிய நம்பிக்கைப் பொறுப்பாளர் நிதி தொடர்பான மீதி உறுதிப்படுத்தல்கள், பொது வைப்பு கணக்கிலுள்ள ரூபா 10,779,292 தொகை தொடர்பான விபரமான பட்டியல்கள், ரூபா 58,918,112 தொகையான நிலையான வைப்பு | மீதி உறுதிப்படுத்தல், விபரமான பட்டியல்கள், கடன் கோவைகள் மற்றும் கலைத்தல் கணக்கின் பிரதி ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. | இவ் விடயம் இதுவரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உத்தரவாத கடன்கொடுத்தோர் தொடர்பான கடன் கோவைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் ரூபா 2,620,473 தொகைக்கு தயாரிக்கப்பட்ட கலைத்தல் (Liquidated) கணக்கின் (வரவு மீதி) பிரதி என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுபடுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது. | | | |
| (ஈ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 543,726,149 தொகையான செயற்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் கடன் மீதியில் ரூபா 22,611,959 தொகை மாத்திரமே 2020 ஆம் ஆண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், 2020 ஆம் ஆண்டின் போது பெறப்பட வேண்டிய ரூபா 164,595,101 கடன் வட்டியில் ரூபா 2,089,268 தொகை மாத்திரமே பெறப்பட்டிருந்தது. | கடன்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடன்களை அறவீடு செய்யும் முறையை வலுப்படுத்துவதற்காக கடன்களை மீளப்பட்டியலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டில் குறித்த கடன் மற்றும் அதற்கான வட்டியாக முறையே ரூபா 9,120,436 மற்றும் ரூபா 5,854,846 தொகைகள் பெறப்பட்டிருந்தன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2012 ஆம் ஆண்டில் குருணாகல் கோப்பரேட்டிவ் ஹொஸ்பிட்டல் சொசைட்டி லிமிட்டட்டிற்கு புதிய கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக குறித்த கடன் மீதிகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 100 மில்லியன் கடன் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் குறித்த கடனிலிருந்து ரூபா 1,898,184 தொகை மாத்திரமே அறவிடப்பட்டுள்ளது. | கடன்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. | இவ் விடயம் இதுவரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 210,802,293 தொகையான கடன் மற்றும் அது தொடர்பான ரூபா 87,119,041 தொகையான வட்டி என்பவற்றிலிருந்து எந்தவொரு தொகையையும் அறவீடு செய்வதற்கு 2020 ஆம ஆண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. | 2021 ஆம் ஆண்டில் கடன் தவணைப்பணம் மற்றும் அதற்கான வட்டியாக முறையே ரூபா 1,233,237 மற்றும் ரூபா 5,000,000 தொகைகள் பெறப்பட்டிருந்தன. |

## 32. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் - கூட்டுறவு அபிவிருத்தி நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 1999 மற்றும் 2000 ஆண்டுகளின் போது வட கிழக்கு மாகாணத்தின் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்கு முறையே ரூபா 15,000,000 தொகை மற்றும் ரூபா 4,500,000 தொகை கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. கடன்கள் வழங்கப்பட்டு 20 வருடங்கள் கடந்திருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றிலிருந்து ரூபா 14,575,000 மற்றும் ரூபா 4,475,000 கடன் மீதிகள் பெறப்பட வேண்டியிருந்ததுடன் பெறப்பட வேண்டிய கடன் வட்டி ரூபா 3,810,000 தொகையாக காணப்பட்டது. | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இக் கடன் மீதிகள் 20 வருடங்களுக்கும் மேலானவை என்பதால் கண்டறிவதில் உள்ள சிரமங்கள் காரணமாக மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. | இது வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | ரூபா 52,604,789 கூட்டுமொத்தமான 02 கடன் மீதிகள், ரூபா | மீதி உறுதிப்படுத்தல | விளக்கங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 45,525 தொகையான தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணங்கள் மற்றும் ரூபா 20,000 தொகையான ஏனைய நடைமுறை சொத்துக்கள் என்பவற்றிற்குரிய மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததால் கணக்காய்வின் போது அவற்றை சான்றுபடுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது. | பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | | லை. |
| (இ) | 54 செயற்பாடற்ற சங்கங்கள் மற்றும் 2 செயற்பாட்டில் உள்ள சங்கங்கள் தொடர்பாக முறையே ரூபா 31,287,451 மற்றும் ரூபா 3,016,480 உள்ளடங்கிய ரூபா 34,303,931 கூட்டுமொத்தமான நிலுவைக் கடன் மீதி மற்றும் ரூபா 7,704,272 வட்டி என்பன 2020 சனவரி 01 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டில் எந்தவொரு பணமும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. குறித்த கடன் மற்றும் வட்டி என்பன 2020 திசெம்பர் 31 வரையான 8 ஆண்டுகள் முதல் 56 ஆண்டுகள் | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொபேகனே பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு, ஏனைய சங்கங்களின் நிலைமை தொடர்பாக மாகாண ஆணையாளர்களின் பரிந்துரைகள் பெறப்பட்டுள்ளன. | இதுவரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வரையிலான காலப்பகுதியின் போது அறவிடப்படாத மீதிகளாக காணப்பட்டன. மேலும் 20 சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 8,450,900 தொகையான கடனில் கடன் தவணைப்பணம் எதுவும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், 2012 ஆம் ஆண்டில் கொபேகனே பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 3,000,000 கடன் 54 தவணைகளில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டில் குறித்த கடனில் ஒரு தவணைப்பணம் மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளது. | | | |
| (ஈ) | 1997 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்டு நடைமுறை சொத்துக்களின் கீழ் சுட்டிக்காட்டப்பட்ட ரூபா 2,666,000 தொகையான கூட்டுறவுப் பாடசாலைக் கடன், 2012 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து முன்கொண்டுவரப்பட்ட ரூபா 1,999,600 தொகையான | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. | தற்போது செயலாற்றல் முற்பணங்கள் மாத்திரம் மாதாந்தம் அறவீடு செய்யப்பட்டு வருகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயலாற்றல் முற்பணங்கள் மற்றும் பெறவேண்டிய ரூபா 1,184,000 தொகையான நீதிமன்ற நட்டஈடு என்பவற்றை 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (உ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 219,649,334 தொகையான பங்களிப்பு மீதி பெறப்பட வேண்டியிருந்ததுடன் அதில் உயர் சதவீதமான 73 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 161,338,906 தொகையானது எடியூகேசன் எம்பிளோயீஸ் கோப்பரேட்டிவ் சொசைட்டி லிமிட்டட்டிடமிருந்து பெறப்பட வேண்டியிருந்தது. அக் கடன் மீதிகள் ரூபா 28,794,753 கூட்டுமொத்தமான 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகளையும் 01 ஆண்டு தொடக்கம் 05 ஆண்டுகள் வரையான | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் பங்களிப்புக்களாக ரூபா 121,353,638 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காலப்பகுதியில் பெறப்பட வேண்டிய ரூபா 190,854,581 மீதியையும் உள்ளடக்கியிருந்தன. | | | |
| (ஊ) | கூட்டுறவு மொத்த விற்பனவு தாபனம் மற்றும் ஸ்ரீ லங்கா கோப்பரேட்டிவ் மாக்கற்றிங் அசோசியேஷன் லிமிட்டட் ஆகியவற்றிற்கு 2011 ஆம் ஆண்டில் முறையே ரூபா 152.5 மில்லியன் மற்றும் ரூபா 25 மில்லியனை நிதியம் வழங்கியிருந்தது. கூட்டுறவு மொத்த விற்பனவு தாபனத்திடமிருந்து 2012 ஆம் ஆண்டில் ரூபா 60 மில்லியன் தொகை மாத்திரமே அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 92.5 மில்லியன் தொகையாகும். | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. | ஸ்ரீ லங்கா கோப்பரேட்டிவ் மாக்கற்றிங் அசோசியேஷன் லிமிட்டட்டிடமிருந்து பெறப்பட வேண்டிய மீதி தற்போது ரூபா 200,000 தொகையாகும். |

## 33. கணக்காய்வுக்குட்பட்டு நிறுவனத்தின் பெயர் - சிரம வாசனா நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 58,900,000 ஆக இருந்ததுடன் இச் செலவினத்திற்காக திறைசேரியிடமிருந்து ரூபா 30 மில்லியன் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் அவ்வாறு பெற்றுக்கொண்ட பணத்தை ஊழியர்களினதும் அவர்களில் தங்கியிருப்பவர்களினதும் நலன்களை மேம்படுத்துவுதற்காக பாதீடு செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிற்கு பயன்படுத்தாமல் ரூபா 20 மில்லியன் தொகையானது மக்கள் வங்கியில் 11 சதவீதம் மற்றும் 10.5 சதவீதமான வட்டி விகிதத்தில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | ஊழியர்களினதும் அவர்களில் தங்கியிருப்பவர்களினதும் நலன்களை மேம்படுத்துவதற்காக நிதியத்தின் பணம் செயற்திறனாகவும், ஆக்கபூர்வமாகவும், சிக்கனமாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். | சிரம வாசனா நிதியச் சட்டத்தின் 07(02)(ஏ) பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் விருப்பப்படி பணத்தை முதலீடு செய்வதற்கு நிதியம் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் என்று விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. | இக் காலப்பகுதியில் லொத்தர் பெறுவனவுகள் வேகமாக குறைவடையும் நிலையில், நிலையான வைப்புக்களைப் பயன்படுத்தி நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்கான செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிதியத்தால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளில் ரூபா 2.41 மில்லியன் ஒதுக்கப்பட்ட ஏழு செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் தன்மை மற்றும் முன்னைய ஆண்டு மற்றும் 2019 ஆம் ஆண்டின் நோக்கெல்லையில் உள்ள குறைபாடுகள் காரணமாக குறித்த செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்பட முடியாதிருந்த போதிலும் அதனை கருத்தில் கொள்ளாமல் முகாமைத்துவத்தால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அவை தொடர்ச்சியாக உள்ளடக்கப்பட்டிருந்தன. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கும் அதேநேரம் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை உச்ச மட்டத்தில் அமுல்ப்படுத்துவதற்கு நிதியமானது ஒவ்வொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டும். | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் குறைவான செயலாற்றலைக் குறிக்கும் அந் நிகழ்ச்சித்திட்டங்களை மீளாய்வு செய்வதற்கு குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு அதன் அறிக்கை பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. | பணிப்பாளர் சபையால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஐந்தாண்டு கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், கொவிட்-19 தொற்றுநோயின் விளைவாக சுகாதார காரணங்களால் பல நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறையில் அமுல்ப்படுத்த முடியவில்லை. |
| (இ) | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 2019 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட மருத்துவ உதவியை வழங்குதல், செயற்கை கைகால்களை வழங்குதல் மற்றும் | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கும் அதேநேரம் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை உச்ச மட்டத்தில் | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் குறைவான செயலாற்றலைக் குறிக்கும் அந் நிகழ்ச்சித்திட்டங்களை மீளாய்வு செய்வதற்கு குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு அதன் அறிக்கை | பணிப்பாளர் சபையால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஐந்தாண்டு கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், கொவிட்-19 தொற்றுநோயின் விளைவாக சுகாதார காரணங்களால் பல நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறையில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | லொத்தர் விற்பனைகளை அதிகரித்தல் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையானது 85 ஆக இருந்ததுடன் அதற்காக மதிப்பிடப்பட்ட தொகையானது ரூபா 3.3 மில்லியனாகவிருந்தது. எனினும், அந் நிகழ்ச்சித்திட்டங்களில் 15 மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் நடாத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 1.3 மில்லியன் தொகை அதற்காக செலவிடப்பட்டிருந்தது. இதனால், பௌதீக செயலாற்றல் 17 சதவீதமாக காணப்பட்ட போதிலும் நிதிச் செயலாற்றல் 39 சதவீதமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | அமுல்ப்படுத்துவதற்கு நிதியமானது ஒவ்வொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டும். | பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. | அமுல்ப்படுத்த முடியவில்லை. |
| (ஈ) | 1998 இன் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய சட்டம் மற்றும் 2019 இன் 15 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய (திருத்தப்பட்ட) சட்டத்தின் முதன்மை சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் திருத்தப்பட்ட சட்டத்தின் 5(1) | சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க லொத்தர் சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு லொத்தர் சீட்டிழுப்பினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக பொது முயற்சிகள் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. | உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் (2) ஆம் உப பிரிவுகள் என்பவற்றின் பிரகாரம் நிதியம் மற்றும் லொத்தர் சபை என்பன சாத்தியமான லொத்தர்களின் எண்ணிக்கை, லொத்தர் வகைகள் மற்றும் அவ்வாறு நடாத்தப்படும் சீட்டிழுப்புகளில் வழங்கப்படும் பரிசுகள், அந்த லொத்தர்களின் உரித்து கோரப்படாத பரிசுகள் தொடர்பில் செயற்படும் விதம் மற்றும் லொத்தர் பெறுவனவுகளிலிருந்து நிதியத்திற்கு ஒதுக்கப்படும் பணத்தொகை தொடர்பில் இணக்கப்பாடு காணப்பட வேண்டிய போதிலும் நிதியம் மற்றும் தேசிய லொத்தர் சபை ஆகியவற்றுக்கிடையே அவ்வாறானதொரு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | | |
| (உ) | 1998 இன் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய சட்டம் மற்றும் 2019 இன் 15 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய (திருத்தப்பட்ட) சட்டத்தின் முதன்மை சட்டத்தின் 14 ஆம் பிரிவு மற்றும் திருத்தப்பட்ட சட்டத்தின் 6(2) ஆம் | சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உரிய விதிகளை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரிவுகளின் பிரகாரம் நிதி அமைச்சு விதிகளை உருவாக்கி சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கையை எடுத்துள்ளது. | விதிகளை உருவாக்குதல் முடிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உப பிரிவு என்பவற்றின் பிரகாரம் சபையின் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் செயற்பாடுகள் அல்லது அது தொடர்பான விடயங்கள் அல்லது அதன் துணை விடயங்கள் அல்லது இந்தச் சட்டத்தால் நிர்வகிக்கப்படும் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டவை வயை நிர்வகிக்கும் விதிகளை சபை தயாரித்து நிதி அமைச்சிற்கு சமர்ப்பித்திருந்த போதிலும் அவ் விதிகள் 2021 ஏப்ரல் 08 வரையிலும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஊ) | கொவிட்-19 காரணமாக வேலைவாய்ப்பினை இழந்த பணியாளர்களின் 2,500 பிள்ளைகளுக்காக பாடசாலை பைகள் மற்றும் பாடசாலை உபகரணப்பொதிகளை வழங்குவதற்கு ரூபா 6,250,000 தொகையான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. 11 தொழில் அதிகாரப் | சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் முறையாகவும் காலத்திற்கு ஏற்றவாறும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொவிட் -19 தொற்றுநோய் முடிவடைந்த பின்னர் நிதியத்தினால் அமுல்ப்படுத்தப்படும் அனைத்து வேலைத்திட்டங்களையும் முறையான திட்டத்தின் பிரகாரம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இந் நிகழ்ச்சித்திட்டம் 2022 பெப்ரவரி வரையிலும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் தொழில் ஆணையாளர் நாயகத்தினால் தேவையான தகவல்கள் மற்றும் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 330 இற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன. சமூக பொறுப்புக்களினை நிறைவேற்றுதல் காலத்தின் தேவைப்பாடாக காணப்படுகின்றது. சட்டத்தின் 6(உ) உப பிரிவின் நோக்கங்களுக்கு மிகவும் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்றாக இது காணப்பட்ட போதிலும் 2021 மார்ச் 15 வரையிலும் இது அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 34. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் - தேசிய விளையாட்டு நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் போது விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தில் சேவை புரியும் 4 பதவிநிலை உத்தியோகத்தர்களிற்கு நிதியத்தின் மூலம் விளையாட்டு பயிற்சியாளர் படிகளாக ரூபா 1,185,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த 4 உத்தியோகத்தர்களுக்கும் விளையாட்டு பயிற்சியாளர் படிகளின் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது அவர்களின் செயலாற்றல் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்படி 4 உத்தியோகத்தர்களில் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு பொதுநலவாய அமைப்பு பாரந்தூக்கும் போட்டியில் விளையாட்டு பயிற்சியாளராக | அரச உத்தியோகத்தர்களுக்கு இவ்வகையான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | அந்த உத்தியோகத்தர்களுக்கு செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் தாபன விதிக்கோவையின் 1.4.1 தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எதிர்காலத்தில் தாபன விதிக்கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | போட்டி வெற்றிக்காக ரூபா 1,600,000 ஆன தொகை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| (ஆ) | 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 25(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியம் அமைச்சின் செயலாளரினால் நிர்வகிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியத்தின் நிர்வாக நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் செயல்நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேசிய விளையாட்டு நிதியத்திற்காக 2022 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | ஊவா விளையாட்டு கழக கட்டிடம் மற்றும் விளையாட்டரங்கு என்பவற்றின் திருத்தம் மற்றும் அபிவிருத்திக்காக 2019 ஆம் ஆண்டில் ரூபா 2,500,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவ்விளையாட்டுக் கழகத்தை தெரிவுசெய்து விளையாட்டு கழகத்தின் தேவைப்பாடு இனங்காணப்பட்ட முறை தொடர்பாக | தேசிய விளையாட்டு நிதியத்தின் மூலம் வீளையாட்டரங்கு அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு நிதியை வழங்கும் போது அது தொடர்பாக முறையான நடைமுறையொன்று அமுல்ப்படுத்தப்பட வேண்டியதுடன் பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அதற்கு ஏற்பட்ட மொத்த கிரயத்தில் ரூபா 2.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் மொத்த தொகையும் வழங்கப்படாமை தொடர்பாக நடைமுறை ரீதியாக பின்தொடர் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு வெற்றிகரமான நடைமுறையொன்று உருவாக்கப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் பின்தொடர் நடவடிக்கையை மேற்கொள்வதற்காக | தற்போது இத் தன்மையிலான கொடுப்பனவுகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கையை மேற்கொள்வதற்கான நடைமுறையொன்று செயற்பாட்டில் காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | விளக்கம் அளிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக அக் கொடுப்பனவின் மூலம் விளையாட்டுத்துறைக்கான பங்களிப்பு மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு மற்றம் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் நிதியத்தினால் ஒவ்வொரு கொடுப்பனவு தொடர்பாகவும் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | முறையான நடைமுறையொன்றை அமுல்ப்படுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டில் கொரியாவில் நடைபெறும் உலக மேசைப் பந்தாட்ட போட்டியில் பங்குபற்றுவதற்காக இலங்கை மேசைப்பந்து சம்மேளனத்திற்கு ரூபா 2,000,000 தொகை வழங்கப்பட வேண்டியிருந்தது. கொவிட்-19 நிலைமையினால் அப்போட்டி மேலதிக அறிவித்தல் இன்றி ஒத்திவைக்கப்பட்டத | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | ரூபா 2 மில்லியன் செலவினம் காசோலை மதிப்பிழந்ததால் குறித்த செலவின விடயத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அது தவறுதலாக அனுசரணையாளர் பெறுவனவாக குறிப்பிடப்பட்டிருந்ததைத ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு | 2021 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகளில் திருத்தங்களைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ன் காரணமாக இத்தொகை தேசிய விளையாட்டு நிதியத்திற்கு மீண்டும் செலவு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போது இச் செலவினம் நிதிக்கூற்றுக்களில் சர்வதேச போட்டிச் செலவினங்களில் இருந்து பதிவழிக்கப்படாமல் மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பான அனுசரணையாளர் வருமானமாக ஏனைய வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இக்கொடுக்கல் வாங்கல் சரியாகக் கணக்கீடு செய்யப்படாத காரணத்தினால் சர்வதேச போட்டிச் செலவினங்கள் ரூபா 2,000,000 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ஏனைய வருமானங்களும் ரூபா 2,000,000 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 570 இன் பிரகாரம் | நிதிப்பிரமாணம் 570 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019.11.19 இல் உள்ளவாறு இரண்டு வருட காலப்பகுதி கடந்திருந்த வைப்புக்கள் | நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | வைப்புச் செய்யப்பட்ட திகதியிருந்து 2 வருடத்திற்குள் உரிமைகள் கோரப்படாத ஒவ்வொன்றும் ரூபா 10,000 தொகையான ரூபா 120,000 பெறுமதியான 12 காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. | வருகின்றது. |
| (ஊ) | இலங்கையில் விளையாட்டை ஊக்குவிப்பதற்கும் அவற்றை மேம்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கும் அடிமட்ட விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்தல் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதால் பிராந்திய மட்டத்தில் விளையாட்டுக்களை தரமுயர்த்துதல் அவசியமாக உள்ளது. இதனால் பிராந்திய மட்டத்தில் விளையாட்டுக்களின் முன்னேற்றத்திற்குப் பங்களிக்கும் அமைப்புக்கள், தரப்பினர்கள் மற்றும் தனிநபர்களிற்கு அனுசரணை வழங்குவது சம்மேளனத்தின் | தேசிய விளையாட்டு நிதியத்தின் குறித்துரைக்கப்பட்ட செயலாற்றல் தொடர்பான பரிசோதனைகளுக்காக சரியான முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் முறைமையொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | நடைமுறையொன்று நாளது வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நோக்கமாக காணப்பட்ட போதிலும் அதற்காக இதுவரையிலும் சரியான முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்காததால் வழங்கப்படுகின்ற நிதிகள் மூலம் விளையாட்டுக்களின் அபிவிருத்திக்கு போதுமானளவு பங்களிப்பு மேற்கொள்ளப்படுகின்றது என்ற உண்மை குறித்து குறித்துரைக்கப்பட்ட பரீட்சிப்பொன்று மேற்கொள்ளப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | | | |
| (எ) | மாத்தறை கம்புறுபிட்டிய குத்துச்சண்டை மைதானத்திற்கான கட்டிடமொன்றை உருவாக்குதல் மற்றும் கம்புறுபிட்டிய கரப்பந்தாட்ட மைதானத்தின் அபிவிருத்தி என்பவற்றிற்காக ரூபா 9,157,993 ஆன மதிப்பிடப்பட்ட மொத்தத் தொகை மாத்தறை மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. பணம் வழங்கப்படுவதற்கு முன்னர் சாத்தியவள அறிக்கைகள், களப் | விளைளாட்டு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிதிகளை பயன்படுத்தப்படும் போது சாத்தியவள அறிக்கைகள், களப் பரிசோதனை அறிக்கைகள் போன்ற தகவல்களை பெற்றுக்கொள்வதன் மூலம் முதலீட்டின் செயற்திறன் தொடர்பாக திருப்தியடைய வேண்டியதுடன் அபிவிருத்தி செயற்பாடுகளிற்காக செலவிடப்பட வேண்டிய சரியான நிதித் தொகை | இது தொடர்பாக களப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நாளது வரை அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. | மிகுதிப் பணம் மாவட்ட செயலகத்தினால் பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் சில அத்தியாவசியப் பணிகளுக்குப் பணத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்டச் செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிர்மாண நடவடிக்கைகளில் எஞ்சியிருக்கும் சில குறைபாடுகள் மற்றும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய எஞ்சிய பணிகள் தொடர்பாக இனங்காணப்பட்டிருக்க |

| | | | |
|---|---|---|---|
| பரிசோதனை அறிக்கைகள், விளையாட்டு கழகத்திலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காததுடன் பணிகள் முடிவடைந்ததன் பின்னர் ரூபா 2,538,933 மிகுதித் தொகை தேசிய விளையாட்டு நிதியத்திற்கு மீளளிப்பு செய்யப்படுவதற்கு 2021 திசெம்பர் 31 வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் மிகுதிப் பணம் நிதியத்திற்கு காலதாமதமின்றி பெற்றுக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | | வில்லை. இதனால் அந் நடவடிக்கைகள் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளன. |

## 35. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் - மீன்பிடி வெகுமதி நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - மறுப்பு அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | --------------------- | ------------------- | ------------------------ | ---------------------- |
| (அ) | சட்டரீதியான நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்ட வழக்குகள் தொடர்பாக மாவட்ட கடற்றொழில் அலுவலகங்கள், நீதிமன்றம், கடற்படை என்பவற்றின் பொறுப்பில் உள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை பெறுமதி மதிப்பிட்டு கணக்கீடு செய்வதற்கான கொள்கைகள் இனங்காணப்பட்டிருக் கவில்லை. | மீன்பிடி வெகுமதி நிதியத்திற்குச் சொந்தமான அனைத்து சொத்துக்களையும் இனங்காண்பதற்கு தேவையான கணக்கீட்டு கொள்கை தயாரிக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. | சீர்செய்யப்பட்டிருக்கவி ல்லை. |
| (ஆ) | 1996 இன் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 59(4) ஆம் உப பிரிவின் பிரகாரம் காலத்திற்கு காலம் பொருத்தமானது என பணிப்பாளர் கருதுகின்ற ஏதாவது பணத்தை வெகுமதியாக | போதியளவு பணத்தை வெகுமதியாக வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | முறைமையொன்றை உருவாக்குவதற்கு குறித்துக்கொள்ளப்பட் டது. | எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில் லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வழங்குவதற்கான முறைமை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | | | | |
| (இ) | (i) | சுற்றி வளைப்புக்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு வெகுமதிப் பணத்தை வழங்குதல் தாமதமின்றி செய்யப்பட வேண்டிய போதிலும், 2014, 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே 271, 348, 488, 427 மற்றும் 327 ஆன சட்ட வழக்குகள் தொடரப்பட்டிருந்த போதிலும் 2014, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக எதுவித பணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதற்கிணங்க உத்தியோகத்தர்களுக்கு வெகுமதிப் பணத்தை வழங்குவதற்காக குறித்துரைக்கப் | சுற்றிவளைப்புக்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு தாமதமின்றி வெகுமதிப் பணம் வழங்கப்படுதல் வேண்டும். | வழக்குகளை பூர்த்திசெய்வதற்கு பல ஆண்டுகள் எடுத்ததால் ஒரே ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளுக்கு பணம் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பண வெகுமதிகளை வழங்குவதற்கு குறித்துரைக்கப்பட்ட முறைமை எதுவும் உருவாக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்காததால் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகளின் சுற்றிவளைப்புக்களை மேற்கொள்வதற்காக உத்தியோகத்தர்களை ஊக்குவித்தல் இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | | |
| (ii) | தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் மற்றும் படகுகளை கைதுசெய்து மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களுக்கு அறிவித்த போதிலும் மீன்பிடி படகுகள் அவர்கள் வராத காரணத்தினால் அல்லது | கைதுகள் மற்றும் தகவல் அளிப்பவர்கள் ஊக்குவிக்கப்பட்டு வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும். | திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவு புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளதால், குறித்த பிரிவினால் இயன்றவரையில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அத்தகைய விசாரணை எதுவும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தாமதமாக வந்ததால் விடுவிக்கப்படுகின்றன என கடற்படையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது சட்ட விரோத நடவடிக்கைகளை தூண்டுவதுடன், அரசாங்க வருமான இழப்பையும் ஏற்படுத்துவதாக கணக்காய்வு தெரிவிக்கிறது. | | | |
| (ஈ) | 1996 இன் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 59(3) ஆம் பிரிவு மற்றும் 51(4) ஆம் உப பிரிவு என்பவற்றின் பிரகாரம் வெகுமதி நிதியத்தின் நிர்வாகம் தொடர்பாக பணிப்பாளர் பொறுப்புக்கூற வேண்டியுள்ள போதிலும் திணைக்களத்தினால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டங்களில் வெகுமதி நிதியத்தின் செயற்பாடுகளை இனங்கண்டு வினைத்திறனாக | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 59(3) ஆம் பிரிவு மற்றும் 51(4) ஆம் உப பிரிவு என்பவற்றின் பிரகாரம் வெகுமதி நிதியத்தின் செயற்பாடுகள் இனங்காணப்பட்டு அதனை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இந்நிதியத்தின் செயற்பாடுகளையும் உள்ளடக்குவதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | இச் செயற்பாடுகள் இனங்காணப்பட்டு 2020, 2021 ஆம் ஆண்டுகளுக்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் உருவாக்கத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிறைவேற்றுவதற்காகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| (உ) | (i) | 2019 ஆம் ஆண்டில் அரசுடமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைத்திருந்த தொகை ரூபா 9,607,333 ஆக காணப்பட்ட போதிலும் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் பெறப்பட்ட தொகை ரூபா 6,148,395 ஆக காணப்பட்டது. எனினும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 3,458,938 வேறுபாடு மற்றும் ரூபா 1,973,908 பெறவேண்டிய மீதி என்பன தொர்டர்பாக தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் மீதிகளின் சரியான தன்மை | பூர்த்தி செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பாக நீதிமன்றங்களிடமிருந்து பெறவேண்டியவைகளின் உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் வருமானத்தை சரியாகக் இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நீதிமன்றங்கள் பணத்தை திருப்பிச் செலுத்த நீண்ட காலம் எடுத்தமையே இதற்குக் காரணமாகும். | எழுத்துமூலமான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | | | |
| (ii) | 2019 ஆம் ஆண்டில் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்ததன் மூலம் வெகுமதி வென்றவர்களுக்கும், ஒருங்கிணைந்த நிதியத்திற்கும் ரூபா 5,870,700 செலுத்தப்பட்டுள்ளது. சுற்றிவளைப்பில் பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் தொடர்பான சரியான தகவல்களைப் பேணத் தவறியதால் உரிமைகோருபவரிற்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததா என்பதையும் அரசாங்க வருமானத்தில் இழப்பு ஏற்பட்டதா என்பதையும் கண்டறிய முடியாதிருந்தது. | சுற்றிவளைப்பு மற்றும் வழக்குகளில் ஈடுபட்ட நபர்களின் பட்டியல் பேணப்பட வேண்டும். | ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 10 வழக்குகளில் குறைந்த எண்ணிக்கையிலான உறுதிச்சீட்டுக்கள் மாத்திரமே சமர்ப்பிக்கப்படுவதால் தனிப் பதிவேடு பேணப்படுவதில்லை. | சுற்றிவளைப்புக்களில் ஈடுபட்ட நபர்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (iii) | தகவல்களை வழங்குவோருக்குச் செலுத்துவதற்கென ரூபா 425,683 தொகை பணிப்பாளர் நாயகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறித்த தரப்பினர்களிற்கு அக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததா என்பதை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | அத் தகவல்கள் வெளிப்படைத் தன்மையுடன் பேணப்பட வேண்டும். | தகவல்களை வழங்குவோருக்குச் செலுத்துவதற்கென பணிப்பாளர் நாயகத்திடம் பணம் வழங்கப்பட்டிருந்தது. | உறுதிப்படுத்தல் எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 1996 இன் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் பிரகாரம் வெகுமதி நிதியத்தின் நிர்வாகத்திற்கு பணிப்பாளர் நாயகம் பொறுப்பாக இருந்த போதிலும் 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளில் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டங்களில் வெகுமதி நிதியத்தின் செயற்பாடுகளை | | வெகுமதி நிதியத்தின் செயற்பாடுகளைக் கண்டறிந்து அவற்றை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையானவாறு திட்டமிட்டு செயற்படுத்துதல். | தற்போதைய செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது. | இது 2020 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இனங்கண்டு அவற்றை செயற்திறனாக அமுல்ப்படுத்துவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (எ) | முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் அலுவலகத்தினால் 2018 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் 70 ஆகவும், 2018 ஆம் ஆண்டின் இறுதியில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை 8 ஆகவும் இருந்தது. தடை செய்யப்பட்ட வலைகள் மற்றும் டைனமைட் பாவனையே இந்த வழக்குகளுக்கு வழிவகுத்ததுடன் இந்த மீனவர்களால் மீன் வளத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சட்டவிரோத செயற்பாடுகளின் எண்ணிக்கை குறைந்திருக்கவில்லை. | மீன் வளங்களை பாதுகாப்பதற்கு போதுமான வழிமுறைகளை உருவாக்குதல் வேண்டும். | ஆண்டின் போது அனைத்து மாவட்டங்களிலும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் குறித்து மீனவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. | விழிப்புணர்வு செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் தடைசெய்யப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி 2021 இல் மீன்பிடித்தல் தொடர்கிறது. |
| (ஏ) | சுற்றிவளைப்புக்களின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு 655 ஆக இருந்த போதிலும், 200 சுற்றிவளைப்புக்கள் அல்லது 31 சதவீதம் | திட்டங்களுக்கு இணங்க இலக்குகளை அடைந்துகொள்ள உழைக்க வேண்டும். | இந்த இலக்கை நிர்ணயிப்பதில் மிகையான மதிப்பீடு இருந்ததாகத் தோன்றுவதால் சரியாக கணக்கீடு செய்தல். | 2021 ஆம் ஆண்டுக்கான இலக்குகள் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆகையால் யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் மாவட்ட கடற்றொழில் அலுவலகங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களினதும் புலனாய்வுப் பிரிவின்தும உரிய இலக்கை அடைந்துகொள்ள முடியாதிருந்தது. | | | |
| (ஐ) | 2020 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 1,973,908 பெறப்பட வேண்டிய நிலுவையில் எந்தவொரு தொகையும் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்காதமையால் நிலுவைகளின் அறவீடு நலிவான நிலையில் காணப்பட்டது. | பெற வேண்டிய வருமானங்களை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2013-2020 வரையான காலப்பகுதிக்கான பெறவேண்டியவைகள் தொடர்பாக காலப் பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிலுவைகளின் அறவீடு பலவீனமான நிலையில் உள்ளது. |
| (ஒ) | (i) வெகுமதியாளர்களுக்குச் செலுத்த வேண்டிய தொகைகள் மற்றும் அரசாங்கப் பங்களிப்பு என்பவற்றை பிரதிநிதித்துவம் செய்கின்ற 2020 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட | உரித்துடைய வெகுமதியாளர்கள் மற்றும் தொடர்புடைய அரசாங்க வருமானம் என்பவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கொவிட் நிலைமையினால் வெகுமதி பட்டியலைத் தயாரிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே இந் நிலைமை ஏற்பட்டுள்ளதுடன் 2021 இல் வழக்கு நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் சுற்றிவளைப்புக்களிற்குரிய படிகள் | வெகுமதியை வென்றவர்கள் வரவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 8,612,255 காசு மீதியில் ரூபா 1,244,460 தொகை மாத்திரம் செலுத்த வேண்டிய படிகளாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க எஞ்சிய ரூபா 7,367,795 தொகைக்கு உரித்துடைய வெகுமதியாளர்கள் மற்றும் தொடர்புடைய அரசாங்க வருமானம் என்பவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | செலுத்தப்பட்டு மிகுதி அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படும். | |
| (ii) | 2020 ஆம் ஆண்டில் புலனாய்வுப் பிரிவு மற்றும் 15 மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களின் ஊடாக 536 வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்த போதிலும் 3 மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களிடமிருந்து மாத்திரம் | வழக்குகளுடன் தொடர்புடைய அறிக்கைகளை முறையாக பேணுவதற்கும் நிதிகளை வரவழைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வழக்கு நடவடிக்கைகள் முடிவடைந்திருக்காதமையே இதற்கான காரணமாகும் என்பதுடன் நீதிமன்ற நடவடிக்கைகள் அதன் கட்டுப்பாட்டுக்கு அப்பால் உள்ளதால் தாமதங்களிற்கு நீதித் துறை பொறுப்பாகாது. | மாற்றமடையாதுள்ளது. |

அரசுடமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைத்த பணம் வெகுமதி நிதியத்துக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. புலனாய்வுப் பிரிவு மற்றும் ஏனைய மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களிலிருந்து வெகுமதி நிதியத்துக்கு வருமானம் கிடைத்திருக்காதமை தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 36. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் - பேலியகொடை மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - மறுப்பு அபிப்பிராயம்
2019 - மறுப்பு அபிப்பிராயம்
2020 - மறுப்பு அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | --------------------- | --------------------- | --------------------- | --------------------- |
| (அ) | அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.4.1, 2.11.1, 3.4, 6.3.3, 7.7 மற்றும் 8.9.1 ஆம் வழிகாட்டிகளுடன் இணங்காமல் 2018 ஆம் ஆண்டில் மீன் விற்பனை தொகுதியின் கட்டிட இல. 01 இன் உட்கூரையை திருத்தம் செய்தல் தொடர்பான ரூபா 2,450,000 பெறுமதியான ஒப்பந்தமும் மொத்த பிற்பனை தொகுதியின் நிலத்தை திருத்தம் செய்வதற்கன ரூபா 2,366,000 பெறுமதியான ஒப்பந்தமும் 44 மீன்வெட்டுப் பலகைகளை ரூபா 1,320,000 இற்கு கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தமும் தனியார் துறைக்கு | அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.4.1, 2.11.1, 3.4, 6.3.3, 7.7 மற்றும் 8.9.1 ஆம் வழிகாட்டல்களுடன் இணங்க வேண்டும். | பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு கடிதங்கள் மூலம் அறிவித்து, ஒப்பந்தம் வழங்குவது பொருத்தமானது என்று அமைச்சு பெறுகை குழுவால் தீர்மானம் எடுக்கப்பட்டமை மற்றும் கேள்வி ஆவணங்களில் உள்ள அதிக எண்ணிக்கையிலான தொழில்நுட்ப குறைபாடுகள் காரணமாக அதிக விலை குறிப்பிடப்பட்டிருந்தது. | சீர்செய்யப்பட்டிருக்க வில்லை. |

வழங்கப்பட்டிருந்தது.

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2010 மே 26 இல் ஸ்தாபிக்கப்பட்ட நம்பிக்கை பொறுப்பின் மோட்டார் வாகன பிரிவின் நிர்வாகத்திற்காக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் தனியார் நிறுவனத்துடன் 10 வருடங்களுக்காக 2011 ஆம் ஆண்டில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 40 சதவீதம் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கும் எஞ்சிய 60 சதவீதம் கம்பனிக்கும் பெற்றுக்கொள்வதற்கு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததுடன் பெறுகை செயன்முறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் 2019 திசெம்பர் 31 வரையிலும் நிகழ்காலத்திற்கு பொருத்தமானவாறு உடன்படிக்கை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | நம்பிக்கை பொறுப்பின் சொத்துக்களிலிருந்து நம்பிக்கை பொறுப்பிற்கு வருமானம் பெற்றுக் கொள்ளக்கூடிய பிரகாரம் உடன்படிக்கை திருத்தம் செய்யப்படல் வேண்டும். | தற்போதுள்ள குத்தகை உடன்படிக்கை காலாவதியாகிவிட்டதால் முகாமைத்துவ நம்பிக்கைப்பொறுப்பின் ஆலோசனையின் பேரில் புதிய குத்தகை உடன்படிக்கை தயாரிக்கப்படும். | 2011 ஆம் ஆண்டு முதல் 10 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடப்பட்ட வாகனத் தளத்திலிருந்து பெறப்பட்ட மாதாந்த சராசரி வருமானம் ரூபா 325,000 தொகையாக காணப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டில் கேள்வி கோரப்பட்டதன் மூலம் கேள்வியிலிருந்து ரூபா 1,625,000 மாதாந்த வாடகை வருமானம் இழக்கப்பட்டதன் காரணமாக ரூபா 1,300,000 மாதாந்த சராசரி இழக்கப்பட்டிருந்தது. |
| (இ) | 3 குளிர்சாதனங்கள் மற்றும் பழங்கள் ஐஸ் இயந்திரம் என்பவற்றை | நம்பிக்கை பொறுப்பிற்கு பொருளாதார நலன்களை | குளிர்சாதனம் மற்றும் பழங்கள் ஐஸ் இயந்திரம் என்பவற்றை திருத்தம் | சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | திருத்தம் செய்து பேணுதல் மற்றும் புதிய ஐஸ் கட்டி இயந்திரமொன்றை நிர்மாணித்து பேணுதல் தொடர்பான ஒப்பந்தமொன்றை வழங்கும் போது 2006 இன் அரசாங்க பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.3, 2.4, 2.5, 2.6, 4.2.1(அ), 4.2.2(அ), 4.3 மற்றும் 5.4.8 (அ) வழிக்காட்ல்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | பெற்றுக் கொள்வதற்காக 2006 இன் அரசாங்க பெறுகை வழிக்காட்டிக் கோவையின் வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். | செய்து பேணுவதற்காக கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் புதிய ஐஸ் கட்டிகள் இயந்திரத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் காணி உரித்து நிர்ணயமாகாத காரணத்தினால் தோல்வியடைந்துள்ளது. | |
| (ஈ) | 2006 இன் அரசாங்க பெறுகை வழிக்காட்டிக் கோவையின் 8.9.1 வழிக்காட்டியின் பிரகாரம் 2019 சனவரி 31 இல் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 நவம்பர் 19 இலேயே அவ் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. கேள்வி ஆவணங்களின் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஒரு வாரத்தினுள் ரூபா 900,000 தொகையான 3 மாத குத்தகையின் ஆரம்ப வைப்பொன்று ஒரே தடவையில் பணமாக | 2006 இன் அரசாங்க பெறுகை வழிகாட்டி கோவையின் வழிக்காட்டல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் வாடகை நிலுவைகளுக்கான தாமதங்களிற்காக தண்டப்பணத்தை அறவீடு செய்வதற்கு அல்லது குத்தகை உடன்படிக்கையை இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெவ்வேறு காரணங்களினால் தங்களால் இணங்கப்பட்ட ஒப்பந்த தொகையை செலுத்துவது சிக்கலாக உள்ளது என கேள்விதாரர் அறிவித்திருந்ததுடன் மேலும் கேள்விதாரர்களிடமிருந்து தாமதங்களிற்காக தண்டப்பணத்தை அறவீடு செய்ய முடியாதிருந்தது. | அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், 2019 பெப்ரவரி தொடக்கம் 2020 திசெம்பர் வரையான 11 மாதங்களுக்குள் பெற வேண்டிய ரூபா 5,980,000 ஆன தொகையில் ரூபா 5,430,000 தொகையை அறவீடு செய்வதற்கும் கேள்வி ஆவணத்தில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் மாதாந்த வாடகை கொடுப்பனவு தொடர்பான தாமதங்களிற்காக தண்டப்பணத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் உடன்படிக்கையை இரத்து செய்வது தொடர்பில் கருத்திற் கொள்ளப்படவில்லை. | | | |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 133(i)(அ) இன் பிரகாரம் முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பின் உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை ஸ்தாபித்து முறைமை மற்றும் | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பின் உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை ஸ்தாபித்து முறைமை மற்றும் கட்டுப்பாட்டை வலுப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உள்ளக கணக்காய்வுப் பிரிவு இன்னும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கட்டுப்பாட்டை வலுப்படுத்தப்படுவதற்கு 2020 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | | |
| (ஊ) | 2020 ஆம் ஆண்டில் உள்ளக வீதி முறைமையை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 105,450,026 பெறுமதி இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 50 ஆம் பந்திக்கு முரணாக காணி மற்றும் அபிவிருத்தியின் பெறுமதிக்கு சேர்க்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் ஒரே தன்மையான சொத்துக்கள் அதன் வகுப்புக்களின் பிரகாரம் கணக்கிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 57 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 38,598,438 கூட்டுமொத்தமான கழிவுநீர் சுத்திகரிப்பு பொறியொன்றின் இயந்திரங்கள் மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக இனங்காணப்படாமல் அவற்றிற்கு 5 சதவீதத்தில் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது. | நியமத்தின் பிரகாரம் கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் தனித்தனியாக இனங்காணப்பட்டு அதற்கிணங்க பெறுமானத்தேய்விடப்பட வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஏ) | 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் 4 பேரேட்டுக் கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 95,809,210 ஆல் அதிகரித்தும் 3 பேரேட்டுக் கணக்குகள் ரூபா 1,210,685,143 ஆல் குறைத்தும் காட்டமப்பட்டிருந்தன. மேலும் ரூபா 346,406,831 கூட்டுமொத்தமான 18 வரவு மீதிகளிற்கான மற்றும் ரூபா 2,289,828,473 கூட்டுமொத்தமான 24 செலவு மீதிகளிற்கான பேரேட்டுக் கணக்குகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் அம் மீதிகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன. மேலும் குறித்த கணக்கிணக்கமின்மை 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளிலும் காட்டப்பட்டிருந்தன. | உரிய பேரேட்டுக் கணக்குகளில் சரியாக பதிவுகளை பேணுவதன் மூலம் கணக்குகள் பேணப்பட வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | 2014 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட தற்காலிகமாக பிடித்துவைக்கப்பட்ட ரூபா 5,550,000 மீளசெலுத்தப்பட்ட வைப்புக்கள், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1,688,741,540 | கொடுப்பனவுகள் மற்றும் மீதிகளை உறிப்படுத்தும் போது உரிய சான்றை சமர்ப்பித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் தவணை தவறியவர்களிற்கு எதிராக | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகையான கட்டிடங்களின் தேறிய பெறுமதி, மீளாய்வாண்டிற்குரிய ரூபா 22,484,737 பெறுமதியான நிலையான வைப்பிற்காக பெறவேண்டிய ரூபா 347,273 தொகையான வட்டி வருமானத்திற்கான சிறுசெலவுக் காசு கொடுப்பனவுகள் போன்ற மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு போதுமான ஆவணங்கள் சமா்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | | |
| (ஒ) | நம்பிக்கைப் பொறுப்பின் அனைத்து மிகை பணத்தையும் வேறு வழியில் முதலீடு செய்வதற்கு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர் மற்றும் திறைசேரியின் எழுத்துமூல முன்கூட்டிய அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் 2010 ஆகஸ்ட் 10 ஆம் திகதிய நம்பிக்கைப் பொறுப்பு உரித்துறுதியின் 6(அ)(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கு முரணாக 2020 | முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு ஸ்தாபிக்கப்படும் போது கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் 6(அ)(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் தீா்மானங்களிற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | சீா்செய்யப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | திசெம்பர் 31 வரையிலும் 4 நிலையான வைப்புக்களில் ரூபா 208,108,367 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. | | | |
| (ஓ) | 2010 ஆகஸ்ட் 10 ஆம் திகதிய நம்பிக்கைப் பொறுப்பு உரித்துறுதியின் 8(ஊ) பிரிவின் ஏற்பாடுகளிற்கு முரணாக நம்பிக்கைப் பொறுப்பின் தலைவராக அமைச்சின் செயலாளரால் மாதமொன்றிற்கு ரூபா 35,000 வீதம் 2020 ஆம் ஆண்டில் 09 மாதங்களிற்கு ரூபா 315,000 தொகை பெறப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் சட்டரீதியற்றவாறு பெறப்பட்ட பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஔ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 261(1) இன் பிரகாரம் காசுப் புத்தகமும் உறுதிச்சீட்டுக்களும் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் நிதிப்பிரமாணம் 446(2) இன் பிரகாரம் காசுப் புத்தக பதிவுகள் மற்றும் மீதிகளின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (க) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் I ஆம் பகுதியின் 15.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிப் பிரமாணம் 876(3) இன் பிரகாரம் நியதிச்சட்டம் சாராத ஏதேனும் நிதியமொன்றை தொடர்ந்தும் பேணிச் செல்வதற்கு நியாயமான காரணம் காணப்படின் அவ்வாறான நிதியங்களை பாராளுமன்ற சட்டத்தின் மூலம் சட்டமாக்குவதற்கு ஏற்ற வகையில் உரிய காரணங்களைக் காண்பித்து பொது நிதித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பானது பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நியதிச்சட்ட நிறுவனமொன்றாக மாற்றப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நியதிச் சட்ட நிறுவனமொன்றாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கா) | சந்தைத் தொகுதி அமைந்துள்ள 3.1776 ஹெக்டெயர் விஸ்தீரணமுடைய காணியானது ஸ்தாபிக்கப்பட்ட திகதியிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையிலும் கையேற்கப்பட்டிருக்காததுடன் அவ்வாறு கையேற்கப்படாமல் அக் காணியில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களின் பெறுமதி ரூபா 1,688,741,540 தொகையாகும். | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கடைத் தொகுதி அமைந்துள்ள காணி கையேற்கப்பட வேண்டும். | உரிய கையேற்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய நிலைமை அவ்வாறே உள்ளது. |
| (கி) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குத்தகை வருமான நிலுவைரூபா 74,943,439 ஆக காணப்பட்டதுடன் குறித்த மீதியானது மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து 05 வருட காலமாக பெறப்பட வேண்டிய ரூபா 17,402,781 தொகையையும் குளிர்சாதன அறையிலிருந்து 03 வருட காலமாக பெறப்பட வேண்டிய ரூபா 8,075,000 தொகையையும் கொண்டுள்ளது. | நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அடுத்த மாத இறுதிக்குள் செலுத்தும் வகையில் மாதாந்த வாடகை திருத்தம் செய்யப்பட்டுள்ளதெனவும், வாடகை செலுத்தப்படாத பட்சத்தில் நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டு நிலுவைகள் மற்றும் தண்டப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | தற்போதைய நிலைமை அவ்வாறே உள்ளது. அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (கீ) | பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டு ஏறத்தாழ 5 ஆண்டுகள் ஆன | நம்பிக்கை பொறுப்பை முறையான விதத்தில் பேணிச் | இது கடற்றொழில் அமைச்சின் கீழுள்ள ஆளுகை நிறுவனமாக உள்ளதால் அதிக | தற்போதைய நிலைமை அவ்வாறே உள்ளது. தீர்க்கப்பட்டிருக்கவில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதிலும் நம்பிக்கைப் பொறுப்பின் முகாமையாளர், கணக்காளர் மற்றும் உள்ளக கணக்காய்வாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புத் திட்டங்களை அங்கீகரிப்பதன் மூலம் 2020 திசெம்பர் 31 வரையிலும் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செல்வதற்கு தேவையான வெற்றிடமான பதவிகளுக்காக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | நிதி நலன் ஒன்றாக முகாமைத்துவ நம்பிக்கைப்பொறுப்பின் அங்கீகாரத்துடன் இரண்டு உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். | லை. |
| (கு) | பேலியகொட மத்திய மீன் சந்தை முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு தொடர்பாக எழுந்த சுற்றாடல் பிரச்சனைகள் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பங்கள் 2014 மார்ச் 18 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அப்போதிலிருந்து 6 ஆண்டுகள் கடந்திருந்தது. எனினும் அதிகாரசபையால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் சுத்திகரிப்பு பொறி மற்றும் கால்வாய் முறைமை தொடர்பாக சரியான நடவடிக்கைகள் | வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் இயன்றளவு விரைவாக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | தற்போதைய நிலைமை அவ்வாறே உள்ளது. ஆண்டொன்றிற்கு 98,190 லீற்றர் கழிவு நீரானது நீர் வளங்களிற்கு விடப்படுகிறது. புதிய சுத்திகரிப்பு பொறி நிர்மாணிக்கப்பட்டு ஓராண்டுக்குள் இது பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 9 மாதங்களில் ஏறத்தாழ 20 சதவீதமே முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எடுக்கத் தவறியதன் காரணமாக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | | | |
| (கூ) | 154 மொத்த விற்பனவு களஞ்சிய தொகுதிகளுக்கு மேலதிகமாக 128 சில்லறை களஞ்சிய தொகுதியொன்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 64 கடைகள் ரூபா 9,625,540 கிரயத்தில் மொத்த விற்பனவு கடைகளாக மாற்றப்பட்டிருந்தன. எனினும் 2020 திசெம்பர் 31 வரையிலும் விற்பனைகளிற்காக எந்தவொரு கடையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்காக கடைகளை பயன்படுத்தி சில்லறை மீன் சந்தையை மேம்படுத்துவதற்கான மூலோபாயங்கள் வகுக்கப்பட வேண்டும். | சில்லறை வர்த்தக துறையில் உள்ள பெரும்பாலான மொத்த விற்பனவு மற்றும் சில்லறை விற்பனைக் கடைகள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதுடன் மாதாந்த வாடகை தொடர்ந்து செலுத்தப்படாத போது கடை வைப்பு எடுக்கப்பட்டு ஏனைய தரப்பினருக்கு மீண்டும் குத்தகைக்கு விடப்படுகிறது. | தற்போதைய நிலைமை அவ்வாறே உள்ளது. சீர்செய்யப்படவில்லை. |
| (கெ) | 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பிஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04.3 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து செயலாற்றல் அறிக்கையொன்று அரச நிதி பணிப்பாளர் நாயகத்திற்கான | முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததால், சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கொரோனா தொற்று காரணமாக உரிய திகதியில் இதனை சமர்ப்பிக்க முடியாதிருந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது. | முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முறையாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் தொடர்பான அறிக்கைகள் இதுவரை பெறப்பட்டிருக்கவில்லை. |

பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 05 மாதங்களினுள் 2021 யூலை 21 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 37. கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தின் பெயர் - ஊழியர் சேமலாப நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறையல்லாத சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், நிதியம் அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுக்கான பெறுமானத்தேய்வை கணிப்பீடு செய்யும் பட்டோலையின் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 456.31 மில்லியன் ஆகும். அந்த சொத்துக்களிடையே தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படும் சொத்துக்கள் இனங்காணப்பட்டு | நியமத்தின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடைமுறையல்லாச் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடைமுறையல்லாச் சொத்துக்களிற்காக மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறையல்லாத சொத்துக்களுக்களின் பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படாததால் ஏற்பட்ட மதிப்பீட்டு வழுவினை இலங்கைக் கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் சீர்செய்வதற்கும் நீண்ட காலமாக பயன்பாட்டுக்கு எடுக்கப்படாத சொத்துக்களை உரிய முறையில் கைத்தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | நிதியத்தினால் பேணிச் செல்லப்படும் 08 வங்கிக் கணக்குகளுக்குரியதாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் 01 முதல் 19 வருடங்கள் வரையான காலப்பகுதியினுள் மதிப்பிழந்த காசோலைகள், வங்கிக் கூற்றில் பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள், காசுப் புத்தகத்தில் பதிவு | வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களில் உள்ள தீர்ப்பனவு செய்யப்படாத மீதிகளை இனங்கண்டு அது தொடர்பாக உரிய நடவடிக்கையை எடுத்தல். | 2020 சனவரியில் இது தொடர்பான விசேட செயற்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. | கொவிட் - 19 தொற்றுநோய் காரணமாக மீதிகளைத் தீர்ப்பனவு செய்யும் திட்டத்தில் தாமதமொன்று காணப்பட்டது. |

செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள், நேரடியான வரவு/ செலவு மற்றும் இனங்காணப்படாத ஏனைய மீதிகளாக ரூபா 11,241 மில்லியன் கூட்டுத்தொகையும் வைப்புச் செய்யப்பட்டு தேறாத காசுக் கட்டளைகள், தீர்வையாகாத காசோலைகள் மற்றும் வழங்கிய போதிலும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளாக ரூபா 456 மில்லியன் கூட்டுத்தொகையும், பயன்படுத்திய கணனிக் கணக்கீட்டு முறைமையின் வழுவொன்றாக 2006 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 141 மில்லியன் தொகுயுமாக ரூபா 11,838 மில்லியன் கூட்டுமொத்தமான தீர்ப்பனவு செய்யப்படாத மீதிகள் காணப்பட்ட போதிலும், இந்த உருப்படிகள் இனங்காணப்பட்டு தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொழில் திணைக்களத்திற்குரிய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 996.2 மில்லியனாக காணப்பட்ட போதிலும் தொடர்புடைய அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி ரூபா 571.28 மில்லியனாக காணப்பட்டதால் ரூபா 424.92 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | அனைத்து தொடர்புடைய பட்டியல்களின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதியை உறுதிப்படுத்தக்கூடியவாறு சரியான எண் தரவு பதிவு செய்யப்பட வேண்டும். | நிலையான சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதன் மூலம் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களின் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | ரூபா 996.2 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்களின் அடிப்படைத் தகவல்களைக் கொண்ட நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படாததால், குறியீட்டு இலக்கம், கொள்வனவு செய்த திகதி, கிரயம் மற்றும் சொத்துக்களை நிறுவிய இடம் போன்றவற்றிற்கான ஆவணச் சான்றுகள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை முறையாகப் பேணுவதற்கும், வருடாந்தம் பொருட்களை மெய்மையாய்வு செய்வதற்கும் ஏற்பாடு செய்தல். | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்படும். | முறையான நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய 2011/06 ஆம் இலக்க தொழில் | முறைப்பாடுகள் தொடர்பான சுற்றறிக்கையின் | அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் | மேலதிக தாமதங்கள் அவதானிக்கப்படுகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | திணைக்கத்தின் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் அலுவலகத்திற்கு முறைப்பாடு கிடைத்து 14 நாட்களுக்குள் விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் கொழும்பு தெற்கு மாவட்ட தொழில் அலுவலகத்திற்கு 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட முறைப்பாடுகளில் முறையே 112 மற்றும் 394 முறைப்பாடுகள் கணக்காய்வு திகதியான 2021 மார்ச் வரையிலும் விசாரணை செய்து நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரகாரம் நடவடிக்கை எடுப்பதன் மூலம் உறுப்பினர்களுக்கு உயர்ந்த சேவையை வழங்குதல். | அதிகாரப் பகுதிகளின் முறைப்பாடுகள், ஏனைய அதிகார நிலுவைகளிற்கு பொறுப்பாக உள்ள தொழில் உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கும் பயிற்சிகளுக்காக இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமிப்பதன் மூலம் முறைப்பாடுகள் தொடர்பான உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) | 1999 பெப்ரவரி 11 ஆந் திகதிய 01/99 ஆம் இலக்க தொழில் திணைக்கத்தின் சுற்றறிக்கைக்கு முரணாக கொழும்பு தெற்கு மற்றும் கொழும்பு மேற்கு மாவட்ட தொழில் அலுவலகங்களால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் நிலுவைப் பங்களிப்புக்கள் மற்றும் மிகைக் | நிலுவை பங்களிப்புக்கள் மற்றும் மிகைக் கட்டணங்களை செயற்திறனாக சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விடய எழுதுநர்களிற்கு நாளொன்றுக்கு அதிக வேலைச்சுமை ஒதுக்கப்பட்டுள்ளதால் நாளொன்றுக்கு அனைத்து அதிகாரப் பகுதிகளின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக மூன்று விடய எழுதுநர்களை உள்ளடக்கிய பணிச் சுழற்சி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. | நிலுவை பங்களிப்புக்கள் மற்றும் மிகைக் கட்டணங்களை அறவீடு செய்வதில் மேலும் தாமதங்கள் அவதானிக்கப்படுகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கட்டணங்களை அறவீடு செய்வதற்காக தொழில்தருநர்களிற்கு 190 மற்றும் 224 இறுதி அறிவிப்புக்கள் வழங்கப்பட்டமை தொடர்பாக முறையே ரூபா 146.78 மில்லியன் மற்றும் ரூபா 256.12 மில்லியன் தொகையான பங்களிப்புக்கள் மற்றும் மிகைக் கட்டணங்கள் 2021 மார்ச் 31 வரையிலும் அறவீடு செய்யப்பட்டிருக்காததுடன், தாமதக் காலம் 3 மாதங்கள் முதல் 2 ஆண்டுகள் வரை காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | | |
| (எ) | தொழில் திணைக்களத்தின் 2002 மே 20 ஆம் திகதிய 08/2002 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பதிவு இலக்கம், நிறுவனத்தின் பெயர், முகவரி, வணிகத்தின் தன்மை, ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் கடைசி பரீட்சிப்பு திகதி ஆகியவற்றைக் கொண்ட நிறுவனப் பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும் கொழும்பு | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவன பரீட்சிப்பு பதிவேடொன்றை பேணுவதன் மூலம் பரீட்சிப்புக் காலத்தை மதிப்பீடு செய்து உத்தியோகத்தர்களின் வினைத்திறனை அளவிடுவது அவசியமாகும். | நிறுவன பதிவேட்டை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மத்தி, கொழும்பு மேற்கு மற்றும் கொழும்பு தெற்கில் உள்ள மாவட்ட தொழில் அலுவலகங்களால் அத்தகைய நிறுவன பதிவேடுகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஏ) | 1999 பெப்ரவரி 11 ஆந் திகதிய 01/99 ஆம் இலக்க தொழில் திணைக்கத்தின் சுற்றறிக்கைக்கு முரணாக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய நிறுவன பரீட்சிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு மிகைக்கட்டணங்கள் மற்றும் பங்களிப்புக்களை அறவீடு செய்வதற்கான முதல் அறிவிப்பை வழங்குவதற்காக 20 முதல் 455 நாட்கள் வரையான காலம் செலவிடப்பட்ட 51 சந்தர்ப்பங்களும்இறுதி அறிவித்தலை வழங்குவதற்காக 20 முதல் 563 வரையான காலம் செலவிடப்பட்ட 79 சந்தர்ப்பங்களும் கொழும்பு தெற்கு மற்றும் கொழும்பு மேற்கு மாவட்ட தொழில் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அறிவிப்புக்களை வெளியிடுவதன் மூலம் பங்களிப்புக்கள் மற்றும் மிகைக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விடய எழுதுநர்களிற்கு நாளொன்றுக்கு அதிக வேலைச்சுமை ஒதுக்கப்பட்டுள்ளதால் நாளொன்றுக்கு அனைத்து அதிகாரப் பகுதிகளின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக மூன்று விடய எழுதுநர்களை உள்ளடக்கிய பணிச் சுழற்சி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. | மேலதிக தாமதம் அவதானிக்கப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அலுவலகங்கள் தொடர்பில் மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன. மேலும், 39 சந்தர்ப்பங்களுக்குரிய இறுதி அறிவித்தல்கள் வழங்கப்பட்டிருக்காததுடன் 68 சந்தர்ப்பங்களுக்குரிய அறிவித்தல்கள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஐ) | நிதியத்தின் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குதல் மற்றும் கணக்கு மீதிகளை சரிபார்த்தல் ஆகியவற்றுக்காக இயந்திரங்களை பொருத்தும் செயற்திட்டத்தின் முதற்கட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டில் ரூபா 2.75 மில்லியன் செலவிடப்பட்டு கொள்வனனவு செய்யப்பட்ட 05 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்டதுடன் அவற்றில் 2 இயந்திரங்கள் 2020 | உறுப்பினர்களின் நிதிகளின் வருமானத்தில் இருந்து செலவினங்களைச் செய்வதில் நன்கு வடிவமைக்கப்பட்ட திட்டங்களின் பிரகாரம் வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் சிக்கனமாகவும் செயற்படுவதற்கு நிதியத்தின் பொறுப்பில் வைத்திருப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். | இந்த இயந்திரங்களை மீண்டும் தலைமை அலுவலகத்திற்கு கொண்டு சென்ற பின்னர் பயன்படுத்தக்கூடிய பாகங்களை பயன்படுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. | உரிய இயந்திரங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்காக அச்சிடப்பட்ட அட்டைகள் மேலும் விளைவற்றுள்ளன. |

செப்டம்பர் 17 இல் கைத்தவிர்க்கப்பட்டிருந்தன. மீதமுள்ள இயந்திரங்கள் குறித்து கணக்காய்வுத் திகதி வரை தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்காக 2008 ஆம் ஆண்டில் ரூபா 12.61 மில்லியன் செலவிடப்பட்டு தயாரிக்கப்பட்ட பதினையாயிரம் (15,000) அட்டைகள் கணனிப் பிரிவில் விளைவற்றுக் காணப்பட்டன. அட்டைகள் களஞ்சியப்படுத்தப்பட்டு சுமார் 12 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் அவை பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன், அச் செலவினம் நிதியத்திற்குக்கு நட்டமாகியிருந்தது. மேலும், அடையாள அட்டையை பயன்படுத்துவதற்குப் பதிலாக உறுப்பினரின் கைரேகையைப் பயன்படுத்தி மீதியை சரிபார்ப்பதற்கு 2015 ஆம் ஆண்டில் ரூபா 14.92 மில்லியன் செலவிடப்பட்டு 30 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. அந்த இயந்திரத்தை

பயன்படுத்தி மீதிகளை சரிபார்ப்பதற்கு உறுப்பினரின் கைரேகை மறுபதிவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கணினிமயமாக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,053,342 மாத்திரமே என்பதுடன், செயற்திட்டம் வெற்றிகரமாக அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன், 2019 மார்ச் 01 ஆந் திகதியளவில் 13 இயந்திரங்கள் செயலிழந்தமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் இயந்திரங்களை பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 30 இயந்திரங்களை கைதவிர்ப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் கணக்காய்வு திகதியான 2021 ஏப்ரல் வரையிலும் உரிய இயந்திரங்கள் தலைமை அலுவலகத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை

| | | | | |
|---|---|---|---|---|
| | . அதன் பிரகாரம் இந்த திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்யத் தவறியதால் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த கிரயமும் நிதியத்திற்கு நட்டமாகியிருந்தது. | | | |
| (ஒ) | பட்டியலிடப்படாத கம்பனிகளின் பங்கு முதலீடுகளிலிருந்து ரூபா 5,000 மில்லியன் அல்லது 56 சதவீதம் 2013 ஆம் ஆண்டின் போது கன்வில் ஹோல்டிங்ஸ் ஹோட்டல் தொகுதியை நிர்மாணிப்பதற்காக முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அதன் வணிக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் அக் கம்பனியின் பங்குகள் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டிருக்க வில்லை. கம்பனியின் நிர்மாணங்களை தொடராமலிருப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் அறிவித்திருந்ததுடன் இதனால் அம் முதலீடுகளிலிருந்து எந்தவொரு வருமானமும் | முதலீடுகளை மேற்கொள்ளும் போது அங்கத்தவர்களுக்கு உயர்வான வருமானங்களை பெற்றுக்கொடுப்பதற்கு இயலுமான வகையில், ஆபத்தை இழிவுபடுத்துவதற்கு சிறந்த முதலீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | உரிய ஹோட்டல் தொகுதியின் வணிக நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெறப்பட்டிருக்கவில்லை. ''த பினான்ஸ் கம்பனியின்'' அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டதன் காரணமாக 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 205 மில்லியன் தொகையும் நிதியத்திற்கு இழப்பாகியிருந்தது. | | | |
| (ஓ) | போலியான நபர்களினால் அங்கத்தவர்களாக தம்மைக் காண்பித்து நலன் தொகைகள் கோரப்பட்டிருந்த அறுபத்து நான்கு (64) சந்தர்ப்பங்கள் இனங்காணப்பட்டிருந்தது. அவற்றுள் 61 சந்தர்ப்பங்களுக்காக 2004 நவம்பர் 04 முதல் 2020 பெப்ரவரி 20 வரையிலும் நிதியத்திற்கு செலவினமாகும் வகையில் ரூபா 52,316,484 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 3 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 3,393,727 ஆன தொகை தொடர்ந்தும் செலுத்தப்பட வேண்டியிருந்தது. குறித்த சந்தர்ப்பங்கள் தொடர்பில் முறையான உள்ளக விசாரணையொன்றினை மேற்கொள்வதற்கும் | மேசடியான கொடுப்பனவுகள் தொடர்பில் முறையான உள்ளக விசாரணையொன்றினை மேற்கொண்டு உள்ளக உத்தியோகத்தர்களினால் ஏதாவது முறைகேடுகள் இடம்பெற்றிருந்தால் அவற்றை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நகல்களை வழங்குவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல், நலன் கொடுப்பனவு தொடர்பாக உத்தியோகத்தர்களிற்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், தகவல் முறைமையில் உள்ள வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் அதன் பிரகாரம் நலன்களை பெற்றுக்கொள்ள வருகின்ற ஒவ்வொரு உறுப்பினரினதும் புகைப்படம் மற்றும் கைரேகையை பெற்றுக்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகள் மற்றும் ஆட்களை பதிவுசெய்யும் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகத் திணைக்களம் ஆகியவற்றுக்கு இடையேயான ஒன்லைன் இணைப்பை | இது தொடர்பாக முறையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்காததுடன் தகவல் முறைமையில் வசதிகளை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போதுமானதாக காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளக உத்தியோகத்தர்களினால் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் நிதியம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் நலன்களின் மோசடி கொடுப்பனவு தொடர்பான சட்ட நடவடிக்கை என்பன எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஔ) | அங்கத்தவர்களின் பங்களிப்புக்கள் தொடர்பில் 2013 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட 11 சதவீத நலன் விகிதம் 2014 ஆம் ஆண்டில் 10.5 சதவீதம் வரை குறைவடைந்துள்ளது. 2014 முதல் 2017 வரை இந்த விகிதமானது தொடர்ச்சியாக பேணப்பட்ட போதிலும் 2018 ஆம் ஆண்டிலிருந்து இது படிப்படியாகக் குறைவடைந்து 2020 ஆம் ஆண்டில் 9 சதவீதம் வரை குறைவடைந்துள்ளது. | அங்கத்தவர்களுக்கு உச்ச நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருமானம், செலவினங்கள், உறுப்பினர்களின் மீதி மற்றும் தொடர்புடைய ஆண்டின் சந்தையில் சராசரி வட்டி விகிதத்தின் நடத்தை போன்ற விடயங்களைக் கருத்தில் கொண்டு வட்டி விகிதம் தீர்மானிக்கப்படுகிறது. | உறுப்பினர்களுக்கான நலன்கள் 2021 ஆம் ஆண்டில் 9 சதவிகிதம் என்ற விகிதத்தில் செலுத்தப்பட்டுள்ளன. |
| (க) | முதலாம் கட்டம் 2007/2008 ஆம் ஆண்டுகளிலும் இரண்டாம் கட்டம் 2010/2011 ஆம் ஆண்டுகளிலும் மூன்றாம் கட்டம் 2016/2017 ஆம் ஆண்டுகளிலுமாக | அங்கத்தவர் நிதியத்திலிருந்து செலவினங்களை மேற்கொள்ளும் போது வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் சிக்கனமாகவும் நடவடிக்கை | 2019 ஆம் ஆண்டு முதல் உறுப்பினர்களை மீள்பதிவு செய்வதற்கான செயற்திட்டத்திற்கான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் செயற்திட்டத் | 2021 ஆம் ஆண்டுக்காக மீண்டும் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 9,880 ஆக காணப்பட்டதுடன் 1,070,218 உறுப்பினர்கள் 2021 |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடைமுறைப்படுத்தப்பட்ட அங்கத்தவர்களை மீளப் பதிவு செய்யும் செயற்திட்டத்தின் கீழ் 2008 தொடக்கம் 2018 திசெம்பர் 31 வரை தொழில் திணைக்களத்தின் வருடாந்த மதிப்பீட்டின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூபா 247,153,011 மொத்த செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் கைரேகை அடையாளம் பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை மதிப்பிடப்பட்ட அங்கத்தவர் எண்ணிக்கையின் சதவீதமாக முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களின் கீழ் முறையே 38 சதவீதம், 25 சதவீதம் மற்றும் 14 சதவீதம் ஆக காணப்பட்டதால் அடைந்துகொள்ளப்பட்ட முன்னேற்றம் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. | எடுப்பதன் மூலம் உரிய செயன்முன்னேற்றத்தை அடைந்துகொள்வதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | திட்டங்களை உரிய காலத்தில் தயாரிக்கும் போது உறுப்பினர்களின் நிதியை வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் சிக்கனமாகவும் செலவிட்டு அதன் பிரகாரம் அதிகபட்ச நலன்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீண்டும் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அதன் பிரகாரம் உறுப்பினர்களை மீள்பதிவு செய்வதற்கான செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| (கா) | அனுகூலங்களை பெற்றுக் கொள்வதற்காக அங்கத்தவர்களிடமிருந்து 18 மாவட்ட தொழில் அலுவலகங்களிற்கு 2016 சனவரி 01 தொடக்கம் 2018 | அங்கத்தவர்களுக்கு தாமதமின்றி அனுகூலங்களைப் பெற்றுக் கொடுக்க முடியுமான வகையில் ஒவ்வொரு நடவடிக்கையும் | பொதுத் துறை தோட்டத் தொழிலாளர்களின் பதிவு தொடர்பான தரவுகளைத் திருத்துதல் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டத்தின் | ஆரம்ப நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கும், தொழில் உத்தியோகத்தர்கள் மூலம் தொழில்தருநர்களிற்கு விளக்கமளிப்பதற்கும் திட்டங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | திசெம்பர் 31 வரையான காலப்பகுதயின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பங்களுள் ரூபா 17,923,106 தொகைக்கு விண்ணப்பிக்கப்பட்டிருந்த 112 விண்ணப்பங்கள் கொடுப்பனவுகளிற்காக இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் பல்வேறு காரணங்களுக்காக அவை நிராகரிக்கப்பட்டிருந்தன. அந்த விண்ணப்பங்களுள் 90 விண்ணப்பங்கள் (80 சதவீதம்) தொடர்பாக அவற்றை சமர்ப்பித்த திகதியிலிருந்து 2019 மார்ச் 01 வரை கடந்திருந்த காலப்பகுதி 06 மாதம் முதல் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்த போதிலும் அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | முன்னேற்றத்தின் பிரகாரம் குறித்த நிகழ்ச்சித்திட்டத்தை ஏனைய துறைகளுக்கும் விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல், இனங்காணப்படுவதற்கு சிரமமாகவுள்ள உறுப்பினர்களின் நலன் கோவைகள் மற்றும் காலாவதியான கோவைகளை குழுவொன்றிற்கு சமர்ப்பிப்பதன் மூலம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், மாகாண மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் மற்றும் உறுப்பினர்களைப் பதிவு செய்வதிலும் உறுப்பினர்களின் பங்களிப்புக்களை அனுப்புவதிலும் சரியான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு தொழில்தருநர்களிற்கு விளக்கமளித்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து பரவிய கொவிட் - 19 தொற்றுநோய் காரணமாக திட்டங்களை எதிர்பார்த்தவாறு மேற்கொள்ள முடியவில்லை. |
| (கி) | இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் தனியார் நிறுவனங்கள் மற்றும் | தனியார் துறை மற்றும் பகுதியளவிலான அரச துறையில் சேவையில் ஈடுபடுவோரில் அதிக | ஊடகங்கள் மற்றும் நடமாடும் சேவைகள் மூலம் ஊழியர்களுக்கும், தொழில் உத்தியோகத்தர்கள் ஊடாக | கொவிட் -19 தொற்றுநோய் நிலைமை காரணமாக மேற்குறிப்பிட்ட நடமாடும் சேவைகள் மற்றும் தொழில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பகுதியளவிலான அரச துறைகளின் மொத்த தொழிலாக அறிக்கையிடப்பட்ட 3,727,217 இல் ஊழியர் சேமலாப நிதியத்தில் பங்களிப்பு செய்துள்ள செயற்பாட்டிலுள்ள அங்கத்தவர் எண்ணிக்கை 2,559,319 அதாவது 68.7 சதவீதம் ஆகும். ஏனைய அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியங்களில் உறுப்பினர்களாக உள்ள ஊழியர்களின் சதவீதம் 9.7 சதவீதம் மாத்திரமேயாகும். இதனால் மிகுதி 21.6 சதவீதமானவர்கள் எந்தவொரு நிதியத்திலும் பங்களிப்பை செலுத்தியிருக்கவில்லை. அவர்களுக்கு நிதியத்தில் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியமை அவதானிக்கப்பட்டது. | எண்ணிக்கையாேனாருக்கு நிதியத்தில் அங்கத்துவத்தை பெற்றுக்கொடுக்கக் கூடிய முறைமையொன்றை ஏற்படுத்துதல் தொடர்பாக கவனத்தை ஈர்ப்பதன் மூலம் நிதியத்தால் திட்டமொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | தொழில்தருநர்களிற்கும் நிதியத்தில் பதிவு செய்வது தொடர்பில் விளக்கமளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஒவ்வொரு தொழில்தருநரும் ஊழியரொருவரை நிதியத்தில் பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என திருத்தமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உத்தியோகத்தர்களின் கள பரீட்சிப்புக்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட விளக்கங்கள் குறைந்த மட்டத்திலேயே உள்ளன. |
| (கீ) | ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவு செய்யப்படாது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையில் மாத்திரம் பதிவு செய்திருந்த தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2018 திசெம்பர் 31 இல் | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையில் மாத்திரம் பதிவு செய்யப்பட்ட (சுயதொழிலில் ஈடுபடுவோர் அல்லாத) அங்கத்தவர்களுக் | ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் உள்ள உறுப்பினர்களைக் கண்டறிந்து ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு சபையில் ஏற்கனவே உறுப்புரிமையை பெற்றிருந்த உறுப்பினர்களை | இது தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளவாறு 14,156 ஆக இருந்ததோடு குறித்த தொழில்தருநர்களிடமிருந்து அத் திகதியிலுள்ளவாறு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கு கிடைக்கப் பெற்ற பங்களிப்புக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 148,366,135 ஆகும். அதற்கிணங்க அத் தொழில்தருநர்களை நிதியத்தில் பதிவு செய்துகொள்வதற்கு நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சபையுடன் இணைந்து பொருத்தமான வேலைத் திட்டமெதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கு ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவத்தைப் பெற்றுத் தருவதற்கு வேலைத் திட்டமொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவு செய்வதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு அலுவலக மட்டத்தில் தொழில்தருநர்களிற்கு விளக்கமளித்து மேற்பார்வை செய்வதற்கு நடவடிக்கை எடக்கப்பட்டு வருகின்றது. | |
| (கு) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் அங்கத்துவ நிதியத்தினுள் தொழில் ஆணையாளரின் பெயரில் பேணப்பட்ட கணக்கில் தொழில்தருநர்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்ததன் மூலம் திணைக்களத்தால் அறவிடப்பட்டிருந்த ரூபா 10,486 மில்லியன் தொகை மற்றும் அவ்வாறு வழக்கு தொடரப்பட்டு தொகை அறவிடப்பட்டு | தீர்ப்பனவு செய்யப்படாத பங்களிப்புக்களை தாமதமின்றி தீர்ப்பனவு செய்வதற்கு செயற்திறனான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2020 யூன் முதல் மாவட்ட தொழில் அலுவலகங்கள் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் தகவல்களை 02 படிவங்கள் மூலம் அறவீட்டு பிரிவுக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, நிறுத்திவைக்கப்பட்ட நலன்கள் கணக்கின் மீதிகளை அதிகரிப்பதற்கான தீர்வொன்றாக தூதரக அலுவலகத்தால் இறந்த உறுப்பினர்களின் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொழில் ஆணையாளரின் பெயரில் பேணப்பட்ட கணக்கு மற்றும் பொது வைப்பு கணக்கு என்பவற்றில் முறையே ரூபா 11,456 மில்லியன் மற்றும் ரூபா 302 மில்லியன் மீதிகள் காணப்பட்டன. மேலும், ரூபா 70,833 மில்லியன், ரூபா 956 மில்லியன், ரூபா 2,117 மில்லியன் மற்றும் ரூபா 353 மில்லியன் ஆன தீர்க்கப்படாத மீதிகள் |

தீர்ப்பனவு செய்யப்படும் வரையிலும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 453 மில்லியன் தொகையை ஒவ்வொரு அங்கத்தவரினதும் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், தொழில்தருநரின் பெயரில் தனித்தனியாக பேணிச் செல்லப்படும் ‘‘நடைமுறை ஆண்டின் பங்களிப்பு - இல. 01’’ எனும் பெயரிலான கணக்கில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 65,865 மில்லியன் மீதியை உரிய அங்கத்தவர்களை இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுத்திவைக்கப்பட்ட நலன்கள் மற்றும் உரித்து கோரப்படாத நலன்களாக ரூபா 925 மில்லியனும் குறை/மிகைப் பங்களிப்பு பணமாக

நியமனங்கள் சான்றுபடுத்தப்பட்ட பின்னர் பயனாளியின் கோரிக்கை கடிதத்தை ஏற்றுக்கொள்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இந்தப் பணத்தைத் தீர்ப்பதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் குறித்து சட்ட ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

முறையே ‘‘நடைமுறை ஆண்டு பங்களிப்புக்கள் 01’’ கணக்கு, நிறுத்திவைக்கப்பட்ட நலன்கள் மற்றும் உரிமை கோரப்படாத நலன்கள் கணக்கு மற்றும் குறை/மிகை பங்களிப்புக்கள் மற்றும் குறை/மிகை மீளளிப்பு கொடுப்பனவுகள் ஆகியவற்றில் மேலும் காணப்படுகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 1,984 மில்லியனும் குறை/மிகை மீளளிப்பு கொடுப்பனவுகளாக ரூபா 682 மில்லியனும் அங்கத்தவர் நிதியத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மீதிகளை இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேற்குறிப்பிட்ட அங்கத்தவர் கணக்குகளில் செலவு வைக்கப்பட்டிருக்காது காணப்படும் கணக்குகளை தீர்ப்பனவு செய்வதை துரிதப்படுத்துமாறு 2013, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது அரச கணக்குகள் குழுவினாலும் கட்டளையிடப்பட்டிருந்தது. | | | |
| (கூ) | அங்கத்தவர்களின் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்காக தொழில் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த புகைப்பட மற்றும் விரலடையாள செயற்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த பன்னிரண்டு Quick | உரிய தேவைப்பாட்டினை இனங்கண்ட பின்னர் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டியதுடன், அவற்றை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட உபபாகங்களின் கையிருப்பைப் பயன்படுத்தி 15 தொகுதி உபபாகங்களை பூர்த்தி செய்து வலய அலுவலகங்களுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட 62 Logitech Quick Cam Cameras இல் நாற்பத்தி ஒன்றும், 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 24 மடிக் கணனிகளில் 2 உம் விளைவற்றுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | Cam Cameras, 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1,725,375 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 50 Quick Cam Cameras மற்றும் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 3,261,600 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 24 மடிக் கணனிகள் ஆகியன 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. | வேண்டும். | | |
| (கெ) | மெஹேவர பியச அலுவலக வளாகத்தின் உட்புறப் பிரிவினைகளை (Interior Partitions) வடிவமைப்பதற்காக அரசாங்க பெறுகை வழிகாட்டல்களைப் பின்பற்றாமல் கட்டிடத் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 135.3 மில்லியன் தொகையான மொத்தக் கிரய மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு முழுத் தொகையும் 2020 திசெம்பர் 31 இல் கட்டிடத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல்களைப் பின்பற்றி நிதிகளை திறமையாகவும் ஆக்கபூர்வமானதாகவும் பயன்படுத்துவதன் மூலம் பெறுகை மேற்கொள்ளப்பட வேண்டும். | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | மெஹேவர பியச அலுவலக வளாகத்தின் உட்புறப் பிரிவினைகளை வடிவமைக்கும் செயற்பாடுகள் இன்னமும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

மேலும், அரசாங்க பெறுகை வழிகாட்டியின் 4.3.1 மற்றும் 4.3.2 ஆம் வழிகாட்டல்களின் பிரகாரம் மொத்த கிரய மதிப்பீட்டுக்காகவும் 2.14.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் குறித்த திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் பரிந்துரைகளுக்காகவும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்காததுடன் 8.9.3 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் முறையான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. மேலும் 5.4.4(i) ஆம் வழிகாட்டலிற்கு முரணாக முழு ஒப்பந்த பெறுமதியும் செயற்பாடுகளை தொடங்குவதற்கு முன்பே செலுத்தப்பட்டிருந்ததுடன் 5.4.6(ஆ) வழிகாட்டலின் பிரகாரம் பிடித்துவைத்தல் பணம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2021 மார்ச் 31 வரையிலும் உள்ளக பிரிவினைகளின் வடிவமைப்பு பணிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆரம்பிக்கப்படவில்லை. | | | |
| (கே) | தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதியப் பிரிவின் 2018 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சமூகப் பாதுகாப்பை வலுப்படுத்தும் மூலோபாய வழிமுறைகளின் கீழ் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை ஊழியர் சேமலாப நித்திய இலக்கமாக மாற்றுவதற்கும் விரலடையாளத்தைப் பெற்றுக் கொள்ளும் செயற்றிட்டத்தின் கீழ் செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்த சட்டங்கள் மற்றும் விதிகளை உருவாக்குதல், மாவட்ட தொழில் அலுவலகங்களில் தொழில்நுட்ப இயலளவை முன்னேற்றுதல், ஆரம்ப செயற்றிட்டத்தை (Pilot Project) ஆரம்பித்தல் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை ஊழியர் சேமலாப நிதிய இலக்கமாக பதிவு செய்தல் போன்ற நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டில் | செயல்நடவடிக்கைகத் திட்டத்தினுள் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றும் போது வினைத்திறனான மற்றும் செயற்திறனான வழிமுறைகளை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்டங்கள் மற்றும் பிரமாணங்களை உருவாக்குவதுடன், மாவட்ட அலுவலகங்களுக்கும் தேவையான தொழில்நுட்ப இயலளவு மேம்படுத்தப்பட வேண்டும். ஆகையால் அது தொடர்பான ஆய்வுகள் தற்போது நடைபெற்று வருகின்றன. | ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களை இனங்காணும் பிரதான தரவான தேசிய அடையாள அட்டை இலக்கத்தை அமைக்கும் செயன்முறை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கை) | 2016 பெப்ரவரி 26 ஆம் திகதிய 09 ஆம் இலக்க பரிந்துரைக்கமைய நிதியத்தின் தரவுத் தொழில்நுட்ப செயன்முறையை முன்னேற்றுவதற்காக தொழில் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி ஒன்றிணைந்து தனியான கணனி வேலைத் திட்டம் ஒன்றை தயாரிக்கும் முயற்சி தொடர்பான அறிக்கையொன்று 2016 மார்ச் 23 இற்கு முன்னர் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அரசாங்கத்திற்கு வழங்கப்படும் கடன் ஏற்பாடுகளின் கீழ் செயற்படும் மூலதனச் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வியாபார செயல்முறையை மீள்பரிசீலனை செய்வதற்கு அவசியமான தொழில்நுட்ப உதவியை பெற்றுத் தருவதற்கு உடன்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அதனடிப்படையில் ஒன்றிணைந்த புதிய | பொதுக் கணக்குகள் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் அவற்றின் செயன்முன்னேற்றம் மற்றும் ஏனைய அவசியமான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மூலதனச் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் பூர்த்திசெய்யப்படும் என எதிர்பார்க்கப்படும் செயற்திட்டச் செயன்முறைகளின் மீளாய்வு செயன்முறை இரண்டு கட்டங்களின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அதன் அவதானிப்புக்கள் அடங்கிய அறிக்கை ஊழியர் சேமலாப நிதியத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. | இலங்கை மத்திய வங்கியுடன் தொழில் திணைக்களம் ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப முறைமையை நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தரவுத் தொழில்நுட்ப முறைமையொன்றை செயல்படுத்துவதற்கு அவசியமான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஊழியர் சேமலாப நிதியத்தின் அத்தியட்சகரால் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த செயற்றிட்டம் தொடர்பான கடன் உடன்படிக்கை, செயற்திட்ட அறிக்கை மற்றும் செயற்திட்ட திட்டம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததால் குறித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றத்தை பரீட்சிக்க முடியாதிருந்தது. | | | |
| (கொ) | ஊழியர் சேமலாப நிதியத்திற்காக சுயாதீனமான உள்ளக கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் இலங்கை மத்திய வங்கியின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதிய பிரிவின் உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு போதுமானளவு பதவியணியினரை இணைத்துக்கொள்வதன் மூலம் உள்ளகக் கணக்காய்வினை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியப் பிரிவின் கணக்காய்வு நடவடிக்கைகளை நாணயச் சபையின் உறுப்பினர் பங்கேற்கும் ஆலோசனைக் கணக்காய்வுக் குழு மூலம் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொழில் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவில் உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்காததுடன் ஊழியர் சேமலாப நிதி தொடர்பான உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நிதியத்தை நிர்வகிக்கும் தொழில் திணைக்களத்தின உளளகக் கணக்காய்வுப் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 14 ஆக காணப்பட்ட போதிலும் உள்ளபடியான பதவியணியினர் 09 வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. நிதியத்தினால் சுமார் ரூபா 2.8 ரில்லியன் உறுப்பினர் பங்களிப்புக்களை இந்த நிதியம் நிர்வகிப்பதால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு பலப்படுத்தப்பட வேண்டியுள்ளமை அவதானிக்கப்பட்டது. திணைக்களத்திற்குச் சொந்தமான 57 பிராந்திய அலுவலகங்கள் இருப்பதாலும் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப உள்ளபடியான பதவியணியினர் காணப்படாததாலும் ஊழியர் சேமலாப நிதியத்தின் கணக்காய்வு நடவடிக்கைகளில் போதிய கவனம் செலுத்தப்பட முடியாதிருந்தமை

அவதானிக்கப்பட்டது. திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு பலப்படுத்தப்பட வேண்டுமென 2013 ஆம் ஆண்டு முதல் பொதுக் கணக்குகள் குழுவில் தொடர்ச்சியாக அறிவுறுத்தப்பட்ட போதிலும் போதியளவு பதவியணியினரை இணைத்து கணக்காய்வினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டுக்காக நிதியத்தால் தயாரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் மீளாய்வாண்டுக்காக வழங்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

## 38. கணக்காய்வு நிறுவனத்தின் பெயர் - உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் -

2018 – முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

2019 – முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

2020 – முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

| | கணக்காய்வு அபிப்பிராயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட தவிர்ப்பு நடவடிக்கைகள் | அது தொடர்பிலான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | -------------------- | -------------------- | -------------------- | -------------------- |
| (அ) | 1974 இன் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவைகள் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி சேவையில் ஓய்வூதியத்துடன் உள்ள அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் செலுத்தும் நோக்கத்துடன் இந்த நிதியம் உருவாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 1993 ஆம் ஆண்டில் மாகாண அரச சேவை ஸ்தாபிக்கப்பட்டதுடன் மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரச உத்தியோகத்தர்களுக்குரிய ஓய்வூதியம் மற்றும் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நலன்கள் உரித்தாவதால் 1993 செப்தெம்பர் 03 ஆந் திகதி முதல் நிதியத்திற்கு அங்கத்துவர்களைச் சேர்த்தல் இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறு புதிய | நிதியத்தின் இருக்கும் தன்மை தொடர்பான முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு முகாமைத்துவத்தால் பொருத்தமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஓய்வூதிய நலன்களை செலுத்துதல். | நிதியத்தின் நிலவுகை தொடர்பில் முகாமைத்துவத்தினால் தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அங்கத்தவர்களின் பங்களிப்புத் தொகை பெறப்படாமை மற்றும் ஏற்கனவேயுள்ள அங்கத்தவர்களின் பங்களிப்பு ஓய்வூதியம் கொடுப்பனவு செய்வதற்கு போதாமை காரணமாக ஓய்வூதியத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் வருடாந்த பாதீட்டு நிதியேற்பாட்டின் மூலம் ஓய்வூதிய செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 1,085,161,850 ஆக காணப்பட்டது. அதன் காரணமாக நிதியம் உருவாக்கப்பட்டதன் பிரதான நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்திற்கு பங்களிப்புக்களை செலுத்தும் உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை 302 ஆகவும், அந்த நிறுவனங்களில் இருந்து பெறவேண்டிய நிலுவை பங்களிப்பு ரூபா 1,143,420,252 ஆகவும் காணப்பட்டன. எவ்வாறாயினும், 256 உள்ளூராட்சி நிறுவனங்களால் 2020 திசெம்பர் 31 இல் | பெறவேண்டிய பங்களிப்புக்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் வேறுபாட்டிற்கான காரணங்களை இனங்கண்டு சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனங்களாலும் மாதாந்தம் அனுப்பப்படுகின்ற காசோலைகளின் தொகை கழிக்கப்பட்டு, பெறவேண்டிய தொகையை அறிவிக்கும் வகையில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு மாதாந்த விலைப்பட்டியல் அனுப்பப்படுகின்றது. தங்களால் | மீதிகளுக்கடையிலான வேறுபாடுகள் அவ்வாறே காணப்படுகின்றது. |

உள்ளவாறு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 97 உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து நிதியத்திற்கு பெறப்பட வேண்டிய பங்களிப்புகள் ரூபா 760,406,356 ஆக காணப்பட்ட போதிலும் அந்தத் தொகை உள்ளூராட்சி நிறுவனங்களால் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புக்களாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும் 103 உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து நிதியத்திற்கு பெறப்பட வேண்டிய பங்களிப்புகள் ரூபா 278,494,348 தொகையாக காணப்பட்ட போதிலும் அந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புகளின் தொகை ரூபா 184,054,767 ஆக காணப்பட்டதால் ரூபா 94,439,581 தொகை அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. அதே சமயம் 22 உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து நிதியத்திற்கு பெறப்பட வேண்டிய பங்களிப்பு ரூபா 14,868,309 ஆக உள்ள போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புக்கள் ரூபா 19,567,394 ஆக சுட்டிக்காட்டப்பட்ட வேறுபாடுகள் தொடர்பாக அந்த நிறுவனங்களிடம் விசாரணை செய்வதற்கும் ஏதேனும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதனை சீர் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| | காணப்பட்டதால் ரூபா 4,699,085 குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | | | |
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றின் பிரகாரம் 302 உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய பங்களிப்புகள் ரூபா 1,143,420,252 ஆகும். இம் மீதி தொடர்பாக நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களின் பிரகாரம் ரூபா 459,007,662 பங்களிப்புக்கள் தொடர்பாக எந்தவொரு தொகையும் மீளாய்வாண்டின் போது 88 உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மாதாந்த பங்களிப்புக்கள் அறவீடு செய்யப்படுகின்றனவா என்பதைக் கண்காணித்து, ஓய்வூதியப் பங்களிப்பு நிலுவைகளை உடனடியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய பங்களிப்புகளை அறவீடு செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க உள்ளூராட்சி சேவைகள் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவிக்குமாறு நிதி ஆணைக்குழுவின் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் அனுப்பப்படுகின்ற மாதாந்த விலைப்பட்டியல்கள் மூலம் செலுத்தப்பட வேண்டிய தொகை தொடர்பாக நிறுவனங்களிற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் நிறுவனங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மூலம் அறிவித்து பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், எனது | உள்ளூராட்சி நிறுவனங்களால் செலுத்த வேண்டிய பங்களிப்பு தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | விவெ/ப/பா/கி/கோசேவ/02 ஆம் இலக்க மற்றும் 2021.11.03 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் 2020 ஆம் ஆண்டின் போது எதுவித பங்களிப்பு தொகையும் செலுத்தாத நிறுவனங்களுக்கு அது தொடர்பில் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமை. | |
| (ஈ) | 2018 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 1/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15(2)(ஆ) பந்தியின் பிரகாரம், கடந்த 02 வருடங்களில் செயற்படுத்தப்பட்டிருக்காத ஏதாவது நிதியங்கள் காணப்பட்டால் அல்லது அரசாங்க பாதீட்டின் கீழ் அந்த நிதியத்தின் விரும்பிய நோக்கங்களை அடைந்துகொள்ள முடியுமானால், அந்த நிதியங்கள் முடிவுறுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நிதியமானது செயற்படவில்லை எனவும் ஓய்வூதியத் திணைக்களத்தின் வாக்குபணத் தலைப்பின் | சுற்றறிக்கைகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொது திறைசேரியால் நியமனம் செய்யப்பட்ட விசேட குழுவின் 2017 மார்ச் 31 இல் வழங்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் உள்ளுராட்சி சேவை ஓய்வூதிய நிதியம் உள்ளிட்ட நிதியங்கள் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் மூடப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், குறித்த அறிக்கை தொடர்பான எந்தவொரு கொள்கை தீர்மானத்தையும் அமுல்ப்படுத்துவதற்கான அங்கீகாரம் தொடர்பில் இதுவரை தெரிவிக்கப்பட்டிருக்க | நிதியத்தினை முடிவுறுத்துவதற்கு எதுவித கொள்கை ரீதியிலுமான தீர்மானமொன்றை எடுக்கும் அதிகாரத்தினை கையளித்தல் இடம்பெற்றிருக்கவில்லை. |

| | |
|---|---|
| கீழான பாதீட்டு ஒதுக்கீடுகளுடன் இந்த நிதியத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும், கணக்கு இல. 04 இற்கான குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் தற்போதுள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளின் கீழ் நிதியத்தை மூடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வில்லை. |

## 39. கணக்காய்வு நிறுவனத்தின் பெயர் - ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 – முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

2019 – முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

2020 – முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

| | **கணக்காய்வு அபிப்பிராயம்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதி** | **நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட தவிர்ப்பு நடவடிக்கைகள்** | **அது தொடர்பிலான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| | ------------------------------ | ------------------------------ | ------------------------------ | ------------------------------ |
| (அ) | பிரிவெனாக்கள் மற்றும் தனியார்/ உதவியளிக்கப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்களிடமிருந்தான விதவைகள், அநாதைகளுக்கான பங்களிப்பாக 6 சதவீதம் மற்றும் பங்களிப்பு ஓய்வூதியங்கள் சார்பில் 6 சதவீதமாக பின்னிணைப்பு 2 இன் கீழ் பங்களிப்புக்கள், ஓய்வூதியத் திணைக்களத்திற்கு தனியாக அனுப்பப்படல் வேண்டும். எவ்வாறாயினும், கணக்குகள் பொழிப்புக்களினூடாக கல்வி அமைச்சினால் கணக்கு பொழிப்புக்கள் மூலம் 03 மாகாணங்களுக்காக 2019 ஆம் ஆண்டில் செலவு வைக்கப்பட்ட ரூபா 137,818,157 தொகையும், 2018 ஆம் ஆண்டின் போது 3 மாகாணங்களுக்காக | மாதாந்த கணக்குகள் பொழிப்பினூடாக செலவு வைக்கப்பட்டிருந்த தொகையை எந்த பங்களிப்பிற்காக செலவு வைக்கப்பட்டதாக திட்டவட்டமாக இனங்காண்பதன் மூலம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பங்களிப்பு பணத்தின் வகைப்படுத்தலை வருவிப்பதற்கு எனது 2019.06.27 ஆந் திகதிய விவெ/கிதமு/டீ/டபிள்யூ .பீ/13/2019 ஆம் இலக்கமுடைய கடிதம் கல்வி அமைச்சிற்கு அனுப்பப்பட்டதன் பின்னர் கல்வி அமைச்சினால் அது தொடர்பில் நிதியத்திற்கு பிரதியொன்றுடன் அனைத்து மாகாணங்களினதும் கல்வி பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு கல்வி அமைச்சின், மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் வலய கல்வி அலுவலகத்தினதும் ஒத்துழைப்பு முழுமையாக | பங்களிப்பு தொகையை வகைப்படுத்தலை வரவழைப்பதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலவு வைக்கப்பட்ட ரூபா 66,918,348 ஆன தொகை எந்த உத்தியோகத்தர்களின் பங்களிப்பாக இனங்காண முடியாதிருந்தது. | | திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டும் என்பது. | |
| (ஆ) | பங்களிப்புத் தொகை மற்றும் ஏனைய வருமான சேகரிப்பு மற்றும் பங்களிப்புத் தொகைகளை மீளக்கொடுப்பனவு செய்வதற்காக இறுதிக் கணக்குகளில் திறைசேரி பிரதிச் செயலாளரின் கணக்கு பேணிச் செல்லப்பட்டிருந்த போதும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகையில் நிரூபணமாகயிருந்த ரூபா 1,039,177,078 ஆன திறைசேரி பிரதிச் செயலாளரின் மீதி பெயரளவிலான மீதியொன்றாக அவதானிக்கப்பட்டது. | திறைசேரி பிரதிச் செயலாளரின் மீதி பெயரளவிலான மீதியொன்றாக கணக்கு குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். | திருத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. |
| (இ) | 1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதியச் சட்டம் 9(அ) ஆம் இலக்க கட்டளையின் பிரகாரம், பங்களிப்பாளர்கள் தொடர்பான தகவல்களினை உள்ளடக்கிய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. | பங்களிப்பு பணம் செலுத்துவோர் தொடர்பில் முறையான தகவல் கட்டமைப்பினை பேணல் முகாமைத்துவத்தின் பொறுப்பு என்பது. | ஆசிரியர்களிடமிருந்தான விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய முறைமையின் கீழ் பதிவு செய்த பிரிவென் மற்றும் தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்குாக பாடசாலையின் பெயரில் தனித்தனியாக அவர்களின் தகவல் | ஒவ்வொரு பங்களிப்பு பணம் கொடுப்பனவிற்காகவும் தனிப்பட்ட கணக்கீட்டு முறைமையொன்றினை பேணல் நடைமுறைக்கு சாத்தியமற்றது என்பது சுட்டிக்காண்பிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உள்ளடக்கப்பட்ட விதவைகள் அனாதைகள் ஓய்வுதியக் கோவையொன்று பேணப்படுகின்றது என்பது. | |
| (ஈ) | 04 ஆம் இலக்க கட்டளையின் பிரகாரம், ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் பங்களிப்புக்களிலிருந்து நிதியமொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டியதுடன் அதன்மூலம் ஆசிரியர்களின் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியம் செலுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், பங்களிப்புக்களின் சேகரிப்பு மற்றும் செலுத்துகைகளினை மேற்கொள்வதற்காக நிதியத்தின் சார்பில் தனியானதொரு வங்கிக் கணக்கொன்று செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. மேலும், ஓய்வூதியங்கள் பணிப்பாளர் நாயகத்தின் வங்கிக் கணக்கிற்கு பங்களிப்புக்கள் சேகரிக்கப்பட்டிருந்ததுடன . ஓய்வூதியங்கள் திணைக்களத்தின் செலவினத்தலைப்பின் கீழ் குறித்த செலவினங்கள் செலுத்தப்பட்டிருந்தது. ஆகையினால், | அதிகாரச்சட்டத்தின் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. | 1953 ஆம் ஆண்டளவில் அவ்வாறான நிதியத்தின் காணப்படுகை அத்தியாவசியமானதாகக் காணப்பட்ட போதிலும், தற்போதைய இறைக் கொள்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், இந்த நிதியம் அத்தியவசதியமானதாகக் காணப்படவில்லை. பிரிவென்கள் மற்றும் தனியார் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்காக ஓய்வூதியம் செலுத்துதல் வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஒதுக்கீடு செய்யப்படும் திரண்ட நிதியத்தின் 253 ஆம் இலக்க ஒதுக்கீட்டு தலைப்பினூடாக மேற்கொள்ளப்படுகின்றமை யால், இந்த நிதியத்திற்கு தனியானதொரு வங்கிக் கணக்கொன்று பேணப்படாததுடன், | கட்டளை இலக்கம் 04 இன் பிரகாரம், ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் பங்களிப்பு தொகையில் நிதியமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதியத்தினை ஸ்தாபித்தமைக்கான நோக்கம் அடைந்துகொள்ளப்பட்டிருக்கவில்லை. | | பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் ஆகியவற்றை பதிவு செய்வதற்கு காசுப் புத்தகமொன்று பேணிச் செல்லப்படுகின்மை. | |
| (உ) | உப பாடசாலையொன்றின், நிதியத்திற்கு அங்கத்துவத்தினை பெற்றுக்கொள்ளல் தொடர்பிலான தெரிவுப் பரிசோதனையின் போது, விதவைகள் மற்றும் அனாதைகள் நிதியத்திற்கு பங்களிப்பு பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த அங்கத்தவர்களுக்காக பங்களிப்பு அங்கத்துவ இலக்கத்தினை வழங்கியிருக்கவில்லை. | நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு அங்கத்துவ இலக்கத்தினை வழங்குதல் தொடர்பில் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் என்பது. | விதவைகள் மற்றும் அனாதைகள் பங்களிப்பு அங்கத்துவ இலக்கத்தினை வழங்குதல் தொடர்பில் பங்களிப்பு பணம் பிரிவு நடவடிக்கை எடுக்கப்படாததுடன், அது உரிய உத்தியோகத்தர்களின் மற்றும் அவர் சேவையாற்றும் நிறுவனத்தின் பொறுப்பொன்றாகும். இது தொடர்பில் புதிய சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளமை. | திருத்தப்பட்டிருக்கவில் லை. |
| (ஊ) | பங்களிப்பு பணம் பெறுவனவு தொடர்பான விபரங்கள் உள்ளடங்களிய நிதியத்தின் அங்கத்துவம் தொடர்பான அங்கத்துவ இலக்கம் உள்ளடங்கிய தரவுக் கட்டமைப்பொன்று நிதியத்திடம் காணப்படாமையால் பங்களிப்பு பணத்தை மீள செலுத்தும் போது அங்கத்தவர்களிடமிருந்து அறவிடப்பட்ட பணத்தின் அளவினை நடத்தை அட்டவணையை | புங்களிப்பு பணம் நிதியத்திற்கு திட்டவட்டமாக கிடைத்துள்ளதா என்பது தொடர்பில் ஓய்வூதிய திணைக்களத்தினூடாக சான்றுபடுத்துவதற்கு நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும் என்பது. | தற்போது விதவைகள் / தபுதாரர் மற்றும் அனாதைகள் பங்களிப்பு பணம் அறவீடு செய்தல் தொடர்பான விபரங்களை தனிப்பட்ட கோவைக்கு உள்ளடக்குதல் தொடர்பில் 2020/12/31 ஆந் திகதிய 03.˙.2020 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை மற்றும் பழைய அங்கத்தவர்களை | புதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

பரிசோதித்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும், அந்த பணம் சரியாக நிதியத்திற்கு கிடைத்துள்ளதா என்பது தொடர்பில் சான்றுபடுத்த முடியாதிருந்தது.

இணையவழி மூலம் மீள பதிவு செய்தல் தொடர்பில் 2021/02/10 ஆந் திகதிய 26/2017(ஏ) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தினால் DMS/SYS/AUD/Chick list/01 மற்றும் 2020.09.07 ஆந் திகதியகடிதத்தின் மூலம் தற்போது விதவைகள் / தபுதாரர் மற்றும் அனாதைகள் பங்களிப்பு பணம் அறவீடு செய்தல் தொடர்பான விபரங்களை தனிப்பட்ட கோவைக்கு உள்ளடக்குதல் தொடர்பில் அனைத்து பிரிவுத் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பங்களிப்பு பணத்தை மீள செலுத்துதல் போன்ற நலன்கள் கிடைக்கும் போது பங்களிப்பு பணம் திட்டவட்டமாகவும் தொடர்ச்சியாகவும் கிடைத்துள்ளதாக சான்றுபடுத்த முடிந்துள்ளதாக.

## 40. கணக்காய்வு நிறுவனத்தின் பெயர் - அரச சேவைகள் நலன்புரி நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் -

2018 – மறுப்பு அபிப்பிராயம்

2019 – மறுப்பு அபிப்பிராயம்

2020 – மறுப்பு அபிப்பிராயம்

| | கணக்காய்வு அபிப்பிராயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட தவிர்ப்பு நடவடிக்கைகள் | அது தொடர்பிலான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | ----------------------------- | ----------------------------- | ----------------------------- | ----------------------------- |
| (அ) | ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்பாளர்களின் தனிப்பட்ட கணக்குகளை உரிய முறையில் பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால் 2020 ஆம் ஆண்டில் ஆரம்ப மற்றும் இறுதி அங்கத்துவர்கள் எண்ணிக்கையை உறுதிப்படுத்துவதற்காக அங்கத்துவப் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. அதன் காரணமாக 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கட்டாயப் பங்களிப்புத் தொகை கணக்கின் மீதி ரூபா 28,972,771,536 தொகை, தன்னிச்சை பங்களிப்புக் கணக்கின் மீதி ரூபா 44,799,765 தொகை மற்றும் அரசாங்கப் பங்களிப்புத் தொகை கணக்கு மீதி ரூபா 44,820,450,342 | பங்களிப்பாளர்களின் தனிப்பட்ட கணக்குகள் தொடர்பாக முறையான தரவு முறைமை ஒன்று பேணுவதன் மூலம் மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். | தனிப்பட்ட கணக்குகள் பேணப்படுவதன் மூலம் இந்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு இயலுமாக இருந்ததுடன், அதற்காக உரிய நிறுவனத்திற்கு முறைமையினூடாக தகவல்கள் அனுப்பும் படி வலியுறுத்தப்பட்டது. அவ் அறிவித்தல்கள் மற்றும் ஞாபகமூட்டல்களின் படி தற்போது இந்த நிறுவனங்கள் 80-90 இற்கு இடைப்பட்ட எண்ணிக்கையான முறைமை ஊடாக பங்களிப்புத் தொகைகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கை | பங்களிப்பாளர்கயின் உரித்துக்களின் பிரகாரம் மீதிகளை ஒதுக்குவதற்குரிய பணிகள் இடம்பெற்றவாறு உள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகைக்கான மீதிகள் பங்களிப்பாளர்களின் உரிமையின் படி தனியாக இனங்காண்பதற்கு முடியாதிருந்தது. | | மேலும் அதிகரித்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் நிகழ்வுநிலை முறைமை ஊடாக பெறுவனவுகள் 8% மற்றும் 12% பங்களிப்புக் கணக்கின் படி வகைப்படுத்தப்பட்டு தனிப்பட்ட மீதிகள் சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டு வருகின்றது என்பது. | |
| (ஆ) | மாதாந்தக் கணக்குப் பொழிப்புக்களின் மூலம் அல்லது பல்வேறு அரச நிறுவனங்களினால் நிதியத்தின் கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட வரவு மற்றும் செலவு வைத்தல்கள் தொடர்பாக இனங்காணப்படாத மீதிகளை தீர்க்கப்படும் வரை சீராக்கல் கணக்கொன்றில் பதியப்பட்டிருந்தது. இதன்படி 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இனங்காணப்படாத சீராக்கல் கணக்கில் காணப்படும் பல வருட காலம் முதல் சேகரமாகி வரும் மீதி ரூபா 29,811,314 தொகையாக இருந்தது. விரிவான அட்டவணை ஒன்று | வருடாந்தம் சீராக்கல் கணக்கின் மீதி, வெவ்வேறாக குறிப்பிட்ட நிறுவனங்களுடன் இணக்கஞ் செய்து சரியான கணக்குகளில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதியத்தினால் பேணப்பட்டு வருகின்ற அட்டவணையில் பல வருடங்களுக்கு முன்னர் இருந்து ஆரம்ப மீதி ரூபா 29,807,957 தொகை காட்டப்பட்டு வருகின்றதுடன், அத் தொகை எமது சீராக்கல் கணக்கு மீதியுடன் இணங்கியிருக்கவில்லை. இந்த மீதி தீர்க்கப்பட்டுள்ளதா என நிறுவனங்களில் இருந்து தொடர்ச்சியாக விசாரணை மேற்கொண்டு வருவதுடன், எதிர்காலத்தில் முகாமைத்துவ குழு ஊடாக இந்தப் பிழையான வரவு | திருத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்படாமையால் அந்த மீதி தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்தல் மேற்கொள்ள முடியாதிருந்தது. | | வைத்தலை அகற்றுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (இ) | நிதியத்தின் அங்கத்தவர்களினால் நலன்கள் பெற்றுக்கொள்வதற்காக ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட மொத்த விண்ணப்பங்கள் 5,188 இல் 987 விண்ணப்பங்களுக்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரையும் கொடுப்பனவு மேற்கொண்டிருக்கவில்லை. | விண்ணப்பங்களுக்காக தாமதம் இன்றி கொடுப்பனவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டின் மார்ச் மாதத்தில் மற்றும் 2020 ஒக்தோபர் மாத இறுதியில் COVID 19 தொற்றுநோய் பரவிய காரணத்தினால் ஓய்வூதிய திணைக்களம் செயற்படாமல் இருந்தமையால் உத்தியோகத்தர்களை அழைப்பதற்கு முடியாமையின் காரணமாக வருட இறுதியில் கொடுப்பனவு செய்யப்படாதிருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 987 ஆகும். | விண்ணப்பங்களுக்கான கொடுப்பனவுகளில் தாமதமொன்று நிலவுகின்றது. |
| (ஈ) | நிதியத்தின் பங்களிப்பாளர்களின் தகவல்களை பேணிச் செல்வதற்காக மீள் மயப்படுத்தப்பட்ட தரவுக் கட்டமைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அது உரிய முறையில் நடைமுறைப் படுத்தப்பட்டிராமையால் 2019 ஆம் ஆண்டின் இறுதி திகதியில் உள்ளபடியான ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 68,246,168,683 ஆன | நிதியத்தின் கீழ் பங்களிப்புச் செய்துள்ள பங்களிப்பாளர்களின் தனிப்பட்ட கணக்குகள் தொடர்பில் முறையான தரவுக் கட்டமைப் பொன்றினை பேணுவதன் மூலம் மீதிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்தப்பட வேண்டியமை. | கணக்கு தயாரிக்கப்பட வேண்டிய முறை தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. | தனிப்பட்ட கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பங்களிப்புக் கணக்கு மீதி தொடர்பில் தனிப்பட்ட கணக்குகள் பேணப்பட்டிராமை. | | | |
| (உ) | 1942 இன் அரசாங்க சேவை சேமலாப நிதிய கட்டளைச் சட்டத்தின் (621 ஆம் அதிகாரம்) 25 ஆம் பிரிவு பிரகாரம், ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் வெகு விரைவில், நிதியத்தில் காணப்படும் திசெம்பர் 31 இல் உள்ளவாறான அவர்க்கு செலவு வைக்கப்பட்ட மீதி பங்களிப்பாளர்களை ஓய்வூதியங்கள் பணிப்பாளர் நாயகம் அறிவிப்பார். எவ்வாறாயினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டளைச் சட்டத்தின் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பொருத்தமான முறைமையொன்றை தயாரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், சிக்கலான நிலைமையொன்று காரணமாக திசெம்பர் 31 இலும் அது தாமதமடைந்திருந்தது. | புதிய அங்கத்தவர்களின் கணக்கு மீதிகள் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறிவிப்பதற்காக நடைமுறையொன்று உருவாக்கப்பட்டிருக்கவில் லை. |

## 41. கணக்காய்வு நிறுவனத்தின் பெயர் - இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டம

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் -

2018 – முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 – முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 – முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | **கணக்காய்வு அபிப்பிராயம்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதி** | **நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட தவிர்ப்பு நடவடிக்கைகள்** | **அது தொடர்பிலான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| (அ) | திட்டத்தினால் குறித்துரைத்த முதன்மை வணிகர் ஒருவரின் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்று முதிர்ச்சியடைகின்ற ரூபா 147.05 மில்லியன் தொகைக்காக 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி பின்னூட்டல் மீள்கொள்வனவு உடன்படிக்கையில் ரூபா 137.18 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது. குறித்த முதன்மை வணிகர் மேற்படி முதலீட்டின் கீழான பிணைப்பணத்தினை எந்தவொரு புதிய பிணையினையும் சமர்ப்பிக்காது மீளெடுத்திருந்தார். 2015 திசெம்பர் 04 ஆந் திகதி எடுக்கப்பட்ட சபை தீர்மானத்திற்கமைய மேற்படி முதலீட்டினை பிணை தேவையற்ற முதலீடாக சுழலவிடுவதற்கு மத்திய வங்கியின் நாணயச் சபை தீர்மானித்திருந்தது. அதற்கமைய, மேற்படி முதலீட்டின் மீது ரூபா | எதிர்காலத்தில் இவ்வா றான இடரினை குறை த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பது டன் நட்டத்தை அறவி டுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. | முதலீட்டு தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. |

144.25 மில்லியன் கழிவுநட்டமொன்று 2015 திசெம்பர் 31 ஆந் திகதி நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2020 ஆகஸ்ட் 19 இல் மத்திய வங்கியின் நாணய சபையால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2015 முதல் மேலே உள்ள முதலீடுகளை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு முதல் ரூபா 61.83 மில்லியன் தொகையான முதலீட்டின் மூலம் கிடைத்த வட்டி வருமானம் 2020 செப்தெம்பர் வரை இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 42. கணக்காய்வு நிறுவனத்தின் பெயர் - கற்புலனற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் -

2018 – முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 – முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 – முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வு அபிப்பிராயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட தவிர்ப்பு நடவடிக்கைகள் | அது தொடர்பிலான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | புனர்வாழ்வளித்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பார்வையற்றோர் கருத்தரங்கின் மூலம் கட்புலனற்ற 15 நபர்களுக்கு ஆண்டின் போது பயிற்சியளிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்தும் கட்புலனற்ற 4 நபர்களுக்கு மாத்திரம் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அப்பயிற்சிக்காக பயிற்சி உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 6 நபர்களைக் கொண்ட பதவியணியினருக்கு இந்நிதியத்திலிருந்து படிகள் வழங்கப்பட்டிருந்தது. மேலும், முன்னைய 04 ஆண்டுகளில் இந்நிலைமை அவ்வாறே காணப்பட்டதுடன் பயிலுனர்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வில்லை | இப்பயிற்சி செயற்பாடுகளை அதிக நபர்களுக்கு பிரதிபலன்கள் கிடைக்கும் வகையில் பிரயோசனமான முறையில் திட்டமிட்டு பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கொழும்பிலிருந்து தொலைவில் அமைந்துள்ள பிரதேசங்களில் சேவை பெறுநர்களுக்கு அந்த வசதிகளை பெற்றுக்கொள்ள வருகைதருவதில் காணப்பட்ட அசௌகரியங்களின் அடிப்படையில் சேவை பெறுநர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ள முடியாது என்பது. | திட்டமிட்டவாறு பயிலுநர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | சீதுவ தொழில்பயிற்சி நிறுவனத்தின் மகளிர் நலன்புரி மற்றும் புடவைக் கைத்தொழில் பயிற்சிப் பிரிவின் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 57,867 பெறுமதியான மூலப்பொருட்களின் இருப்பினைப் போன்று கைத்தறி இயந்திரங்களின் முடிவுப் பொருள் இருப்பும் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | பயிற்சிப் பிரிவின் பணிகள் தாமதமின்றி ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உற்பத்தி ஆலோசகர் ஒருவர் விலகிச் சென்றுள்ளதுடன் புதிய ஆலோசகர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும், விண்ணப்பதாரர்கள் முன்வந்திருக்கவில்லை. | உற்பத்தி ஆலோசகர் ஒருவரை ஆட்சேர்த்து பயிற்சி பிரிவின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில் லை. |
| (இ) | கற்புலனற்றவர்களுக்கு கலைத்துவ பயிற்சிகளை தொடர்வதற்கு அல்லது தொழிற்பயிற்சியை பெற்றுக்கொள்வதற்கு இயலுமான வகையில் அவர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்கு மற்றும் கற்புலனற்றோரால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்காக சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குதல் அதிகரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 02 நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிதியேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கற்புலனற்றவர்களுக்கு தேவையான பயிற்சி சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றமையால் அந்த நோக்கங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. | நிதியத்திற்கு கிடைக்கும் நிதி ஒதுக்கீடு மட்டுப்படுத்தப்பட்டமையால் தங்குமிட வசதிகளை வழங்குதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், கற்புலனற்றோரால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சீதுவ தொழிற்பயிற்சி நிலையத்தில் நடாத்திச் செல்லப்படும் ஊக்குவிப்பு சந்தை மூலமாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தங்குமிட வசதிகளை வழங்குவதற்கு தேவையான கவனம் செலுத்தப்பட்டிராததுடன், உற்பத்தி சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குவதற்கு போதுமான நிலைமையொன்று அல்ல. |

## 43. கணக்காய்வு நிறுவனத்தின் பெயர் - தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 – முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 – பாதகமான அபிப்பிராயம்

2020 – முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அபிப்பிராயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட தவிர்ப்பு நடவடிக்கைகள் | அது தொடர்பிலான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தில் பொது நிர்வாக செலவுகள் விசேட மீண்டுவரும் செலவுகளாக காட்டி 2018 ஆம் ஆண்டில் ரூபா. 23,690,558 பெறுமதியான தொகை பொறுப்பு நிதியில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. | நிதியத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் அடைந்துகொள்வ தற்கு விசேட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தேவையான மீண்டுவரும் நிதிக் குறைபாடுகள் மட்டும் சீர்செய்யப்பட வேண்டும். மற்றும் ஏனைய மீண்டுவரும் செலவுகளிற்கான கொடுப்பனவாக மேற்கொள்ள முடியாது. | 2018 ஆம் ஆண்டின் பின்னர் இதுவரையிலும் பாதுகாப்பு சேவை செலவினம், மலசலகூட சுத்திகரிப்பு, மேலதிக நேரம் போன்ற பொதுவான நிர்வாக செலவினங்கள் பூங்கா நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருக்க வில்லை. | பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 13 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள், ஆதனங்கள், பொறிகள் உபகரணங்களாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் நிதியத்தினால் தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் மற்றும் அதன் நிர்வாக நடவடிக்கைகளுக்காக வைக்கப்பட்டுள்ளதுடன் | பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த திணைக்களங்கள் திணைக்களத்தின் சொத்துக்களாக கருதி CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்குவதற்கு ம் பூங்காக்கள் இறுதிக் கணக்குகளினுள் டியரளவில் அந்த சொத்துக்களை உள்ளடக்குவதற்கு ம் நடவடிக்கை | பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய பெறுமதி ரூபா 560,010,287 தொகையான ஆதனங்கள், பொறிகள் உபகரணங்கள் நிதியத்தின் சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. | | எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 2018 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய பொது 02/2018 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், இந்த நிதியத்தை மூடி விடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். 2021 ஏப்ரல் 23 ஆந் திகதி வரையிலும் அந்த அச்சட்டரீதியான நிதியம் தாபிக்கப்படாமல் 2020 ஆம் ஆண்டுக்காக ரூபா 64,689,090 ஆன செலவினம் மேற் கொள்ளப்பட்டிருந்தது. | இந்த நிதியானது சட்டரீதியான நிதியமொன்றாக உருவாக்கப்படவே ா வேண்டும் அல்லது சுற்றறிக்கையின் பிரகாரம் கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. | நிதியத்தினை சட்டரீதியான நிதியமொன்நாக நிறுவி எதிர்காலத்தில் நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்க ி ன்றேன். | இதுவரையிலும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருக்க வி ல்லை. |

## 44. கணக்காய்வு நிறுவனத்தின் பெயர் - துருசவிய நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் -

2018 – முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 – முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 – முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அபிப்பிராயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட தவிர்ப்பு நடவடிக்கைகள் | அது தொடர்பிலான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | -------------------------------- | ------------------------- | -------------------------- | ---------------------------------- |
| (அ) | களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி மற்றும் கம்பஹா ஆகிய 04 மாவட்டங்களில் 30 துருசவிய சங்கங்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் மற்றும் கடன் தொகையில் ரூபா 826,109 ஆன பெறவேண்டிய பகுதியொன்று 05 வருட காலமாகக் காணப்படுவதுடன் அறவிடப்படாது காணப்பட்டது. அத்துடன் சங்கங்கள் 2020 ஆம் ஆண்டு வரையிலும் செயற்பாட்டில் இருந்தனவா என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கடனை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | இந்த சங்கங்களுக்காக பல தவணைகளில் கடிதம் மூலம் அறவிக்கப்பட்டுள் ளது. | கடன் அறவிடப்பட்டிருக்கவில் லை. |
| (ஆ) | 2008 மார்ச் 03 ஆந் திகதிய 1/2008 ஆம் இலக்க திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச வங்கிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் முதிர்ச்சியடைகின்ற போது இடைக்கால முதலீடுகளிற்காக | திறைசேரியால் வெளியிடப்பட்டுள் ள சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணம் முதலீடு செய்யப்படல் வேண்டும். | தவிர்ப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில் லை. | சுட்டிக்காண்பிக்கப்பட்டு ள்ள குறைபாடுகள் அவ்வாறே காணப்பட்டன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலங்கை மத்திய வங்கி மற்றும் திறைசேரியினால் செலுத்தப்படும் வட்டி வீதத்திற்கு உட்பட்டு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிகளிற்கு வங்கி வைப்புக்களில் அல்லது திறைசேரி பிணை முறிகளில் மீள் முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2017 ஆம் வருடத்திலிருந்து 06 மாத குறுகிய வைப்புக்களில் அரச வங்கிகளில் அரச வங்கிகளில் முதலீடுகள் செய்யப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் முதலீடுகளின் தொகை ரூபா 9,201,093 ஆகும். | | | |
| (இ) | சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் நிலைமையை மேம்படுத்தும் நோக்குடன் 2020 திசெமபர் 31 இல் 14 மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட துருசவிய சங்கங்களில் எண்ணிக்கை 815 ஆக இருந்ததுடன் இச் சங்கங்களில் செயலற்ற நிலையில் காணப்படுகின்ற சங்கங்கள் இற்றை வரை இணங்காணப்படவில்லை. | செயலற்ற சங்கங்கள் இணங்காணப்படல் வேண்டும் என்பது. | மாவட்ட மட்டத்தில் விசேட சங்கங்களை மீள்கட்டமைக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டவாறு உள்ளது என்பது. | பெரும்பாலான சங்கங்கள் செயற்படு நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை வெளியிடப்பட்டுள்ள போதிலும், திட்டவட்டமாக அந்த சங்கங்கள் எவை என்பது மற்றும் சங்கங்களின் எண்ணிக்கை ஆகியவற்றை இனங்காண முடியாதிருந்தது. |
| (ஈ) | 2011 ஆம் வருடத்திலிருந்து 2016 ஆம் வருடம் வரை மொனராகலை மாவட்டத்தில் சிறு தோட்டத் தொழில் முயற்சியாளர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட 130 | பொறுப்பேற்றல் தாமதமின்றி மேற்கொள்ளப்படல் வேண்டும். | துருசவிய நிதிய ஆதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அந்த சங்சந்த துருசவிய நிதியத்தின் கீழே பதிவு செய்யும் விசேட நிகழ்ச்சித்திட்டமொன்று | 53 சங்கங்கள் இதுவரையிலும் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், 26 ஒருங்கிணைந்த நிலையங்கள் செயற்படு நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிராமிய இறப்பர் மன்றங்கள் மற்றும் 31 ஒன்றினைந்த பதப்படுத்தும் மத்திய நிலையங்கள் செயற்திறனுடன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு துருசவியவிற்கு பொறுப்பேற்குமாறு பணிக்கப்பட்டுள்ள போதிலும், 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையில் பொறுப்பேற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | | நடைமுறைப்படுத்தப்பட்ட வாறு உள்ளபடியாக. | |
| (உ) | 2005 ஆம் வருடத்தில் அருப்பொல மற்றும் 2008 ஆம் வருடத்தில் கனேபல்ல இறப்பர் சீட் ஒன்றினைந்த பதப்படுத்தும் மத்திய நிலையங்கள் 02 இன் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 1,000,184 ஆனது செலவிடப்பட்டிருந்தது. எனினும், ஒன்றினைந்த மத்திய நிலையம் இரண்டினதும் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டின் போது 15 வருடங்களுக்கும் அதிக காலம் கடந்து விட்ட போதிலும் நிர்மாண வேலைகள் முடிக்கப்படவில்லை. | நிர்மாணப் பணிகள் விரைவில் முடிக்கப்படல் வேண்டும். | சங்கத்தின் பங்களிப்பினை பெற்று எதிர்கால பணிகளை மேற்கொள்வதற்கு நிதியத்தின் தலைவரினால் அறிவிக்கப்பட்டுள்ளமை. | சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் அவ்வாறே காணப்படுகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2020 ஆம் ஆண்டின் போது சனாதிபதிச் செயலகத்தின் நிதியிலிருந்து பெறப்பட்ட ரூபா 2,000,000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்று ஓட்டிச் செல்ல முடியாமல் சுற்றுச் சூழலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வாகனம் பழுது பார்க்கப்படல் வேண்டும். | போதியளவான நிதி ஒதுக்கீடு செய்யப்படாமையால் பழுதுபார்க்க முடியாதுள்ளமை. | சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடு அவ்வாறே காணப்பட்டது. |

## 45. கணக்காய்வு நிறுவனத்தின் பெயர் - மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் புகை பரீட்சித்தல் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் -

2018 – முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

2019 – முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

2020 – முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

| | கணக்காய்வு அபிப்பிராயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட தவிர்ப்பு நடவடிக்கைகள் | அது தொடர்பிலான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | -------------------------------- | ----------------------------- | ---------------------------- | ---------------------------------- |
| (அ) | 2013 யூலை 3 மாதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கை 2018 ஜூலை மாதம் முடிவுற்றிருந்த போதிலும், நடமாடும் வாகனம் கழிவுப் புகை வெளியேற்றும் நிதியத்திடம் ஒப்படைக்கப்படுவதற்கு, ஒப்பந்தக் காலத்தினை நீடிப்பதற்கு அல்லது புதிய உடன்படிக்கையொன்றினை ஏற்படுத்துவதற்கு 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பிற்கான உரிய பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2016.09.08 ஆந் திகதிய மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கடிதத்தின் மூலம் இந்த நடமாடும் வாயு தரத்தினை அளவீடு செய்யும் அலகு செயலிழந்துள்ளமை அறிவிக்கப்பட்டுள்ளதுடன், செயலிழந்துள்ள அந்த அலகினை மீண்டும் பழுதுபார்க்கும் வரையிலும் புதிய உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடல் தாமதமாகியுள்ளமை. | தற்போது மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் நடமாடும் வாயு தரத்தினை அளவீடு செய்யும் அலகினை பழுதுபார்க்கும் பணிகளுக்காக புதிய தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 09 டிப்போக்களில் பரீட்சிப்பு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு ரூபா. 21,937,500 செலவில் 10 | அதிகபட்ச செயலாற்றலைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அரச | உரிய நிலையத்திற்காக புகைப் பரீட்சிப்பு உபகரணங்களை கொள்வனவு | கழிவுப் புகை பரீட்சித்தல் சான்றிதழ் பத்திரங்களை வழங்குவதற்காக புதிய ஒப்பந்தங்களை கையளிப்பதற்கு எதிராக |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒளிபுகா மீற்றர் மானிகள் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு 2018 ஆம் ஆண்டில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறிருக்க, அந்த உபகரணங்களை வைப்பதற்குத் தேவையான இடங்களை அமைக்காமை, நிர்மாணித்தலைக் கைவிடல் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட 02 இடங்களில் பரீட்சிப்பினை ஆரம்பிக்காதிருத்தல் காரணமாகக் கொள்வனவு செய்யப்பட்ட நாள் தொடக்கம் இது வரையிலும் ஒரு வருடத்திற்கும் அதிக காலமாக பாவனைக்குட்படுத்தப்படா து காணப்படுகின்றது. | நிதியினைப் பயன்படுத்தல். | செய்யும் பெறுகை நடவடிக்கைகள் 2017.08.09 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந் ததுட ன், அந்த உபகரணங்கள் 2018.01.15 ஆந் திகதி கழிவுப் புகைப் பரிசோதனை அலுவலகத்திற்கு கிடைத்திருந்தமை மற்றும் இந்த உபகரணங்களை பயன்படுத்தல் தொடர்பில் விநியோக கம்பனியால் இலங்கை தொழில்நுட்ப பயலுநர்களை பயிற்றுவித்து கையளிக்கப்பட்டிரு ந்தது என்பது. | தொடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகளுக்காக மூன்றாம் தரப்பினருக்கு புகைப் பரீட்சித்தல் சான்றிதழை வழங்குவதற்காக அனுமதி வழங்க முடியாமையால் இந்த பரீட்சிப்பு உபகரணங்களை பயன்படுத்தி இலங்கை போக்குவரத்து சபையின் வாகனங்களுக்கு மாத்திரம் கழிவுப் புகைச் சான்றிதழ் வழங்கப்பட்டு வருமான அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள 2021/01/07 ஆந் திகதி மோ.போ.ஆ.நா. இனால் அங்கீகாரம் வழங்ப்பட்டிருந்தது. |
| (இ) | செயலிழந்த 07 வாயுப் பகுப்பாய்வாக்கிகளின் திருத்த வேலைகள் இது வரையிலும் மேற்கொள்ளப்படாது தலைமைக் காரியாலாயத்தில் தேக்கி வைக்கப்பட்டிருந்ததுடன் 03 வாயுப் பகுப்பாய்வாக்கிகள் காணாமல் போயிருந்தன. அவ்வாறே, 04 ஒளிபுகா மீற்றர் மானிகள் செயலிழந்தும் மற்றும் பாதுகாப்பின்றியும் காணப்பட்டதுடன் 01 காணாமலும் போயிருந்தது. | சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முறையினைச் செயற்படுத்தல். | உபகரணங்கள் காணாமல் போயிருக்கவில்லை. தற்போதுள்ள உபகரணங்களை சரியான முறையில் களஞ்சியப்படுத்த குறித்துக் கொள்ளப்பட்டுள்ள து என்பது. | செயலிழந்துள்ள வாயுப் பகுப்பாய்வாக்கி உபகரணங்கள் தற்போது பிரைம் என்ஜினியரிங் கம்பனிக்கு பழுதுபார்த்தல்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அவற்றுள் 7 உபகரணங்கள் பழுதுபார்க்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2019 ஆம் ஆண்டில் 5,200,407 வாகனங்களுக்குப் புகைச் சான்றிதழ் வழங்கப்பட்டிருப்பினும், நிதியத்தினூடாக வீதிப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதில் 9,317 வாகனங்களுக்கு மட்டுமே அது வழங்கப்பட்ட புகைச் சான்றிதழ்களுடன் ஒப்பிடுகையில் 0.18 சதவீதமான மிகக் குறைந்த பெறுமதியாகும். | நிறைவேற்றும் செயல்களில் உயர்ந்த செயலாற்றல் இருத்தல் வேண்டும். | அதிகளவில் புகையுடனான வாகனங்கள் மற்றும் உமிழ்வு தரநிலைகளுக்கு இணங்காத வாகனங்கள் மட்டுமே சோதனைக்கு உட்படுத்தப்படும் என்பது. | தற்போதுள்ள பதவியணியினுள் தற்போது ஆகக் கூடிய அளவிலான பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (உ) | கழிவுப் புகைச் சான்றிதழ் வழங்குவதற்காக 02 தனியார் நிறுவனங்களுடன் 2007 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையில் 4.1 ஆம் நிபந்தனைக்கமைய அந்த நிறுவனம் சேகரிக்கும் வருமானத்தில் 10 சதவீதம் 07 நாட்களுக்குள் நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டியதுடன் அந்த 07 நாட்கள் மீதும் ஒவ்வொரு நாளுக்கும் 3 சதவீத தண்டப்பணம் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறிருக்க, நிதியத்தினால் இந்த 07 நாட்களை 07 வேலை நாட்களாகக் கருதியிருந்தமையால் தாமதக் கொடுப்பனவுகளுக்கு உரிய தண்டப்பணமாக | உடன்படிக்கை நிபந்தனைகளை சட்டரீதியாக வரைவிலக்கணப் படுத்த வேண்டியமை மற்றும் தண்டப்பணம் சரியாக அறவிடப்பட வேண்டியமை. | குறித்த உடன்படிக்கையின் அரச விடுமுறைகள் அல்லது வார இறுதி நாட்கள் உள்ளடக்கப்படுகின்றதா என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டிராமை, கம்பனியால் சேகரிக்கப்படும் வருமான அறிக்கைகள் தொடர்பில் இந்த அலுவலகத்திற்க அனுப்பப்படுகின்றமை மற்றும் அதற்கமைய இதுவரையிலும் குறித்த நிறுவனங்கள் சரியான திகதியில் பணம் அனுப்பப்பட்டிராமை. | இது தொடர்பில் நம்பிக்கைப் பொறுப்பு சபைக்கு கட்டுப்பாட்டுச் சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை, அதன் போது 10 சதவீதமான பரிசோதனைக் கட்டணங்கள் சேகரிக்கப்பட்ட திகதியிலிருந்து 7 நாட்களினுள் நிதியத்திற்கு பணம் அனுப்பப்பட வேண்டும் என அங்கீகாரம் கிடைத்துள்ளது. மேலும், குறித்த கம்பனிக்கு 2020.02.20 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் க.உ. இனால் அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2018 ஆம் ஆண்டில் மட்டும் ரூபா 41,137,584 அறவிடப்பட வேண்டி இருந்தது. | | | |
| (ஊ) | கழிவுப் புகைப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்படும் கம்பனிகளால் அறவிடப்படும் கட்டணங்களை பரீட்சிப்பதற்கு தற்போதுள்ள தகவல் கட்டமைப்பு (ICTA) செயலிழந்துள்ளமையால் அந்த கம்பனிகளிலிருந்து கிடைக்கும் தகவல்களின் சரியானதன்மையை பரிசோதித்து அரசாங்கத்திற்க கிடைக்க வேண்டிய வருமானம் சரியாக கிடைத்துள்ளதா என்பதை பரிசோதிப்பதற்கான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதியத்தின் பணிகளை உரிய முறையில் பேணிச் செல்வதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள நடைமுறைகளை தொடர்ச்சியாக பேண வேண்டியமை. | தற்போது ICTA நிறுவனத்தின் ERL மூலம் இந்த தரவுகள் நிலைமாற்றப்படுவதுடன், அதன் மூலம் நிதியத்திற்கு கிடைக்கும் 10 சதவீதமான தொகை சரியானதென சான்றுபடுத்துவதற்காக அறிக்கையிடல் மொடியுல் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளமை மற்றும் அந்த கம்பனிகளிடமிருந்து கிடைக்கும் தகவல்களின் சரியானதன்மை தொடர்பில் பரிசோதித்து அரசாங்கத்திற்கு பெற வேண்டிய வருமானம் சரியாக கிடைத்துள்ளதா என்பது தொடர்பில் பரிசோதிப்பதற்காக அந்த மொடியுலிருந்து இந்த அலுவலகத்திற்கு தேவையான தரவுகளை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள முடியாது என்பது. மேலும், அது தொடர்பில் | தற்போது நிதியத்தினால் வழங்கப்படும் அமைப்புக்குறிப்பீடுகளின் பிரகாரம் உரிய இரு ஒப்பந்ததார நிறுவனங்களினால் நிரமாணிக்கப்பட்ட மென்பொருளொன்றினை பயன்படுத்துவதன் மூலம் பயன்படுத்தப்படுகின்மை மற்றும் ICTA நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ள ERL 02 நிகழ்ச்சித்திட்டத்தில்நிலவிய குறைபாடுகளை தவிர்த்து மீளவும் தரவுக் கட்டமைப்பினை நிறுவுவதற்கு புதிய முன்மொழிவுகள் ICTA நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பல்வேறு சந்தர்ப்பங்களில் ICTA நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளமை. | |
| (எ) | பெறப்பட்ட அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வாகனப் புகைப் பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை மூடுவதற்கு தீர்மானித்ததாக திறைசேரியின் செயலாளரின் 02/2018 ஆம் இலக்க மற்றும் 2018 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் உறுதி செய்யப்பட்டது. எவ்வாறெனினும், சுற்றறிக்கையின் பிரகாரம் கலைப்பவர் ஒருவரை நியமித்து சொத்துக்களில் பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்து எஞ்சியதை ஒருங்கிணைந்த நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு 2021 மார்ச் 15 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2020 ஆம் ஆண்டின் போது நிதியத்திற்கு சொந்தமான வைப்புக்களின் அளவு மாத்திரம் ரூபா 686 மில்லியனாக இருந்ததுடன் நம்பிக்கைப் பொறுப்பு உரித்துறுதியொன்றின் கீழ் | உரிய சட்டச் சூழலினுள் உரிய நடவடிக்கைகளை நிறைவேற்றுதல். | இந்த நிதியை மேலும் பராமரிக்க வேண்டியதன் அவசியத்தை குறிப்பிட்டு அமைச்சரவைப் பத்திரம் அனுப்பப்பட்டுள்ளதுடன், அதற்காக அமப/19/0519/123/027 ஆம் இலக்க 2019 மார்ச் 06 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் போக்குவரத்து அமைச்சருக்கும் நிதி அமைச்சருக்கும் இடையில் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் குறித்து அமைச்சர்கள் கலந்துரையாடி இணக்கம் தெரிவித்துள்ள விடயங்கள் தொடர்பில் அமைச்சரவை குறிப்பொன்று மீண்டும் அமைச்சரவைக்கு மீண்டும் பரிந்துரைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது | 2019.04.25 ஆந் திகதி திறைசேரியின் பிரதிச் செயலாளரின் தலைமையில் நம்பிக்கைப் பொறுப்பு சபை கூடி நிதியத்தின் நிலவுகை தொடர்பில் கலந்துரையாடி அமைச்சரவையின் தீர்மானம் கிடைக்கும் வரையிலும் நிதியத்தினை பேணுதல் மற்றும் அமைச்சரவை குறிப்பொன்றினை சமர்ப்பிப்பதற்காக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிறுவப்பட்டிருந்த இந்த நிதியத்தின் இரு தரப்பினரில் திறைசேரியின் செயலாளர் உரு தரப்பாவர். நிதியம் தாபிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு உரித்துறுதியின் 11(அ) பிரிவின் பிரகாரம், திறைசேரியின் செயலாளரின் அறிவிப்பின் அடிப்படையில் இந்த நிதியம் இரத்தாகியது. அதற்கமைய, மேற்படி சுற்றறிக்கை திறைசேரி செயலாளரால் வெளியிடப்பட்டமையின் அடிப்படையில் இது வரையிலும் குறித்த உடன்படிக்கை செய்யப்பட்ட கடப்பாட்டின் ஒரு தரப்பு வெளியேறியுள்ளது. இதன் காரணமாக நிதியத்தின் சட்டத்தன்மையும் பிரச்சினைக்குரியதாகியது. அதன் காரணமாக, திறைசேரி பிரதி செயலாளரின் தலைமையில் நம்பிக்கைப் பொறுப்புச் சபை கூட்டப்பட்டு குறித்த நிதியத்திற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளும் வரையிலும் நிதியத்தினை நடாத்திச் செல்ல தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | | என்பது. | |
| (ஏ) | கணக்காண்டு நிறைவடைந்து 02 மாதங்களினுள் செயலாற்றல் அறிக்கைகளை தயாரித்து | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | தற்போது மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் செயற்றிறன் அறிக்கையுடன் | 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க எந்த நடவடிக்கையும் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அரச நிதிப் பணிப்பாளருக்கான பிரதிகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அவ்வாறான செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | என்பது. | இந்த நிதியத்தின் செயற்பாட்டு அறிக்கையுடன் ஒரு பத்தி மாத்திரம் சேர்க்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய செயல்திறன் அறிக்கையை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | எடுக்கப்படவில்லை. |
| (ஐ) | கொள்வனவு செய்யப்பட்ட சஞ்சரிக்கும் காற்றின் தரத்தினை அளக்கும் 02 நிலையான கருவிகள் மற்றும் வளித்தரக் குறிகாட்டி காட்சிப்பலகைகள் 02 மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், எஞ்சிய நடமாடும் சஞ்சரிக்கும் வாயுப் பிரிவு தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனங்களால் சேகரிக்கப்பட்ட தரவுகள் 2019ஆம் ஆண்டு முதல் புகைப் பரீட்சித்தல் நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட போதிலும், அந்த தரவுகளை ஆக்கபூர்வமான முறையில் வளியின் தரத்தினை முகாமை செய்வதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை | அதிகபட்ச செயல்திறனை அடைய பொது நிதியைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் | இலங்கையில் காற்றின் தரம் குறித்த நிகழ்நேரத் தரவைப் (Real Time Data) பெறுவதற்குக் கிடைக்கும் ஒரே மும்முனைக் கருவி இதுவாகும். மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை காற்றின் தரக் குறியீட்டை Air Quality Index ஒன்று அடையாளம் கண்டு அதற்கமைய பொதுமக்களுக்கு சுற்றும் காற்றின் தரத் தரவைக் காண்பிக்கும் மற்றும் ஆர்வமுள்ள தரப்பினர் தரவைப் பெறுவதற்காக நிறுவனங்களில் | இந்தச் சாதனங்களிலிருந்து பெறப்பட்ட பகுப்பாய்வுத் தரவுகளை பொதுமக்கள் மற்றும் ஆர்வமுள்ள தரப்பினர் அறிந்து கொள்வதற்காக அச்சு மற்றும் மின்னணு வடிவில் வெளியிட இயக்குநர்கள் குழுவின் முடிவு குறித்து மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>நிதியத்தின் இயக்குநர்கள் குழுவின் ஒப்புதலைப் பெற்ற பிறகு (2020.01.16 ஆந் திகதி மற்றும் 2020.11.03 ஆந் திகதிய கட்டுப்பாட்டுச் சபை கூட்டங்களில்) பெற்ற பின்னர் அந்த உபகரணங்களின் பராமரிப்பு, அளவுத்திருத்தம் மற்றும் பழுதுபார்ப்பு போன்ற பணிகளை ஒரே நிறுவனங்களே மேற்கொள்ளும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | . மேலும், மொத்தக் கொள்வனவுக் கிரயமான ரூபா 130 மில்லியனான இந்த உபகரணங்களின் பாதுகாப்பு, பயன்பாடு, பராமரிப்பு, அளவீடுகளை பெற்றுக்கொள்ளல், தரவுகளை பரிமாற்றல் ஆகியவை தொடர்பில் இணக்கம் ஏற்படும் வகையில் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கு நிதியத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | இணையதளங்களில் அதைக் காண்பிக்கும் என்பது மற்றும் காற்றின் தர முகாமைத்துவ நிலையம் மூலம் தேவையான கொள்கைத் தீர்மானங்களை எடுப்பதற்கு இந்த கருவிகளில் இருந்து அளவிடப்படும் தரவு முடிவுகள் பயன்படுத்தப்படுகிறது என்பது. | வகையில், மத்திய சுற்றாடல் அதிகாரச்சபைக்கு மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்க முடிவு செய்யப்பட்டது. |
| (ஓ) | நிலையான வைப்புகளில் உயர்ந்த வட்டிக்கு முதலீடு செய்யப்பட்ட ரூபா 1,270,934,392 மீளாய்வாண்டில் அகற்றப்பட்டு சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இதனால் அதிக வட்டித் தொகையைப் பெறக் கூடிய இலாபகரமான நிலைமையை நிதியம் இழந்துள்ளது. | அரச நிதியினை இலாபமான விதத்தில் ஈடுபடுத்தல். | உலகளாவிய தொற்றுநோய் காரணமாக 2020 ஒக்டோபரில் ஆளுகை சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள இயலாமையால் இந்தப் பணத்தை மீண்டும் முதலீடு செய்ய முடியாதிருந்தது. | 2022 மார்ச் மாதத்தில் ரூபா 300 மில்லியன் 6 மாதங்களுக்காக நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.எவ் வாறான போதிலும், 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதியத்தின் திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 624,524,028 மற்றும் சேமிப்பு கணக்கின் மற்றும் நடைமுறைக் கணக்கின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 259,514,441 ஆக காணப்பட்டது. |

## 46. கணக்காய்வு நிறுவனத்தின் பெயர் - COVID 19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2020 – முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

| | கணக்காய்வு அபிப்பிராயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட தவிர்ப்பு நடவடிக்கைகள் | அது தொடர்பிலான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | அரசியலமைப்புச் சட்டத்தின் 149 ஆம் உறுப்புரையின் பிரகாரம் ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தினால் அங்கீகரிக்கப்படும் பாதீட்டுக்கு புறம்பாக வருமானத்தை சேகரித்தல் மற்றும் செலவினம் மேற்கொள்ளல் அங்கீகரிக்கப்படாத போதிலும், பாராளுமன்றத்தின் அங்கீகாரமின்றி 2020 ஏப்ரல் 16 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்த நிதியத்திற்காக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அத்திகதி முதல் ஒரு வருட காலப்பகுதியினுள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய பாராளுமன்ற அங்கீகாரமானது கணக்காய்வுத் திகதியான 2021 ஒக்தோபர் 08 ஆந் திகதி வரையிலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதித்தினை தாபிக்குமத் சந்தர்ப்பத்தில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருந் தமையால் 2020 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அந்த சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. குறித்த அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | பணத்தை பொறுப்பேற்கும் உத்தியோகத்தர் ஒருவருக்கு கிடைக்கும் அனைத்து பணமும் காசுப் புத்தகம் மற்றும் அதற்குரிய ஏனைய புத்தகங்களில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், நேரடி வைப்புகளாக நாளொன்றில் கிடைக்கும் அனைத்து வைப்புகளினதும் கூட்டுத்தொகை மாத்திரம் காசுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | நிதிப்பிரமாணத்தின் பிராகரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒரே நாளில், ஏராளமான நன்கொடையாளர்கள் நிதியத்தின் அதிகாரப்பூர்வ வங்கிக் கணக்கில் நேரடியாக வைப்புக்களாக நன்கொடையளித்திருந்தமையால், நன்கொடையாளர்களின் அடையாளங்களைக் கண்டறிய முடியாததால், இத்தகைய நேரடி நன்கொடைகள் மற்றும் அடையாளங்களை வெளியிட விரும்பாத நன்கொடையாளர்களின் நாளொன்றின் பெறுவனவுகளின் தொகுப்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பெயரில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு பெறுவனவாக பதிவு செய்யப்பட்டுள்ளமை மற்றும் அந்த பெறுவனவுகளின் கூட்டுத்தொகையின் விரிவான தகவல்கள் நிதியத்தின் வங்கிக் கணக்கு அறிக்கையில் உள்ள குறிப்புகளுடன் | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் நேரடி வைப்புகளை இனங்காணும் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உறுதிப்படுத்தப்படுகின்றது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். | |
| (இ) | 2020 மே 15 ஆந் திகதிய முகாமைத்துவக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நிதியத்திற்கு கிடைக்கும் நன்கொடைகளை வரியிலிருந்து விலக்களிப்பதற்காக நடவடிக்கை எடுக்க தீர்மானித்திருந்த போதிலும், 2021 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் நிதியத்திற்கு கிடைக்கும் நன்கொடைகளை வரியிலிருந்து விலக்களிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முகாமைத்துவக் குழுவின் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது. | பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்ததுடன் இணைந்ததாக நன்கொடைகளை வரியிலிருந்து விலக்களிப்பதற்கு இயலுமானதாக இருக்கும். | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | Covid 19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்தின் மூலம் பின்வரும் நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்டது.<br>• மருந்துகள், மருந்து பரிசோதனை உபகரணங்கள் உட்பட சுகாதார வசதிகள் மேலும் கோவிட் 19 தொற்றுநோயை எதிர்த்துப் போராடும் திறனை அதிகரிக்க அவசர நிதி உதவியை வழங்குதல். | நிதியத்தின் பணத்தை உச்சமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | கோவிட் 19 சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்தின் நோக்கங்களின் கீழ் நிதி வழங்கக்கூடிய திட்டங்களுக்கு முகாமைத்துவக் குழுவால் பெறப்பட்ட முன்மொழிவுகளை பரிசீலித்து நிதி விடுவிக்கப்படும். கொவிட் தொற்றுநோய் சூழ்நிலையில் பெரும்பாலான செயற்திட்டங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு | நிதியத்தில் உள்ள பணம் நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்ற பயன்படுத்தப்படவில்லை மற்றும் பணம் நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டது. |

- சுகாதார சேவைகள், சுகாதார சேவைப் பணியாளர்கள் மற்றும் அத்தியாவசிய பொதுச் சேவை வழங்குநர்களின் சுகாதாரப் பாதுகாப்புக்கான செலவுகள்.
- குழந்தைகள், பெண்கள், குறைந்த வருமானம் உள்ளவர்கள், முதியவர்கள், ஊனமுற்றோர் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு அடிப்படைத் தேவைகளை வழங்குதல்.
- கிராமப்புற மற்றும் தொலைதூர மருந்தகங்களுக்கு நிதி உதவி வழங்குவதன் மூலம் பொது சுகாதாரத் துறையை வலுப்படுத்துதல்.
- உள்ளூர் மூலப்பொருட்கள், வளங்கள், அறிவு மற்றும் திறன்களைப் பயன்படுத்தி சுகாதாரப் பொருட்களை உற்பத்தி செய்யவும், உற்பத்தி செய்யவும் மற்றும் விநியோகிக்கவும் உள்நாட்டு மருத்துவப்

உதவிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டமையால், நிதியை ஈடுபடுத்த போதிய அளவிலான திட்ட முன்மொழிவுகள் முகாமைத்துவக் குழுவிற்கு பெறப்படவில்லை. இதன்படி, தொற்றுநோய் சூழ்நிலையில் நடத்தைக்கு ஏற்ப பணத்தை உடனடியாகப் பயன்படுத்துவது மற்றும் பணத்தை செயலற்ற நிலையில் வைத்திருத்தல் பொருத்தமானதல்ல என்பதைக் கண்டறிந்ததால், நிதியத்தின் நிதிச் சொத்துக்கள் 07 நாட்கள், 31 நாட்கள், 03 மாதங்கள், 06 மாதங்கள் மற்றும் 01 வருடங்கள் நிலையான வைப்புகளில் வைப்புச் செய்யப்பட்டன. இது நிதியத்தின் நிதி சொத்துக்களை அதிகரிக்க உதவியது என்பது.

பிரிவுகளுக்கு உதவுதல்.

- உலக சந்தையில் உயர்தர பாதுகாப்பு ஆடை மற்றும் சுகாதார பொருட்களை வழங்க புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்.

2020 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்தம் ரூபா 1,641.73 மில்லியன் நிதியின் மீதியானது, மேற்குறித்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாது வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 6.25 மில்லியன் மற்றும் நடைமுறைக் கணக்கில் ரூபா 111.06 மில்லியன் என பணம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், நிலையான வைப்புக்களில் ரூபா 1,524.42 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

## 47. கணக்காய்வு நிறுவனத்தின் பெயர் - எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2020 – முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

| | கணக்காய்வு அபிப்பிராயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட தவிர்ப்பு நடவடிக்கைகள் | அது தொடர்பிலான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | நிதியத்திற்கு தொடர்ந்தியங்கும் தன்மையொன்று இல்லையென முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்ட காரணத்தால், நிதியத்தினால் இலங்கை மின்சார சபையின் மூலதன பங்களிப்பிற்காக முதலீடு செய்யப்பட்டுள்ள ரூபா 48,000,000,000 பெறுமதி நடைமுறைப் பொறுப்பாக வகைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், நடைமுறையில் அதனை அறிக்கையிடும் காலப்பகுதியின் பின்னர் பன்னிரெண்டு மாத காலப்பகுதியினுள் எவ்வாறு தீர்வையாக்குவது என்பது தொடர்பில் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது. | நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ள சொத்துகளின் முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இந்த நிதியத்தை கலைப்பதற்கான பிரேரணையை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க முன்மொழியப்பட்டுள் ளதுடன், அதன் ஒப்புதலுக்குப் பிறகு, 2022 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தினுள் நிதியத்தை நிறுவுதல், அதன் பரிவர்த்தனைகள் மற்றும் பொறுப்புகளின் தீர்வு மற்றும் கலைப்பு ஆகியவற்றிற்காக பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறவுள்ளது. அதன் அடிப்படையில், நடப்புக் கணக்கு அறிக்கையில் உள்ள அனைத்து பொறுப்புகளும் நடைமுறை பொறுப்புகளாக வகைப்படுத்தப்பட்டு ள் ளது. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் நிதியத்தினை நிறுவ மற்றும் கலைப்பதற்காக பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | நடைமுறைப் பொறுப்பாக வகைப்படுத்தப்பட்டுள்ள திறைசேரியின் செயற்பாட்டு திணைக்களத்தினால் திறைசேரி உண்டியல்கள் வெளியிடப்பட்டு, இந்த நிதியத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 47,472,450,000 பெறுமதியில், தொடர்ந்தும் செலுத்துவதற்கு எஞ்சியுள்ள ரூபா 26,673,196,758 ஆன தொகையை செலுத்துவதற்கு 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக நிதியத்திற்கு சொந்தமாக காணப்பட்ட காசு மீதி ரூபா 378,108,419 மாத்திரம் ஆகும். அதன் பிரகாரம், நிதிக் கடப்பாடுகளிலிருந்து விலகுவதற்கு நிதியத்திடம் போதுமான அளவிலான காசு காணப்படாத காரணத்தால் நிதியத்தின் இயலாமை தொடர்பில் பொருண்மையான நிச்சயமற்றதன்மை உருவாகியிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ள பொறுப்புகள் முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 சனவரி 09 ஆந் திகதியின் பின்னர் மிகைப்பணம் கிடைத்திருக்கவில்லை. அது வரையிலும் வங்கி மீதியை நாளதுவரையாக்கியுள்ளதுடன், அந்த மீதி ரூபா 1,107,728,128.74 என்பது. | 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கடப்பாடுகளிலிருந்து விடுவிப்பதற்கு நிதியத்தின் மீதி போதுமானதாக காணப்படவில்லை. |
| (இ) | 2020 ஏப்ரல் 02 ஆந் திகதிய 20/0684/204/060 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் மற்றும், அதற்குரிய பிரிவுகள் மற்றும் 2020 மார்ச் 31 ஆந் திகதிய | நிதிக்கூற்றுக்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். | திழருத்துவதற்கு நடவக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் முகாமைத்துவ குழுவின் தலைவர் கையெழுத்திட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைச்சரவைத் தீர்மானத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம், மேற்படி நிதியத்தினை முகாமை செய்வதற்காக குழுவொன்றை நியமித்தல் அல்லது கட்டளைகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. மேலும், அமைச்சரவைப் பத்திரத்தின் 03ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் நிதியத்தின் செயலாளரான பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும். முகாமைத்துவக் குழுவின் தலைவர் மற்றும் மற்றும் ஒரு அங்கத்தவரால் சான்றுபடுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மேற்குறிப்பிடப்பட்ட செயலாளரின் கையொப்பத்துடன் மாத்திரம் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | | | |
| (ஈ) | அரசியலமைப்புச் சட்டத்தின் 149ஆம் உறுப்புரையின் பிரகாரம், அனைத்து அறவீட்டு வரிகள், தீர்வை வரிகள், | பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் நிதியத்தை முறையாக நிறுவுவதற்கு | எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியமானது திரண்ட நிதியத்திற்கு | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் நிலவரப்படி, இந்த நிதியம் இன்னும் பாராளுமன்றத்தால் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வீதவரிகள் மற்றும் மற்றும் கட்டணங்கள் ஆகிய வழிகளில் கிடைக்கும் வருமானங்களும், குறித்த பணிக்காக ஒதுக்கீடு செய்யப்படாத குடியரசிற்கு சொந்தமான ஏனைய அனைத்து வருமானங்கள் மற்றும் பெறுவனவுகளும் திரண்ட நிதியத்திற்கு செலுத்த வேண்டும். எவ்வாறான போதிலும், 2020 மார்ச் 14ஆந் திகதி முதல் எரிபொருளின் விலையின் அடிப்படையில் அறவிடப்பட்டுள்ள மிகை அறவீட்டின் அடிப்படையிலான வருமானம் அவ்வாறு செலவு வைக்கப்படாது, எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | அந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புறம்பாக நிறுவப்பட்ட நிதியமொன்றாகும். வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களின்படி, எரிபொருள் விலையானது இலங்கை சுங்கத்தின் தகவல் தொழில்நுட்ப அமைப்பினால் தானாகவே கணக்கிடப்பட்டு, உறுதிப்படுத்தல் நிதியத்தின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும். | அங்கீகரிக்கப்படவில்லை, எனவே சேகரிக்கப்பட்ட வருமானம் திரண்ட நிதியில் செலவு வைக்கப்படவில்லை. |
| (உ) | அரசியலமைப்புச் சட்டத்தின் 149ஆம் உறுப்புரைக்கமைய ஒதுக்கீட்டு சட்டத்தினால் அங்கீகரிக்கப்படும் பாதீட்டுக்கு புறம்பாக வருமானத்தினை சேகரித்தல் மற்றும் செலவினம் மேற்கொள்ளப்படக்கூடாத போதிலும், பாராளுமன்றத்தின் அங்கீகாரமின்றி 2020 மார்ச் மாதம் 18 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்த நிதியத்திற்காக | உரிய அரசியலமைப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும் என்பது. | நான் ஒப்புக்கொள்கிறேன். எதிர்காலத்தில், அமைச்சரவையில் முன்மொழிவை சமர்ப்பித்து, அதன் ஒப்புதலைப் பெற்ற பின்னர், 01/2020 சுற்றறிக்கையின்படி, நிதியத்தை நிறுவுதல், அதன் பரிவர்த்தனைகள் மற்றும் பொறுப்புகள் மற்றும் கலைப்பு உட்பட நிதியின் அனைத்து நடவடிக்கைகளுக்கு | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் நிதியம் பாராளுமன்றத்தால் அங்கீகாரத்தினை பெற்றிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 01/2020 ஆம் இலக்க மற்றும் 2020 ஆகஸ்ட் 29ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அத்திகதி முதல் ஒரு வருடத்தினுள் பெற்றுக்கொள்ள வேண்டிய பாராளுமன்ற அங்கீகாரம் அல்லது கணக்காய்வுத் திகதியான 2021 செப்தம்பர் 06 ஆந் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | ம் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் இருந்து பாராளுமன்ற அனுமதி பெறப்பட வேண்டும். | |
| (ஊ) | நிதியத்தினை நிறுவியமைக்கான நோக்கம் விலை ஏற்றம் மற்றும் வீழ்ச்சியின் போது விலை ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்துவதும் நிலையான விலையை பராமரிப்பதும் ஆகும். உலக சந்தையில் எரிபொருளின் விலை குறைவடைந்துள்ள போது எரிபொருள் இறக்குமதியின் போது மிகை அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டு நிலவிய விலைக்கே எரிபொருள் விற்பனை செய்யப்பட்ட காரணத்தால் 2020 மார்ச் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதியினுள் எரிபொருள் விலை நிலைப்படுத்தல் நிதியம் ரூபா 21,705,911,662 ஆன தேறிய மிகையொன்றினை | விலை உறுதிப்படுத்தல் நிதியத்தை நிறுவுவதற்கான ஸ்ரீ நோக்கங்களை அடைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | 2022 மார்ச் 23 ஆந் திகளி வரை எரிபொருள் விலை கடுமையாக உயர்ந்திருந்தாலும், நிதியத்தின் நோக்கங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஈட்டியிருந்தது. விலை நிலைப்படுத்தல் நிதியமொன்றினை நிறுவுவதற்கான நோக்கமானது விலை அதிகரிக்கும் போது மற்றும் குறைவடையும் போது ஏற்படும் விலைத் தளம்பல்களைக் கட்டுப்படுத்தி நிலையான விலையொன்றினை பேணுதல் ஆன போதிலும், இந்த மிகையானது தேசிய விலை உறுதிப்பாட்டினை பேணுவதற்கான திரவத்தன்மையான சொத்தொன்றாக பேணிச்செல்லல் தொடர்பில் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று அல்லது அங்கீகாரமொன்று குறிப்பிடப்படாததுடன், அதில் காணப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் நிதியத்தின் ரூபா 48 மில்லியனான தொகை மின்சார சபைக்கு மூலதனப் பங்களிப்பொன்றாக வழங்கப்பட்டு, அதனை நிதி நிலமைக்கூற்றில் குறுங்கால மூதலீடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | | | |
| (எ) | 2020 ஏப்ரல் 02 ஆந் திகதிய 20/0684/204/060 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் மற்றும், அதற்குரிய பிரிவுகள் மற்றும் 2020 மார்ச் 31 | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | குழுவை நியமனம் செய்து கட்டளைகளை வழங்குதல் 2022 மார்ச் 23 வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் 02 ஆம் பந்தியின் பிரகாரம், மேற்படி நிதியத்தினை முகாமை செய்வதற்காக குழுவொன்றை நியமித்தல் அல்லது கட்டளைகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஏ) | திறைசேரி உண்டியல்களை வெளியிடுவதன் மூலம் திரண்ட நிதியத்திற்கு நிதியை பெற்றுக்கொண்டு அதன் ஊடாக எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியத்திற்கு ரூபா 47,472,450,000 ஆன தொகை திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக 2020 ஆம் ஆண்டின் போது பாராளுமன்றத்திடமிருந்து உரிய நிதியேற்பாட்டினை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | நிதியேற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். | எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியத்திற்குத் தேவையான ஆரம்ப மூலதனம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பொறிமுறையின் மூலம் திறைசேரி உண்டியல்கள் மூலம் ரூபா 47.472 பில்லியன் முன்பணமாக பெறப்பட்டுள்ளது. மேலும், திறைசேரி உண்டியல்களை வழங்கி விடுவித்தல் பிரதான பேரேட்டுக் கணக்குகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. | 2022 மார்ச் 23 வரையிலும் பெறப்பட்ட முற்பணத்தை தீர்ப்பனவு செய்வதற்கு திரட்டிய நிதியத்திலிருந்து நிதியேற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | 2020 மார்ச் 11ஆந் திகதி வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் திறைசேரியின் செயலாளரினூடாக நிதி, பொருளாதாரம் மற்றும் | எரிபொருள் விலை வேறுபாடு தொடர்பாக நிதியத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் அடைந்துகொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | எரிபொருள் விலை வேறுபாடு தொடர்பாக நிதியத்தில் இருந்து அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் 2022 மார்ச் 23 வரையிலும் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவி |

கொள்ளை அபிவிருத்தி அமைச்சரின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்ட குறிப்பிற்கமைய, 2020 மார்ச் 09 ஆந் திகதியளவில் சர்வதேச சந்தையில் மசகெண்ணெய் விலை 42.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், அது அப்போது பீப்பாயொன்று ஐ.அ.டொலர் 34.63 ஆக காணப்பட்டதாகவும், 2019 செப்தம்பர் மாதமளவில் அது ஐ.அ.டொலர் 59.73 ஆன காணப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ல்லை.

- இது தொடர்பில் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட கணிப்பீடுகளுக்கமைய மசகெண்ணெய் விலை வீழ்ச்சியடைந்தமையால் எரிபொருள் லீட்டரொன்றின் விலை பின்வருமானு வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

| | **பெற்றோல் 92 ஒக்டேன்** | **பெற்றோல் 95 ஒக்டேன்** | **ஒட்டோ டீசல்** | **சுப்பிரி டீசல்** |
|---|---|---|---|---|
| | ----------- | ----------- | ---------- | ---------- |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| விலைச் சீராக்கம் (லீட்டருக்கு) | 12 | 15 | 14 | 20 |

(அண்ணளவாக)

| | |
|---|---|
| • இந்த விலை வீழ்ச்சியின் நலன், வழங்கப்பட்டுள்ள வரிச் சலுகைகள் ஆகியவற்றை அறவீடு செய்த பின்னர் மொத்த நிதியேற்பாட்டினையும் பொதுமக்களுக்கு வழங்குதல், வரி அறவீட்டினை அதிகரித்து மொத்த நலனையும் அரச வருமானத்திற்கு பெற்றுக்கொள்ளல், எரிபொருளின் சில்லறை விலையினை குறைத்தல் மற்றும் எரிபொருள் விலையில் மாற்றங்களை மேற்கொள்ளாது எரிபொருள் விநியோக நிறுவனங்களால் இறுதி 05 மாதங்களினுள் வழங்கப்பட்டுள்ள நட்டத்தினை ஈடுசெய்வதற்கான 04 மாற்றுவழிகளின் கீழ் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். |
| • எவ்வாறான போதிலும், வர்த்தக மற்றும் முதலீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் குறிப்பின் (ஆ) பந்திக்கமைய ஒட்டோ டீசலுக்காக ரூபா 11, பெற்றோல் 95 ஒக்டேனுக்காக | ஏற்றுக்கொள்கின்றேன். |

ரூபா 15, சுப்பிரி டீசலிற்காக ரூபா 20 எனுமாறு விலை குறைப்பின் சேமிப்பிற்காக சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் மிறை அறவீட்டினை மேற்கொள்வதற்கு அல்லது சந்தை விலையினை குறைப்பதற்காக நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

- அதன் பிரகாரம், 2020 மார்ச் 13 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள 2166/35 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் பின்வருமாறு எரிபொருள் தொடர்பில் தீர்வை வரியுடன் அறவிடப்பட வேண்டிய மிகை அறவீடு 2020 மார்ச் 14ஆந் திகதி முதல் 02 மாத காலத்திற்கு நடைமுறையில் இருக்கும் வகையில் விதிக்கப்பட்டிருந்தது.

ஏற்றுக்கொள்கின்றேன்.

| | **பெற்றோல் 92 ஒக்டேன்** | **பெற்றோல் 95 ஒக்டேன்** | **ஒட்டோ டீசல்** | **சுப்பிரி டீசல்** |
|---|---|---|---|---|
| | -------- | ------ | ------- | ------- |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| மிகை அறவீடு (லீட்டருக்கு) | 0 | 15 | 11 | 20 |

- பின்னர் சர்வதேச சந்தையில் மசகெண்ணெய் விலையில் தளம்பல் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் பின்வருமாறு மிகை அறவீட்டு பெறுமதியுடைய விசேட வர்த்தமானியினூடாக திருத்தப்பட்டிருந்தது.

2021 சனவரி 09 ஆந் திகதியின் பின்னர் மிகை அறவீடு கிடைத்திருக்கவில்லை. அதுவரையிலும் வங்கி மீதி நாளதுவரையாக்கப்பட்டுள்ளதுடன், அந்த மீதி ரூபா 1,107,728,128.74 ஆகும்.

| **வர்த்தமானி இலக்கம்** | **திகதி** | **நடைமுறையிலுள்ள காலம்** | **பெற்றோல் 92 ஒக்டேன்** | **பெற்றோல் 95 ஒக்டேன்** | **ஒட்டோ டீசல்** | **சுப்பிரி டீசல்** |
|---|---|---|---|---|---|---|
| ---------- | ------------ | ---------------- | -------- | ---------- | ---------- | ---------- |
| | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2172/6 | 2020.04.22 | 02 மாதங்கள் | 26 | 49 | 24 | 40 |
| 2181/13 | 2020.06.24 | 02 மாதங்கள் | 0 | 20 | 12 | 30 |
| 2189/57 | 2020.08.23 | 03 மாதங்கள் | 0 | 20 | 12 | 30 |
| 2203/1 | 2020.11.23 | 03 மாதங்கள் | 0 | 20 | 12 | 30 |
| 2213/7 | 2021.02.01 | 2021.02.02 ஆந் திகதி முதல் 2021.02.23 வரை | 0 | 0 | 0 | 0 |

- 2021 பெப்ரவரி 01ஆந் திகதி வெளியிடப்பட்ட 2213/7ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினூடாக 2020 நவம்பர் 23ஆந் திகதிய 2203/1 ஆம்

பதில் வழங்கப்படவில்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சட்ட விதி 2021 பெப்ரவரி 02ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் இரத்துச்செய்யப்பட்டிருந்த போதிலும், இந்த மிகை அறவீட்டுக்குரிய தற்போதைய நிலமை (2021 பெப்ரவரி 23ஆந் திகதியின் பின்னர்) கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டது. | | | |
| (ஒ) | நடப்பாண்டின் ஆகஸ்ட், ஒக்தோபர் மற்றும் திசெம்பர் மாதங்களில் முறையே ரூபா 12,000,000,442 ரூபா 6,054,992,400 மற்றும் ரூபா 2,744,260,400 ஆக ரூபா 20,799,253,242 கூட்டுத்தொகை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் வெளிவாரி பொறுப்புகள் கணக்கினூடாக உரிய திறைசேரி உண்டியல்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | திறைசேரி உண்டியல்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்கால அமைச்சரவை தீர்மானங்களின் பேரில், சம்பந்தப்பட்ட பொறுப்புகள் பொது திறைசேரியின் பொறுப்பாக இருக்கும் என்பதுடன், அதன் பிறகு தொடர்புடைய பொறுப்புகளில் 100மூ இனை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரை திறைசேரி உண்டியல்களை வெளியிட எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| (ஓ) | 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான விலை உறுதிப்படுத்தல் நிதியத்தினூடாக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 26,673,196,758 ஆன போதிலும், அந்த பெறுமதிக்குரிய திறைசேரி உண்டியல்களின் முகப்பெறுமதி ரூபா | செலுத்த வேண்டிய தொகைக்கும் திறைசேரி உண்டியல்களின் முகமதிப்புக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை எவ்வாறு குறைப்பது என்பது குறித்து ஒரு வழிமுறை வகுக்கப்பட | -மேற்படி- | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | 29,200,746,758 ஆகும். அதன் பிரகாரம், குறித்த திறைசேரி உண்டியல்களின் கழிவுப் பெறுமதியான ரூபா 2,527,550,000 ஆன அந்த வேறுபாடு, இந்த நடைமுறையின் காரணமாக திரண்ட நிதியத்திற்கு ஏற்படும் செலவினமொன்றாக அவதானிக்கப்பட்டது. | வேண்டும். | | |
| (ஔ) | 2021 சனவரி மாதம் 18ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், எரிபொரு விலை உறுதிப்படுத்தல் நிதியத்தினை வலுப்படுத்துவதற்காக ரூபா 48 பில்லியன் நிதி பொது திறைசேரியிலிருந்து விடுவிக்கும் நோக்கில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திறைசேரியின் செயலாளருக்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரையிலும் அந்த கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக் கவில்லை. | அமைச்சரவையி ன் முடிவின்படி தேவையான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நாட்டில் தற்போது நிலவும் கோவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் முன்னுரிமை செயல்பாடுகள் மற்றும் திறைசேரியின் தற்போதைய நிதி நிலைமை ஆகியவற்றைப் பொறுத்து, தொடர்புடைய ரூபா 48 பில்லியன் விடுவிக்கப்படவில்லை.இந்த நிதியத்தினை முடிவுறுத்த தேவையான நடவடிக்கை எதிர்காலத்தில் எடுக்கப்படும் என்பதால், இந்த விடுவிப்பு செய்யப்பட வேண்டுமா இல்லையா என்பது எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும். | 2022 மார்ச் 23 ஆந் திகதிக்குள், திறைசேரி செயலாளரால் தொடர்புடைய உத்தரவு செயல்படுத்தப்படவில்லை. |

## 48. கணக்காய்வு நிறுவனத்தின் பெயர் - சனாதிபதி நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 – முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

2019 – முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

2020 – முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

| | கணக்காய்வு அபிப்பிராயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட தவிர்ப்பு நடவடிக்கைகள் | அது தொடர்பிலான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | ------------------------------ | ----------------------- | ---------------------- | ---------------------------- |
| (அ) | அபிவிருத்தி லொத்தர் சபையினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம்பரிசு பெறுநர்கள் நிச்சயிக்கப்பட்ட திகதியிலிருந்து உரித்து கோரப்படாத பரிசுகள் 06 மாதங்களை கடந்ததன் பின்னர் நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். எனினும் அபிவிருத்தி 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் அரசுடைமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய பொருட்களின் பெறுமதி ரூபா 24,948,809 தொகை மற்றும் 2019 ஆம் ஆண்டுக்குரிய ரூபா 16,033,489 கூட்டுத்தொகை இதுவரையிலும் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அரசுடமையாக்கப் பட்ட கார்கள் மற்றும் இதர பொருட்களின் பண மதிப்பு, அபிவிருத்தி லொத்தர் சபையினால் காசாக்கப்பட்டு ஜனாதிபதி நிதிக்கு செலுத்தப்பட மாட்டாது. அரசுடமையாக்கப் பட்ட கார் பொருட்கள் மற்ற விளம்பர பரிசுகளுக்கு பயன்படுத்தப்படும் என அபிவிருத்தி லொத்தர் சபை எழுத்து மூலம் அறிவித்துள்ளது. | அபிவிருத்தி லொத்தர் சபையின் ஏற்பாடுகளிற்கு முரணாக பறிமுதல் செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் பொருட்கள் சீட்டிழுப்புக்களின் ஏனைய விளம்பரங்களுக்கு பயன்படுத்தப்படுகின்றன. |
| (ஆ) | ஒவ்வொரு நோய்களுக்காகவும் கொடுப்பனவு செய்யப்படும் போது அந் நோய்களுக்கு நிதியத்தின் நிர்வாக | சமனான வாய்ப்புக்களை வழங்கும் முறையொன்னை ற | அதிமேதகு சனாதிபதியால் விசேட அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவு | சம வாய்ப்புக்களை வழங்குகின்ற முறைமையொன்று 2022 பெப்ரவரி 28 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பொது எல்லையினை விஞ்சியதாக 2019 ஆம் ஆண்டின் போது 136 நோயாளர்களுக்கு மொத்தம் ரூபா 57,899,147 ஆனது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்நோய்களுக்கான கொடுப்பனவுகளின் எல்லைகள் விஞ்சப்பட்டமை அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுடன் ஒப்பிடும்போது நூற்றுக்கு 243 வீதமாகும். | உருவாக்குவதற்கான சாத்தியத்தைக் கருத்திற் கொள்ள வேண்டும். | செய்யப்பட்டிருந்தது. | லை. |
| (இ) | 2019 ஆம் ஆண்டின் போது நலன்புரிப் பணிகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 26,752,867 ஆன செலவுகளில் விசேட அங்கீகாரத்தின் பேரில் 66 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட அன்பளிப்புப் பரிசுகளின் கூட்டுத்தொகை உள்ளடங்கியுள்ளது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை மையமாகக் கொண்டு சம வாய்ப்புக்களை வழங்கும் முறைமையொன்றை உருவாக்குவதற்கான சாத்தியக் கூறுகளை கவனத்திற் கொள்ளல் வேண்டும். | குறிப்பிடப்பட்டுள்ளவாறு நலன்புரி நடவடிக்கைகளுக்காக செய்யப்பட்ட கொடுப்பனவுகள் அதிமேதகு சனாதிபதியின் அங்கீகாரத்தின் பேரில் சனாதிபதி நிதியத்தின் நோக்கம் மற்றும் செயற்பாடுகளுக்குரிய விசேட அங்கீகாரத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்து. | சம வாய்ப்புக்களை வழங்குகின்ற முறைமையொன்று 2022 பெப்ரவரி 28 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 71 ஆம் பந்தியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய சொத்துக்கள் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களாக வெளிக்காட்டப்படல் வேண்டும். நிதியத்திற்கு | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடங்களில் சரியாக காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2022 பெப்ரவரி 28 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டதா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 129 மில்லியனில் மிகுதி 12 மாத காலப் பகுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 12 மில்லியன் நடைமுறைச் சொத்துக்களாக மற்றும் மிகுதி ரூபா 117 மில்லியன் நிதியல்லாச் சொத்துக்களாக வேறு வேறாக காட்டப்படுவதற்குப் பதிலாக மொத்தப் பெற வேண்டிய தொகையும் நடைமுறைச் சொத்துக்களாக காட்டப்பட்டிருந்தது. | | | |
| (உ) | 2020 திசெம்பர் 31 இல் நிதியத்தின் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் அபிவிருத்தி லொத்தர் சபையில் செய்யப்பட்டிருந்த ரூபா 2,200,000 ஆன முதலீடுகள் காட்டப்பட்டிருந்தன. அம் முதலீடுகள் மதிப்பீடு செய்யப்பட்ட அடிப்படையானது கணக்கீட்டுக் கொள்கையில் வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. | குறிப்பிட்ட வெளிப்படுத்தல் கள் கணக்கீட்டுக் கொள்கைகளி ல் உள்ளடக்கப்ப டுதல் வேண்டும். | வெளிப்படுத்தல்க ள் சமர்ப்பிக்கப்பட்டிரு க்கவில்லை. | 2021 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2022 பிப்ரவரி 28 வரை சமர்ப்பிக்கப்படாததால், அது தொடர்பான திருத்தங்கள் செய்யப்பட்டன என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. |
| (ஊ) | புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்காக நிதியத்தில் ரூபா 300,000 ஆன நிலையான வைப்பு கணக்கொன்று திறக்கப்பட்டு அதன் மூலம் பெறப்பட்டுகின்ற வட்டி மாதாந்தம் ரூபா 1,500 | நிதிக்கூற்றுக்க ள் சரி செய்யப்பட வேண்டும். | இந்த நிலையான வைப்பு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படுவதற் கு தவறவிடப்பட்டிருந் ததுடன் 2021 ஆம் ஆண்டில் அது சரி | 2021 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2022 பிப்ரவரி 28 வரை சமர்ப்பிக்கப்படாததால், அது தொடர்பான திருத்தங்கள் செய்யப்பட்டன என்பதை உறுதிப்படுத்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகபட்சமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக அவர்களுக்கு 18 வயது பூர்த்தியடையும் வரை செலுத்துமாறு வங்கிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டிற்காக அவ் வைப்புக்களில் ரூபா 26,908 ஆன வட்டியொன்று பெறப்பட்டிருந்ததுடன் அந்த முழுமையான வட்டியும் மாணவருக்கு வங்கியினால் செலுத்தப்பட்டிருந்தது. வங்கிக்கு வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் அம்மாணவர்களுக்காக 2020 ஆம் ஆண்டிற்காக ரூபா 18,000 செலுத்த வேண்டி இருந்த போதிலும், அந்த எல்லை ரூபா 8,908 ஆல் விஞ்சப்பட்டு ரூபா 26,908 செலுத்தப்பட்டிருந்தது. மேலும் நிதியத்தின் பேரில் காணப்படுகின்ற இந்நிலையான வைப்பு நிதியத்தில் சொத்துக்களாக மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ரூபா 26,908 ஆன வருமானமொன்றாக மற்றும் அதில் செய்யப்பட்டிருந்த கொடுப்பனவுகள் செலவொன்றாகவும் 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | | செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இவ் வைப்புக்களின் வட்டி நேரடியாக பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதால் அது சனாதிபதி நிதியத்தின் வட்டி வருமானமாகவும் அதன் பின்னர் புலமைப்பரிசில் உதவித் தொகை செலவாகவும் இனங்காணப் பட்டிருக்கவில்லை. | முடியவில்லை. |
| (எ) | 2020 ஆம் ஆண்டில் வெளிநாட்டு மருத்துவமனையில் ஏற்பட்ட மருத்துவச் செலவுகள் தீர்க்கப்பட்டிருந்தமை நிதியத்தின் செலவினமொன்றாக | நிதிக்கூற்றுக்கள் சரி செய்யப்பட வேண்டும். | இந்த காசோலைகளுக்கான கோவைகளின் நடவடிக்கை பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் | 2022.01.16 ஆந் திகதி இந்த காசோலை செயலாளர், வெளிநாட்டு அலுவல்கள் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்கிடப்பட்டுள்ளதுடன் வழங்கப்பட்டிருந்த ரூபா 6,083,244 ஆன காசோலைகள் 2021 திசெம்பர் 15 வரையில் செயலாளர், வெளிநாட்டு உறவுகள் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இக்காரணத்தினால் 2020 ஆம் ஆண்டின் போது, மருத்துவ உதவிச் செலவுகள் அந்த அளவினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | | காசோலைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஏ) | 1978 இன் 7 ஆம் இலக்க சனாதிபதி நிதியச் சட்டத்தின் பிரகாரம் நிதியத்திற்குச் சொந்தமான நிதி, சபையினால் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின் பிரகாரம் சனாதிபதியின் ஏற்பாடுகளின் கீழ் பயன்படுத்தப்பட முடியுமான போதிலும், 2019 ஒக்டோபரிலிருந்து திசெம்பர் 31 வரை செலவிடப்பட்ட மொத்தம் ரூபா 659,287,255 மற்றும் 2020 சனவரி 01 இலிருந்து 2020 திசெம்பர் 31 வரை செலவிடப்பட்ட மொத்தம் ரூபா 1,889,195,017 என்பவற்றுக்காக 2021 திசெம்பர் 15 வரையில் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருக்க வில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. | 2019 ஒக்தோபர் 01 இலிருந்து 2019 திசெம்பர் 31 வரை மற்றும் 2020 சனவரி 01 இலிருந்து 2020 திசெம்பர் 31 வரை சனாதிபதி நிதியத்தில் செய்யப்பட்டிருந்த அனைத்து கொடுப்பனவுகளும் அதிமேதகு சனாதிபதியின் அங்கீகாரம் பெறப்பட்டு செய்யப்பட்டுள்ளது. 2019.10.18 இன் பின்னர் சனாதிபதி நிதியத்தின் ஆளுனர் சபைக் கூட்டமொன்று நடாத்தப்படாததுடன் நிலவிய கொவிட் தொற்று நிலைமையின் கீழ் ஆளுநர் சபைக் கூட்டம் நடாத்தப்படுவதற் | 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிம் கட்டுப்பாட்டுச் சபை கூடியிராமையால் இந்த செலவினங்கள் சபையினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கான திகதியொன்றை திட்டமிடுவதற்கு சிக்கலாக இருந்தது. எதிர்காலத்தில் நடாத்தப்படுகின்ற ஆளுநர் சபைக் கூட்டத்தில் இக்காலப்பகுதிக்கான அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் உங்களுக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை தெரிவிக்கின்றேன். | |
| (ஐ) | 2021 ஒக்தோபர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் 2020 மார்ச் 12 இலிருந்து 2020 நவம்பர் 11 வரையில் மொத்தம் 11,507,044 ஆன வழங்கப்பட்டும் ஆனால் சமர்ப்பிக்கப்படாத 12 காசோலைகள் காணப்பட்டன. அந்த காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் 2021 ஒக்தோபர் 31 வரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டிற்குள் இக்காசோலைகள் தொடர்பாக நி.பி 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்த வழங்கப்படாத காசோலைகள் சனாதிபதி நிதியத்தின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| (ஒ) | 2018 இன் யூலை 26 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம், நிதியத்தினால் இலங்கை மத்திய வங்கியில் காணப்பட்டு வருகின்ற 51204 | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அதிமேதகு சனாதிபதி அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட விசேட செயற்திட்டங்களுக்கு நிதி | விசேட சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்காக 51204 ஆம் இலக்க கணக்கு நடாத்திச் செல்லப்படுகின்றமையால் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | (46078) ஆம் இலக்க வங்கிக் கணக்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் செயலற்ற நிலையில் பேணப்பட்டு வருவதுடன் அது தொடர்பாக நிதியத்தினால் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | திரட்டுதல் மற்றும் கொடுப்பனவு செய்தல் போன்ற விசேட சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்காக 51204 ஆம் இலக்க கணக்கு பேணப்பட்டு வருகின்றது. | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | 2020 ஆம் ஆண்டில் இதயஅறுவைச் சிகிட்சை, புற்றுநோய் மூளை தொடர்பான நோய்கள், முழங்கால் மற்றும் இடுப்பு நோய்கள், சிறுநீரக நோய் மற்றும் ஏனைய சிகிட்சைகளுக்காக 5407 நோயாளர் மருத்துவ உதவிக்காக விண்ணப்பித்திருந்த போதிலும், 1914 நோயாளர்களுக்கு மட்டுமே மருத்துவ உதவிகள் செலுத்தப்பட்டிருந்தது. முன்னைய வருடத்தில் மருத்துவ உதவிகளாக 6386 நோயாளர்களுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டில் மருத்துவ உதவிகள் செலுத்தப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை 4472 ஆல் அதாவது 70 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. | நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி மருத்துவ உதவி கோரும் நோயாளிகளுக்கு மருத்துவ உதவிகளைப் பெறுவதற்குத் தேவையான நிதி உதவிகளை வழங்குவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக பல சந்தர்ப்பங்களில் அலுவலகம் மூடப்படல் மற்றும் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டில் மருத்துவ உதவிக் கொடுப்பனவுகள் குறைந்த பட்ச ஊழியர்களுடன் அலுவலக நடவடிக்கைகளைப் பேணுவதால் குறைந்துள்ளது. | 2021 ஆம் ஆண்டுக்காக 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால், அது தொடர்பான செயன்முன்னேற்றத்தை சான்றுபடுத்த முடியாதிருந்தது. |
| (ஔ) | மருத்துவ உதவிக் கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்பட்ட நோயாளர்களினால் | மருத்துவ உதவிக் கொடுப்பனவுகள் விரைவு | கோவைகள் தொடர்பான மிகுதி நடவடிக்கைகள் | *மேற்படி* |

| | | |
|---|---|---|
| பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் கோவைகள் தொடர்பான மிகுதி நடவடிக்கைகள் செய்யப்படுவதற்குத் தேவையான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரிகள் தவறியிருந்தமை அல்லது தாமதமானவை மற்றும் கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக 1 வருடம் தொடக்கம் 2 வருடங்கள் 3 மாதங்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் மொத்தம் 3,364,482 ஆன மருத்துவ உதவிகள் 2020 ஆம் ஆண்டின் 23 நோயாளர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | படுத்தப்பட வேண்டும். | செய்யப்படுவதற்காக தேவையான தகவல்கள் அதாவது சம்பள அறிக்கை, வங்கிக் கணக்கு விபரங்கள் போன்றன கோரப்பட்ட சந்தர்ப்பங்களில் அத்தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரிகள் தவறியிருந்தமை அல்லது தாமதமான காரணத்தினால் கொடுப்பனவு நடவடிக்கைகள் தாமதமாகின. அத்துடன் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக பல சந்தர்ப்பங்களில் அலுவலகம் மூடப்பட்டமை மற்றும் குறைந்தளவிலான ஊழியர்களின் மூலம் அலுவலக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை போன்றன இதற்கான காரணங்களாக இருந்தன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (க) | 2020 ஆம் ஆண்டுக்கான மொத்தம் ரூபா 21.25 மில்லியன் ஆன எதிர்பார்க்கப்பட்ட செலவுகளுடன் 09 செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கைக்கெட்டிய முன்னேற்றம் குறிப்பிடப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை 2021 திசெம்பர் 15 வரையில் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் குறிப்பிடப்பட்டு வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும். | சனாதிபதி அலுவலகத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு ள்ளது. | 2022 பெப்ரவரி 28ஆந் திகதி வரையிலும் 2021 ஆம் ஆண்டின் போது சனாதிபதி அலுவலகத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கைக்கு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில் லை. |
| (கா) | 2018 நவம்பர் மாதத்தில் நிதியத்தின் 40 ஆம் வருட நிறைவைக் குறிப்பிடும் வகையில் ஆளுநர் சபையினால் கஷ்டப் பிரதேச மற்றும் குறைந்தளவு வசதிகளைக் கொண்ட தெரிவு செய்யப்பட்ட 12 அரச மருத்துவமனைகளுக்கு ரூபா 437.81 மில்லியன் ஆன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படுவதற்கு 2019 ஒக்தோபர் 11 இல் விசேட செயற்திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. சுகாதார அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 90.71 மில்லியன் பெறுமதியான மருத்துவ உபகரணங்களுக்கான பற்றுச்சீட்டுக்கள் 2020 ஆம் ஆண்டின போது நிதியத்தினால் தீர்க்கப்பட்டிருந்தது. நிதியத்தின் 42 ஆம் வருட | விசேட செயற்திட்டம் விரைவில் செயற்படுத்தப்ப ட வேண்டும். | செயற்திட்டத்தின் முதலாம் கட்டமாக மேற்கொள்ளப்பட் ட ரூபா 90,706,000 ஆன கொடுப்பனவுகள் மற்றும் அதற்கான முன்னேற்றம் எதிர்காலத்தில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள் ள ஆளுநர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு மிகுதி நடவடிக்கைகள் செய்யப்படுவதற்க ாக ஆளுநர் சபையால் அங்கீகாரம் பெறப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகி ன்றது. | 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் கட்டுப்பாட்டுச் சபை கூடியிருக்கவில்லை. |

நிறைவு விழாவும் நெருங்கி விட்ட போதிலும் 2021 திசெம்பர் 15 வரையில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள விசேட செயற்திட்டத்தின் மிகுதி ரூபா 347.1 மில்லியனுக்கான மருத்துவ உபகரணங்கள் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 49. கணக்காய்வு நிறுவனத்தின் பெயர் - இலங்கை மின்சார சபையின் நலன்புரிய நிதியம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 – முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

2019 – முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

2020 – முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வு அபிப்பிராயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட தவிர்ப்பு நடவடிக்கைகள் | அது தொடர்பிலான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | ------------------------------------- | --------------------- | ------------------------ | ---------------------------- |
| (அ) | இலங்கைக் கணக்கீட்டு நியம எண்ணக்கரு சட்டகத்தின் பிரகாரம், அறிக்கையிடும் நிறுவனத்திற்குரிய அனைத்து செலவுகள் மற்றும் சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டு வேண்டும் மற்றும் அறிக்கையிடும் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய நலன்புரி நிதியத்துடன் நேரடியாக தொடர்புடைய ரூபா 42,040,162 செயல்பாட்டுச் செலவு நிதிக்கூற்றுக்களில் அடையாளம் காணப்படவில்லை அல்லது வெளியிடப்படவில்லை. | 2003 டிசம்பர் 31 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை மின்சார சபையின் நலன்புரி நிதிய சட்டத்தின் ஒழுங்குவிதி இல.20(i) இன் பிரகாரம், வீட்டுக்கடன்களை பரிசோதிப்பது தொடர்பான செலவுகள் தவிர்ந்த நிதியின் அனைத்து நிர்வாகச் செலவுகளும் இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்படுவதுடன், இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து (1969 நவம்பர் 01ஆந் திகதியிலிருந்து) இந்தக் கொள்கை | இலங்கைக் கணக்கீட்டு நியம எண்ணக்கரு சட்டகத்தின் பிரகாரம், நிதியத்தின் நிதி அறிக்கைகளில் இந்த செலவுகளை அடையாளம் காண முடியவில்லை. குறைந்த பட்சம், இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்படும் கிரயம் நிதிக்கூற்றுக்களில் வெளியிடப்பட வேண்டும். | இப்பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தலை மீளாய்வு செய்வதற்கு அமைச்சின் கணக்காய்வுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட போதிலும், இலங்கை மின்சார சபையினால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலைத்திருந்தது. மேலும், இந்த விடயத்தை இலங்கை மின்சார சபையின் நலன்புரி நிதியத்திற்கு வழங்கிய பின்னர் (வர்த்தமானி அறிவித்தலின் மூலம் நிறுவப்பட்ட நிர்வாக நிறுவனம்), 2021 பெப்ரவரி 11 அன்று நடைபெற்ற குழுக் கூட்டத்தில், நிதியத்தின் முகாமைத்துவ மற்றும் நிர்வாகச் செலவினங்களை சபையால் மேற்கொள்ளும் தற்போதைய நடைமுறையானது எதிர்காலத்திலும் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | பாதுகாப் நடைமுறையொன்றாக கணக்கீட்டு கட்டமைப்பிற்காக கடவுச்சொல் பயன்பாடு நிறுவப்பட்டிராததுடன், நிதியத்தின் ஆரம்பம் முதல் கணக்கீட்டு தகவல்களின் காப்புப் பிரதியொன்றினையும் பேணியிருக்கவில்லை. ஆதன் காரணமாக கணக்கீட்டு நடைமுறையின் தரவுகளின் | நிதியத்தின் மற்றும் செயற்திட்டங்களின் செயற்பாடுகளுக்கு உரிய பாதுகாப்பு மற்றும் காப்புப் பிரதி வசதிகளுடனான தகவல் முகாமைத்துவக் | தற்போதைய கட்டமைப்பு மற்றும் புதிய கட்டமைப்பிற்காக போதிய பாதுகாப்பு நடைமுறைகள் ஈடுபடுத்தப்பட வேண்டியதுடன், கட்டமைப்பின் காப்புப் | தற்போதைய கட்டமைப்புடன் இணைந்ததாக புதிய முகாமைத்துவ தகவல் கட்டமைப்பொன்று செயற்படுத்தப்பட்டவாறு உள்ளது. எனினும், தற்போதைய கட்டமைப்பினுள் பாதுகாப்பு நடைமுறைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளமை அவதானிக்கப்பட்டது. | கட்டமைப்பொன்றை (MIS) நிறுவுவதற்காக 2021 சனவரி 15 இல் பெறுகை செயன்முறை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டங்கள் 2021 யூலை 8 ஆந் திகதி Ms. Management System (Pvt) Ltd கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அது செயற்படுத்தப்பட்டவாறு உள்ளதுடன், 2022 சனவரி மாதம் முதல் (03) மாதங்களில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. | பிரதியொன்று பேனப்பட வேண்டும் என்பது. | ஏற்படுத்தப்படவில்லை. |
| (இ) | 2017.12.31 அன்று முதலீட்டில் இருந்து பெற வேண்டிய தொகையான ரூபா 2,157,483,000 தொகையானது, அந்த நிதிக் கருவிகளின் இருப்பு மற்றும் என்ட்ரஸ்ட் செக்யூரிட்டீஸ் பிஎல்சியிடம் இருந்து உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்ளாமை ஆகியவற்றால் மீளப் பெறுவதில் சந்தேகமாக இருக்கும் பணத் தொகைக்கான சீராக்கங்களோ அல்லது மதிப்பைக் குறைப்பதற்கான ஏற்பாடுகளோ | இலங்கை மின்சார சபையினால் என்ட்ரஸ்ட் செக்யூரிட்டீஸ் பிஎல்சி கம்பனிக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் DMR/1405/2018 என்ற வழக்கின் கீழ் சிவில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த | இது தொடர்பாக ஏற்பாடு செய்ய வேண்டும். | இது தொடர்பாக தொடங்கப்பட்ட வழக்கின் முன் விசாரணையை 2022 மார்ச் 22 மற்றும் 2022 ஆகஸ்ட் 01 அன்று நடத்த திட்டமிடப்பட்டது மற்றும் நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்கள் செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை. | முதலீட்டிற்கான முகமதிப்பு மற்றும் திருப்பிச் செலுத்தப்படாத கூப்பன் வட்டிகளை மீட்டெடுப்பதற்கு முன் விசாரணைக்கு திட்டமிடப்பட்டது. வழக்கின் அடுத்த விசாரணை 2022 மார்ச் 10 அன்று நடைபெறவுள்ளது. மேலும், நிதியத்தின் வருடாந்த வருமான அறிக்கையின் மூலம் இந்த முதலீட்டு ஏற்பாடுகளில் மேற்கொள்ளப்படும் ஒரு குறிப்பிட்ட அழிவுநட்டத்திற்கு எதிராக ஒரு முதலீட்டு ஒதுக்கமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. 2020 டிசம்பர் 31 ஆந் திகதியளவில் அந்த ஒதுக்கம் ரூபா 1,865,333,129 ஆக இருந்தது. | | |
| (ஈ) | **நலன்புரி நிதியத்தின் ஒழுங்குவிதி - ஒழுங்குவிதி 4 - வருவாய்** அந்த ஏற்பாட்டிற்கு மாறாக, இலங்கை மின்சார சபையினால் நிதியத்திற்கு ஊழியர் பங்களிப்பைக் | நலன்புரிய நிதியத்தின் பங்களிப்பினை கணிப்பிடும் போது, தனிநபர் சுற்றறிக்கை இலக்கம்: | வர்த்தமானியின் ஒழுங்குவிதி இலக்கம் 04 இன் கீழான ஈட்டங்கள் மாத்திரம் ஈட்டங்களை | ஒழுங்குவிதி இலக்கம் 04 இன் பிரகாரம் உள்ளடக்க முடியாத படிகள் உள்ளடக்கப்பட்டு பங்களிப்பு கணிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| கணக்கிடும் போது, வெளியேறும் கொடுப்பனவு, முதுகலை கொடுப்பனவு, நிபுணத்துவ கொடுப்பனவு ∴ பகுதியளவு தொழில்சார் கொடுப்பனவு ஆகியவற்றின் கொடுப்பனவுகளில் மிக உயர்ந்த கொடுப்பனவு கருத்திற்கொள்ளப்பட்டிரு ந்தது. | DMG/Policy/Policy மற்றும் 2007 ஒக்தோபர் 23 ஆந் திகதிய சுற்றிக்கையின் பிரகாரம் திரண்ட சம்பளத்திற்கு மேலிதிகமாக உயர்வான கொடுப்பனவு (வெளிச்செல்லல் படிகள், பட்டப்பின் படிப்பு படிகள், தொழில்சார் படிகள் மற்றும் பகுதியளவு தொழில்சார் படிகளிடையே) கருத்திற்கொள்ள ப்பட்டுள் ளமை. | கணிப்பீடு செய்ய ஈடுபடுத்த வேண்டும் என்பது. | |
| **நலன்புரி நிதியத்தின் ஒழுங்குவிதி - ஒழுங்குவிதி 22 – அங்கத்துவ பங்கிலாபம்** கொடுப்பனவு நடைமுறைகளுக்கு முரணாக, அங்கத்தவர்களுக்கு பங்கிலாபம் செலுத்தும் போது, கடந்த வருடத்தின் இறுதியில் நிலவிய உறுப்பினர்களின் கடன் நிலுவைக்கு பதிலாக ஈவுத்தொகை கணக்கிடப்பட்ட பிறகு ஆண்டின் இறுதியில் நிலவிய அங்கத்தவர்களின் கடன் மீதியின் அடிப்படையில் பங்கிலாபம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த விதிகளுக்கு மாறாக, சில செலவுகள் மற்றும் இருப்புகளுக்கான ஒதுக்கீடுகளை ஒதுக்கீடு | உறுப்பினர் ஓய்வு பெற்ற முந்தைய ஆண்டின் பங்களிப்பிற்காக ஈவுத்தொகை சேர்க்கப்படவில்லை, எனவே, இது எண்.22 விதியின் அறிவுறுத்தல்களுக்கு இணங்குகிறது.<br><br>ஈவுத்தொகைகளின் கணிப்பீடு மற்றும் ஒதுக்கீடுகள் மேற்கொண்ட பின்னர் நிதியத்திற்கு | உழியர் நலன்புரி நிதியத்தின் பிரமாண இலக்கம் 22 இன் பிரகாரம் அங்கத்துவ ஈவுத்தொகை செலுத்த வேண்டும் என்பது.<br><br>சில செலவினங்கள் மற்றும் ஒதுக்கங்களுக்காக நிதியேற்பாடு மேற்கொண்ட பின்னரான வருமானத்தை | பிரமாண இலக்கம் 22 இன் பிரகாரம் அங்கத்துவ ஈவுத்தொகை தீர்மானிக்கப்படவில்லை.<br><br>ஒதுக்கங்களுக்கு நிதியேற்பாட்டினை மேற்கொள்ள முன்னரான வருமானத்தை அடிப்படையாக கொண்டு ஈவுத்தொகை தீர்மானிக்கப்படும். |

| | | |
|---|---|---|
| செய்வதற்கு முன்பிருந்த வருமானத்தின் அடிப்படையில் ஈவுத்தொகை கணக்கிடப்பட்டது. | அறவிடப்பட வேண்டிய செலவினங்களை கழித்த பின்னர் உரிய முறையில் மேற்கொள்ளப்படும். | அடிப்படையாக கொண்டு ஈடுத்தொகை கணிப்பிடப்பட வேண்டும். |